962

புதுமை

ஆசிரியர் : கோசல்ராம்

JL
m 2111, NS7PI
NS8.2.8
197700

25 காசு

PUTHUMAI மார்ச் 1. 1959

உலகப் பிரசித்திப் பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் - பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்
பென்ஸ் தயாரிப்பு



மாடல் LP 312/48—5 டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.
பஸ் சொந்தக்காரர்ளுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும் உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க
தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.
மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் பிரைவேட் லிமிடெட்,
5, ஸ்காட் ரோடு : : மதுரை.

இரண்டு பெரிய நன்மைகள்

மெட்ரிக் முறை எடைகள் அளவுகளை நாம் மேற்கொள்ளுவது நமக்கு இரண்டு முக்கியமான வழிகளில் நன்மையாக முடிகிறது. உள்நாட்டில் பல பல (எடை–அளவு) முறைகளிருந்ததால் ஏற்பட்டு வந்த குழப்பங்களும் இழப்புகளும் அறவே நீங்கும்.



அதேசமயத்தில உலக முழுவதிலும் நிலை பெற்றுள்ள ஒரு திட்டத்தை நாமும் மேற்கொண்டவர்களாகிறோம். மெட்ரிக் முறையானது உலகம் முழுவதுமே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு பெரிய நன்மைகளையும் அடைவதற்கு முதற்படியாக மெட்ரிக் எடை முறையை ஏற்கனவே மேற்கொண்டிருக்கிறோம். இராஜ்யங்களின தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளிலும் தொழில் துறைகளிலும் மெடரிக் எடைகளை அமுலாக்கியிருக்கிறோம்.

மெட்ரிக் முறை

சுலபமானது ஒரே சீரானது

DA 58/433

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

தயாரிப்பாளர் :—

அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலே,
பெரம்பூர், சென்னே.

கிடைக்குமிடம் :—

தொழில் இலாகா விற்பனே நிலேயம்,
166-A, மவுண்ட் ரோட், சென்னே-2.



பார்சலை குழந்தை போல்
அணைத்துச் செல்வோம்

எந்த லாரியும் சாமான்களைச் சுமந்து செல்லும். ஆனால் டி. வி. எஸ். லாரி தான் குறிப்பிட்ட நேரத்திற்கும், பாதுகாப்பிற்கும் பெயர் போன்றது. பதினான்கு வருட முதிர்ந்த தேர்ச்சியில் பண்படைந்த 2750 (எமது) சிப்பந்திகள் உங்கள் சாமான்களை கவனித்து காப்பாற்றிச் செல்கிறார்கள். லாரி செல்லும் இடங்களில், இடவசதிக்கு ஏற்றுப்போல், நமது பண்டக சாலைகள் உங்கள் சாமான்களை பாதுகாக்கின்றன.

ஸதர்ன் ரோட்வேஸ்
ப்ரைவேட் லிமிடெட், மதுரை

TVS-SR 6779

சிறந்தோர்
அணியும்
பாத அணிகள்
• சௌகரியத்தன்மை
• இயற்கையான மிதி அடி
• அழகு
• நீடித்த உழைப்பு
ஆகிய காரணங்களுக்காக
அரசினர் பாத அணி
நிலையம்,
பெரம்பூர், மதராஸ்
கிடைக்குமிடம்:—
தொழில் இலாகா விற்பனை
நிலையம்,
166-A, மவுண்ட் ரோட்,
சென்னை-2.
Sista's MF-4

பொருளடக்கம்

ஆசிரியர் : கோசல்ராம் M.L.C.,

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்குவோம்"

மணி 2 | மார்ச் 1959 | ஓசை 8

அரசியல் : பக்கம்

அறிஞரின் எதிர்ப்பு! (கார்ட்டூன்) ... 6
கூட்டுப்பண்ணை குழப்பமானதா? ... 7
கன்னியாகுமரியின் கண்ணீர் ... 10
கொள்முதல் நாடகம்! ... 11
சொக்கத்தங்கம் சொக்கலிங்கம்! ... 12
உலக அரசியல் (கார்ட்டூன் கதிர்) ... 14

தொடர் கதைகள்:

விடிவெள்ளி! வல்லிக்கண்ணன் ... 33
பிறப்பும், வளர்ப்பும் ஆரெஸ்ஸஸ் ... 57

கதைகள்:

தீபம் அணைந்தது ஷேரலி ... 45
பொய்யும், மெய்யும் டி. எம். வாசுதேவன் ... 65
ஞானத்தங்கமே தங்கம்! ஜியாவுடீன் ... 69
வெற்றி யாருக்கு
எஸ். லட்சுமி சுப்பிரமணியம் ... 75
போருக்குப் போகவில்லை புதல்வி ... 81
பொம்மைக்கல்யாணி கோ.வி.மணிசேகரன் ... 85
ரஞ்சினியின் வஞ்சம் விமலாரமணி ... 89

கட்டுரைகள் :

நமக்கு வடக்கே 13
இவர்தான் இந்திரா காந்தி-ஏழைபங்காளன் ... 19
நாமும், நாளையும் ஜெயன் ... 20
புவனேஸ்வரத்தில் 'பென்' விழா!
கன்னிக்கண்ணன் ... 23
சந்திரனில் மனிதன் 26
பழரசம் திருமால் ... 54

கவிதை :

புழு புனலன் ... 22

'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

ராதா

அறிஞரின் எதிர்ப்பு!

[சென்னை சட்டசபையில், 'ஆபாச விளம்பரத் தடை மசோதா' விவாதிக்கப்படுகையில், திரு. அண்ணாத்துரை வெளிநடப்புச் செய்து கடும் எதிர்ப்புக் காட்டினார்.]

புதுமை

கூட்டுப்பண்ணை குழப்பமானதா ?

கூட்டுப்பண்ணை முறை பற்றிய விவாதம் நாளுக்குநாள் சூடு பிடித்துக் கொண்டு வருகிறது. ஆதரிப்போர் அறிக்கைகளும், எதிர்ப்போரின் வாதங்களும் செய்தித் தாள்களில் பெருமிடத்தைப் பிடித்துக்கொண்டுள்ளன.

இத்தகைய விழிப்பை ஏற்படுத்திவிட்டது, நாகபுரித்தீர்மானம். மக்களைச்சிந்திக்கத்தூண்டும் வழிக்கு அழைத்துச்சென்றிருப்பது அத்தீர்மானத்தின் முதல் வெற்றி.

கூட்டுப் பண்ணையை எதிர்ப்போர் வாதங்கள் எல்லாமே சிறந்தவை அல்ல; சிலர் உண்மையிலேயே கவலையோடு, நாட்டு நலனில் அக்கரையோடு பேசும்பொழுது, சிலர் வழக்கம்போல 'இந்த அரசாங்கம் செய்யும் எதையும் எதிர்ப்பது' என்ற அவர்களுக்கே சொந்தமான குறுகிய கண்ணோட்டத்தோடு, ஒரு சாராரின் ஏகபோக உரிமைக்காக வாதாடுவதைக் கண்டுதான் நாம் வருந்துகிறோம். குறுகிய கண்ணோட்டத்தோடு, எதையாவது சொல்லி எதிர்ப்பது என்ற தாழ்ந்த மனப்பண்போடு, எதையும் எதிர்க்கத் தமிழ்நாட்டில் ஒரு கூட்டம்.

பொதுமக்கள் மனத்தில் இந்தப் பிற்போக்காளர்கள் 'குட்டையைக் குழப்பும் பணி'யைச் செய்து வருகிறார்கள். தெளிவான நிலவைக் கருப்புக் கண்ணாடி மூலம் பார்த்துக்கொண்டு, 'ஐயோ! நிலவு கருப்பாக இருக்கிறதே! இதற்குக் காங்கிரஸ்காரர்கள்தான் பொறுப்பு!' என்று வெறுப்போடு பேசுகிறார்கள்!

கூட்டுப்பண்ணை முறை, கூட்டுறவு விவசாயம்—ஏன்? அதிலே இவர்கள் சொல்லும் குழப்பம் உண்டா? என்று ஆராயவே இத்தலையங்கம்.

* * *

நாம் பலமுறை இந்தப் பகுதியில் வலியுறுத்தி வந்த சில உண்மைகளை மீண்டும் கூறி மேலே தொடருவோம்.

நிலச் சீர்திருத்தம், காங்கிரஸின் கருத்திலே இன்று புதிதாக உதித்ததல்ல. நாட்டு மக்களின் நலனைப் பேணத் திட்டமிட்டு, விடுதலைக்கு பல காலம் முன்பாகவே இச்சீர்திருத்தங்களைப் பற்றிச் சிந்தித்து வந்த ஸ்தாபனம் காங்கிரஸ். இதை முதலாவதாக மறக்கக்கூடாது.

இரண்டாவதாக, விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்ட இந்த மாபெரும் நாட்டில் நிலச் சீர்திருத்தம், நடைமுறைக் குறைபாடுகளைக் களைய ஒரே வழி. இதைக் காங்கிரஸ் செய்யத் தவறினால் வேறு அடுத்த கட்சியாவது செய்தே முடிக்கும். எனவே தேர்தலுக்காக நடத்தப்படும் 'ஸ்டன்ட்' அல்ல; மாறாக தேச நலனுக்காக நடக்கும் போராட்டம் இச்சீர்திருத்தங்கள்.

இன்று தாக்கி எழுதும் ராஜாஜிதான் தஞ்சாவூரில் முதல் முதலில் 50% – 50% திட்டத்தை அவசரச் சட்ட மூலம் கொண்டு வந்தாரென்பதை இதற்குள் மக்கள் மறந்திருப்பார்களெனவும் நினைக்கமுடியாது. இவற்றை, இந்த அசைக்க முடியாத உண்மைகளைத் திரித்துக் கூறுவோர் தேச நலனுக்கு விரோதமாக நடப்பவர்கள்; வரலாறு, எதிர்காலப் பரம்பரை மூலமாக அவர்களைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தும். ஆயுள் முடிந்துவிட்டாலும்கூட, அவர்களது விசாரணையை நடத்துவார்கள்; ஆலிவர் கிராம்வெல் இறந்த பிறகு அவனது எலும்புக்கூட்டைத் தோண்டி எடுத்து, 'வெஸ்ட் மினிஸ்டர் அபே'யில் இருந்து அப்புறப்படுத்தினார்கள் இங்கிலாந்து மக்கள்! இதை மறக்கக்கூடாது, மக்கள் சக்திக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்பவர்கள்!

மூன்றாவதாக—காங்கிரஸ், விவசாயியின் உரிமையைப் பறிக்கும் 'கம்யூன்' முறையை, கம்யூனிஸ வழியை, சீனத்துப் பாதையை, இரஷ்யாவின் வழியை ஒரு நாளும் கனவிலும் சிந்திக்கவில்லை. 'தனி நபர், தனி விவசாயி அரசாங்கத்துக்கு அடிமையாவான்; நாளடைவில் இது நம்மையும்மீறி ஏற்படும்' என்று கூறுவது வீண் அச்சத்தின் விளைவாக விவேகத்தை இழந்துவிட்டோரின் சந்தேகச் சொற்கள் தான். காங்கிரஸும், காந்தியின் நாடும், தனிநபர் உரிமைக்கு விரோதமாக என்றும் செல்லப் போவதில்லை.

* * *

இவ்வளவு பரபரப்பைக்கிளப்பியுள்ள கூட்டுப்பண்ணை முறையின் அவசியமும், அதன் விளக்கத்தையும் சரியாகப் பொது மக்களுக்கு யாரும் இது வரை படம் பிடித்துக் காட்டப்படவில்லை.

நமது நாட்டில் பெரு நிலச்சுவான்தார்கள் மிகக் குறைவு. நில உடைமை உச்சவரம்பின் மூலமாக, நியாயமான நஷ்டஈட்டுத் தொகை அளிக்கப்பட்டு இச்சிறுபான்மையினரின் நிலங்கள் எடுத்துக்கொள்ளப்படும். இச்சிறுபான்மையினர் மிகுந்த அறிவும், ஊக்கமும் படைத்தவர்கள். நிலத்தில் இவர்கள் கவனம் செலுத்தாது, சுமைகளாக இருந்தவர்கள். எங்கோ கண்காணாத இடத்தில் இருந்து விவசாயத்தைக் கண்காணித்து வந்தவர்கள். அவர்கள் ஒரு பகுதி நில உரிமையை இழக்கும் பொழுது தொழில் துறையில் கவனம் செலுத்துவார்கள். தொழில் வளம் பெருகும். இத்துறைக்கு வரும் நிலச்சுவான்களை துவக்கும் சிறிய பெரிய தொழில்கள் வளம்பெற சர்க்கார் தனியார் போடும் மூலதனத்தில் 80 பங்கு கொடுத்து வருவதால் தொழில் வளம்பெருகி வேலையில்லாத்திண்டாட்டம் ஒழியும. இது நிலச் சீர்திருத்தத்தின் ஓர் அடிப்படைக்காரணம். திட்டக் குழு கூறியுள்ள விளக்கங்களிலும் ஒன்று.

இந்த உண்மை, நிதரிசனமாக ஜமீன்கள் ஒழிக்கப்பட்டபிறகு ஆந்திராவில் ஜமீன்தார்கள் துவக்கியுள்ள புதிய தொழில்களால் கருத்து வேறுபாட்டிற்கு இடமின்றி, ஆணித்தரமாக நிரூபிக்கப் பட்டுள்ளது.

உண்மையில் சிறு நிலச்சுவான் தார்களுக்கு கூட்டுப்பண்ணை முறை, ஒரு மறைமுக வரப்பிரசாதம். அவர்களும் கூட்டுறவுப் பண்ணைகளில், அங்கத்தினர்களாகலாம். விளைவைப் பெருக்க அரசாங்கம் ஏராளமாகக் கடன் தொகைகள் வழங்கப் போகிறது; புதிய முறைகளைப் புகுத்தப் போகிறது. அதன் விளைவாகவும், விவசாயியின் புதிய உற்சாகமான உழைப்பின் பலனாகவும், விளைவு பெருகும். பண்ணையின் உறுப்பினரான, பழைய சிறு நிலச்சுவான் தாரரும், 60:40 என்ற நியாயவார அடிப்படையைவிட அநேகமாக அதிகமாகவே தன் பங்கைப் பெறுவார். இவ்வாறு கூட்டுறவுப் பண்ணை, அவருக்கு ஓர் மறைமுக வரப்பிரசாதமாக விளங்கும்.

* * *

இதற்கு உதாரணமாக நெல்லை ஜில்லாவில், வாசுதேவ நல்லூரிலும் செங்குளத்திலும் இரண்டு கூட்டுறவுப் பண்ணைகள் ஆரம்பித்து வேலை செய்வதைக் குறிப்பிடலாம். ஒவ்வொரு கூட்டுறவு பண்ணைக்கும் ரூ. 30,000 வீதம் சர்க்கார் கொடுத்து பணமில்லாமல் உற்பத்தியைப் பெருக்க முடியாத உழவனுக்கு ஊக்கமளித்திருக்கிறது.

இன்னும் சிலருக்குக் கூட்டுறவு முறையிலேயே சந்தேகம். 'கூட்டுறவே சிறந்தது; கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற சிந்தாந்தங்களிலேயே ஐயப்பாடு.

அதற்கு ஓரளவு நியாயமும் உண்டு. நமது கண் முன்னலேயே கூட்டுறவு, சிலரது குடும்ப உயர்வாக இருப்பதை, சில குறிப்பிட்ட இனங்களின் கைகளிலே சிக்கிக் கொண்டு அந்த இயக்கம் மூச்சுத் திணறுவதை நாம் பார்க்கிறோம்.

(சென்னை மேல்சபையில் இதை வலியுறுத்தி நாம் பேசியபொழுது, காலஞ்சென்ற தலைவர் திரு. சத்தியமூர்த்தியின் பொன் மொழிகளை நினைவூட்டி இக்குறைபாடுகளைக் களைய வற்புறுத்தியது வாசகர்கள் நினைவிலிருக்கலாம்.)

'கூட்டுறவுச் சட்டங்களைக் குறுகிய காலத்தில் நல்லமுறையில் சீராக்குவேன்' என்று அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் உறுதி அளித்து இருப்பதும், பொதுமக்கள், தொழிலாளர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான, கூட்டுறவு இயக்கத்தில் பற்றி உள்ள 'தீண்டாமை' நோயைத் தீர்க்கும் வகையில் திரு. பாலசுந்தரத்தை உயர்தர அதிகாரியாக அரசாங்கம் நியமித்திருப்பதும், நல்ல அறிகுறிகள். இதை உணர்ந்தும் சுயநல நோக்கங்களுக்காக எதிர்ப்பவர்களைப் பற்றி நாம் பயப்படவில்லை.

இதைத் தொடர்ந்து, கூட்டுறவை உண்மையிலேயே நாட்டுயர்வுக்கான நல்ல பாதையாக சீர் திருத்திச் செப்பனிட அரசாங்கம் முனையும் என்று நம்புவோமாக!

காங்கிரஸின் ஆணைகளை செயல்படுத்தும் மந்திரிகள் இதில் முழு நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க வேண்டும். தாங்கள் வக்கீல்கள் என்பதை மறந்து கட்சியின் கட்டளையை நிறைவேற்றும்நிர்வாகி எனச் செயல்பட்டால் இதில் சிறு நிலச்சுவான் தார்களும் நிலத்தை உழுகின்ற உழவனும் செம்மை அடைவார்கள் என்பது நிச்சயம்.

* * *

கூட்டுப்பண்ணைமுறை தவிர்க்க முடியாதது; குழப்பமேதுமதில்லை; அது தேர்தல் 'ஸ்டண்ட்' அல்ல; தேர்ந்து, செயலாக்கப்படும் தேவையான மாற்றம். அதை எதிர்க்க முனைவோரின் முனை மழுங்கிய வாதங்கள், அதை எய்தவரையே திருப்பித் தாக்கும் 'பூமராங்கு'களாக வரலாற்றால் மாற்றப்படும் என்ற எச்சரிக்கையோடு இத்தலையங்கத்தை முடிக்கிறோம்!

கன்னியாகுமரியின் கண்ணீர்!

'நீலத் திரை கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும்' தமிழகத் தென்னெல்லைக் காவல் தெய்வம் கன்னியா குமரி கண்ணீர் வடிக்கிருள், சென்னை அரசாங்கத்தின் அலட்சியப் போக்கைக் கண்டு!

'தாய்த்தமிழகத்தோடு சேர்ந்து ஆண்டுகள் சில கடந்தும், எனது மடியிலே தவழும் மக்களின் குறைகள் தீர்ந்தபாடில்லையே?' என்று கேள்விக் குறி காட்டுகிறது அவளது திருமுகம்!

"சிறு அணைகள், சிறு தொழில்கள், புதுச் சாலைகள், புதிய மருத்துவ மனைகள் எல்லாம் நாங்கள் அமைக்கவில்லையா, இந்தச் சில ஆண்டுகளில்! நீண்ட நாட்களாக ஒடுக்கப்பட்ட, போராட்டத்தில் தளர்ந்த சகோதரர்கள் என்று குமரி மாவட்டத் தமிழர்களுக்குச் சலுகைகள் பல செய்தோம்?' என்று மாநில மந்திரிகள் மறுப்புக் கூறலாம்.

"உண்மைதான்; ஆனால் குமரி மாவட்டம் அரசாங்க ஊழியர்களின் சேவையை இன்னும் ஏன் இங்கே சேர்த்துக் கணக்கிட வழிவகை செய்யவில்லை? 1956-லேயே சென்னை என். ஜி. ஒ. விற்குத் தரப்பட்ட அலவன்ஸ் உயர்வாகிய ரூ. 12% இன்னும் ஏன் குமரி மாவட்ட என். ஜி. ஒ.விற்கு அளிக்கப்படவில்லை? பிற மாவட்ட ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் அடிப்படை ஊதியம் ரூ. 45/- என்றால் குமரி மாவட்ட ஆசிரியருக்கு ரூ. 30/-தான் என்று 3500 ஆசிரியர்கள் கண்ணீர் வடிக்கும் இந்த வேறுபாட்டை ஏன் போக்கவில்லை? என்று கூறுது கூறுகிருள் குமரித் தெய்வம். கூறிக் கூறிக் கொதித்து நிற்கிருர்கள் குமரி மாவட்டத் தமிழர்கள்.

இக்கொதிப்பை ஆற்றும் கடமையை மாநில அமைச்சர்கள் தாங்குகிருர்கள். மேலே கூறிய அத்தனை நல்லகாரியங்களையும் கெடுத்து பிரசாரம் செய்ய இச்சிறிய காரியத்தை செய்யாமல் ஒரு இலாக்கா இருப்பதின் காரணம் நமக்கு புதிராக இருக்கிறது. என்றாலும் அவர்களுக்கு இதை நினைவூட்டுவது நம் கடமை அல்லவா?

* * *

கன்னியா குமரியின் கண்ணீருக்கு வேறு ஓர் காரணமும் உண்டு.

மொழிவழிப் பிரிவினை நடந்த காலத்தில், சில அதிகாரிகள், பொறுப்பான தலைவர்களென கூறிக் கொள்பவர்களின் கவனக் குறைவால் கன்னியா குமரி மாவட்டத்தின் பகுதியான செங்கோட்டையைச் சார்ந்த சுமார் 14 ச. மைல் பரப்பும், பல வற்று புனலார், அச்சங்கோயில் ஆறுகளின் உற்பத்தி ஸ்தானமுமாகிய வளம் கொழிக்கும் காடுகள் கேரளத்துக்குச்சென்று விட்டன. இதைப் பொது மக்கள் அறியாவிட்டாலும், பொறுப்புள்ளவர்கள் பிறகு புரிந்து கொண்டார்கள்.

முதல் அமைச்சர் திரு. காமராஜ் தனது சர்க்காரில் சிலரின் கவனக் குறைவினல் இத்தவறு நடந்துவிட்டதென்றும் அச்சங்கோவில் கிராமத்தையும், நதிகளையும் சென்னைக்கு தர வேண்டுமென எழுதினர். பின் 'பாராளு மன்ற உறுப்பினர் டாக்டர் சுப்பராயன், உள்நாட்டமைச்சர் திரு. பந்திடம் இதைக்கூறியபொழுது, 'இப்பிரச்னையை புனராலோசிக்கலாம்' என்று அவர் கூறியும்,சென்னை அரசியலார் இது குறித்து வாய்மூடி நிற்பது ஏன்? (மேல்சபையில் இது குறித்து நாம் அரசாங்கத்தின்மீது குற்றம்சாட்டி பேசியதற்கு அரசாங்கம் பதில் கூறுதது வியப்பைக் கொடுக்கிறது)

இப்பறிபோன பகுதியைப் பார்வையிட்ட அமைச்சர், திரு. பக்தவத்சலம் அது குறித்து கண்ணீர் வடித்தவர், நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதோடு, குமரி மாவட்டப் பிற பகுதிகளில் காடுகளில் சுள்ளியைப்பொறுக்கி அதன்மூலமே கொள்ளிப்பசி நோய்க்கு தினம் 5, 6 அணுக்கள் சம்பாதிக்கிறவர்களுக்குத் தடைபோடக் கிளம்புவதுதான் ஆச்சரியமாக உள்ளது. 'பவுன் செலவழிப்பதில் முட்டாள் தனம்; பென்னிக்குச் சிக்கனம்!' என்ற கதையாக இது இருக்கிறதே!

'பறிபோன காட்டுப் பிரச்னைக்கு உயிர்கொடுக்கப்பாருங்கள்; பாழ்பட்ட ஏழை வாழ்வின் கடைசி ஆதாரத்தையும் வெட்ட முயற்சிக்காதீர்கள்!' என்று குமரித் தெய்வம் நெஞ்சு குமுறிக் கண்ணீர் வடிக்கிருள்!

கொள் முதல் நாடகம்!

சென்னை அரசாங்கத்தினர் துவங்கி உள்ள நெல் கொள்முதல் திட்டம், கேலிக்கூத்தாக ஆகிவருவதைக்கண்டு மிகவும் வருந்துகிறோம்.

சரியாகத் திட்டமிட்டுச்செயல்புரிந்து வந்திருந்தால் சில குழப்பங்களைத் தவிர்த்து இருக்கலாம். அதை விட்டு விட்டு, இலட்சக்கணக்கான டன்கள் கொள்முதல் என்று அறிவித்து, ஆயிரக்கணக்கான சர்க்கார் ஊழியர் களை அதில் ஈடுபடுத்தி, விசேட அதி காரிகளை நியமித்து, 6,000 டன்னே கொள்முதல் என்று அறிவித்தால் அதை 'நாடகம்!' என்று அழைப்பது பொருத்தமல்லவா?

இக்கொள்முதல் கொள்கையால் விவசாயியும் பயனடையவில்லை; பொது மக்களும் பலன்பெறவில்லை. விலை நிர் ணயமும், சர்க்கார் தலையீடும் பெரும் வியாபாரிகளுக்கே பலனளித்து வரு கின்றன.

இந்நிலையில் கேரளா, தென்மண்டல உறுப்பினர் என்ற முறையில் தஞ்சை போன்ற உபரி மாவட்டங்களில் வெகு தீவிரமாகக் கொள்முதல் செய்து ஆயி ரக்கணக்கான டன்களை அள்ளிச் சென்று வருகிறது!

இதன் விளைவு மிகப் பயங்கரமான பற்றுக்குறையிலும், விலைவாசி உயர்வி லும், பஞ்ச நிலைமையிலும், பொதுமக்க ளுக்குத் தொல்லைகளிலும் முடியும் என் றும், கேரளாவிற்கு அரிசியும், நெல்லும் அள்ளிச் செல்லப்படுவதைப் பூரணமா கத் தடுத்தாலொழிய இந்நெருக்கடி நிலையைத்தவிர்க்க முடியாது என்பதை யும் சமீபத்தில் நடந்த சட்டமன்றத்தில் அங்கத்தினர்கள் ஆணித்தரமாக எடுத் துரைத்தார்கள்.

வரப்போகும் மோசமான நிலையை எதிர்பார்த்து மத்திய அமைச்சரவை யில் மிக்க செல்வாக்குள்ள சென்னை நகரப் பாராளுமன்ற உறுப்பினர் பிரத மர் நேருவைக் கண்டு பத்து நாட்க ளுக்கு முன்பாகப் பேசிய பொழுது, அவர் 'இத்தடை அவசியமே!' என ஒப்புக்கொண்டதாக அறிகின்றோம்!

பாரதப்பிரதமர் நேரு உண்மையான ஜனநாயகவாதி என்பதையும் பொது மக்கள் கருத்துக்கு உடனே பணிபவர் என்பதையும் நாம் பல முறை எழுதி யுள்ளோம். ஆனால் நமது சர்க்கார் துணிச்சலாக இதை எடுத்துக் கூறாத குறையையும் நாம் கண்டித்திருக் கிறோம்.

நிலைமை இவ்வளவு விபரீதமாக இருக்கையில், சென்னை நிதி மந்திரி பிரதமரைக்கண்டு விஷயத்தைத் தெளி வாக்கியபின் மற்ற மந்திரிகளைப்போல் வரட்டுவாதம் செய்யாமல் பாரதப் பிர தமர் ஏற்கனவே தான் சென்னைப் பிர முகரிடம் ஒப்புக் கொண்டபடி ஸ்ரீ சுப்பிரமணியத்திடம் உடனடியாகத் தடை விதிக்க அனுமதிகொடுத்ததைப் பாராட்டுகிறோம். ஸ்ரீ சுப்பிரமணியம் எப்பொழுதும் போன்று தன் திற மையைத் தக்க சமயத்தில் காட்டியதை யும் பாராட்டுகிறோம்.

ஓரளவு காலங்கடந்தபின் இத்தடை யை விதிக்கிறார்கள். இதற்குள் ஏராள மான நெல் கேரளாவுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது. மீண்டும் மீண்டும் மாகாணத்துக்குள் சிலதடைகள் இருப் பதும் விரும்பத்தக்கதல்ல. விலைக் கட்டுப்பாடு விஷயத்தில் இப்போதைய முறை சரியல்ல என்பதையும் நாம் எடுத்துக் காட்டியுள்ளோம். வாங்குப வர்களுக்கு என்ன விலைக்கு கிடைக்க வேண்டும் என்பதை நிர்ணயித்துப் பற் றுக்குறைக்கு வெளியிலிருந்து வர வகை செய்ய வேண்டும். இல்லையேல் இன்னும் நிலைமை மோசமாகி விடலா மெனவும் அஞ்சுகிறோம்.

பொதுவாக, நாளுக்கு நாள் ஏறி வரும் நெல், அரிசியின் விலையைக் கண்டு பொது மக்களிடையே பெரும் அச்சம் பரவி வருகின்றது.

பொது மக்களின் நன்மையைக் கருதித் துவக்கப் பெற்ற இத் திட்டம் அதற்கு எதிர்மாறான விளைவுகளை விளைவித்து விட்டது.

மத்திய அரசின் சம்மதத்தோடு அமு லாகும் இப் புதிய தடை மூலமாக வாயினும் நிலைமை திருந்துமா? என்ப தும் சந்தேகமாகவே இருக்கிறது.

எனவே முதலமைச்சரும், அரசாங்க மும் மிக விழிப்புடனிருந்து நிலைமை யைச் சமாளிக்க உறுதி கொண்டாக வேண்டிய அவசியம் தெரிந்துள்ளது.

★

சொக்கத்தங்கம் சொக்கலிங்கம்!

தமிழகம் அறிந்த பெயர் — திரு. டி. எஸ். சொக்கலிங்கம். பத்திரிகைத் துறையில் பழம்பெரும் ஆசிரியர். ஏறு நடைபோடும் பேனவைக் கொண்டதால் இமயம்போல் புகழ் கொண்ட பேரரசன்.

விடுதலைப் போராட்ட நேரத்திலே வீர முழக்கம் செய்த தலைவர் பரம்பரையின் இம்முன்னணி வீரர், தமிழக தேசிய முகாமின் ஒப்பில்லாத தளபதிகளில் ஒருவர்.

'வெட்டொன்று, துண்டிரண்டு' என அஞ்சாது கொள்கை முழக்கமிட்ட பேனு மன்னர்; தலையங்கம் எழுதும் கலையைத் தமிழகத்தில் வித்தூன்றிய விற்பன்னர்.

மக்கள் கருத்தை ஈர்க்கும் செய்தித் தாள்களின் ஆற்றலை செயல்படுத்திக் காட்டிய செம்மல்.

இத்தகைய பெரியாரை, நாம் 'சொக்கத்தங்கம் சொக்கலிங்கம்!' என்று சொல்லுவது உயர்வு நவிற்சியாகுமோ? ஒருக்காலும் இல்லை!

* * *

பேராசிரியர் திரு. சொக்கலிங்கத்திற்கு அறுபதாவது ஆண்டு நிறைவு விழா அண்மையிலே கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன என்றறிந்து இறும்பூது எய்துகிறோம். உழைப்பால் உயர்ந்த உத்தமர் திரு. காமராஜ் தலைமையில் ஓர் விழாக் குழு அமைக்கப்பட்டு, இவ்விழாவைப் பெரும் விழாவாகக் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

எழுத்தாளரில் தலையாய இப்பேரரசனுக்கு செய்யப்படும் எல்லா மரியாதைகளும் சிறப்புற அமையத் தமிழக தேசியவாதிகளும், தமிழ் அன்பர்களும், பெரிதும அள்ளி, அள்ளி வழங்க வேண்டுமெனப் பணிவன்புடன், வேண்டுகிறோம். நன்கொடைகளையும், பரிசில்களையும் முதலமைச்சர் முகவரிக்கே அனுப்பலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பத்திரிகைத் துறைப் பெருமக்கள் இவ்விழா வெற்றி பெற எல்லாவித ஒத்துழைப்பையும் நல்குவார்கள் என்றும் நம்புகிறோம்.

இப்பெரியார் நீடுவாழ்ந்து, நாட்டையும், மொழியையும் வாழவைக்கவேண்டும் என்று இறைவன் தாள்பணிந்து பிரார்த்திக்கின்றோம்!



திருநிறைசெல்வர்: ஓவியர் ஜெகனை அறியாத 'புதுமை' வாசகருண்டோ? கலைவண்ணம் கை வரப்பெற்ற அவ் ஓவியக் கலைஞர் **திருநிறைசெல்வி: சகுந்தலா தேவியை** 9—2—59ல் சென்னையில் திருமணம் செய்துகொண்ட செய்தியை நமது வாசகருக்கறிவிப்பதில் நம்மைவிட மகிழ்வு கொண்டாருமுண்டோ? 'வாழிய மணமக்கள்!' என நாமெலாம் உளம் கனிந்து வாழ்த்தத் தடையுமுண்டோ?

நமக்கு வடக்கே

கழிந்த ஜனவரி மாதம் இங்குள்ள தென்னிந்தியர்களுக்கு ஒரு முக்கிய மான மாதம் என்றே கருதவேண்டும்.

கரோல்பாக்கிலுள்ள பஜனை ஸமாஜத்தினர் ராதா கல்யாணத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். அடுத்தாற்போல் தியாகப்பிரம்ம மஹோத்ஸவம் டில்லியில் பல இடங்களில் கொண்டாடப்பட்டது.

டில்லி கர்னாடக சங்கீத சபையினர் இந்த உத்ஸவத்தை ஒருவாரம் கொண்டாடினார்கள். சபாவின் ஆதரவில் நடக்கும் சங்கீத வித்யாலயத்தின் மாணவ, மாணவிகளும், சபா சங்கீத வித்வான்களும், இதில் பங்கெடுத்துக் கொண்டனர். சங்கீத வித்யாலயத்தில் உள்ள ஒவ்வொரு மாணவிகளுக்கும் தக்க பக்க வாத்யங்களுடன் கச்சேரி செய்ய ஒரு அரிய சந்தர்ப்பத்தை இந்த சபையினர் அளித்தது ஒரு பாராட்டவேண்டிய விஷயமே. மாணவிகள் வழக்கம்போல் ஸ்ரீ தியாகய்யர் அவர்களின் **பஞ்சரத்ன கீர்த்தனத்தைப்** பாடி சபையோரை மகிழ்வித்தார்கள்.

ஷண்முகாநந்த சபையினரும் மேற்படி உத்ஸவத்தை கரோல்பாகிலும், வினய நகரிலும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். பஜனை சமாஜத்தினர் வழக்கம்போல் சிறந்த பாடக, பாடகிகளுக்கு (மாணவிகளுக்கு) பரிசு வழங்கினார்கள்.

வரும் மார்ச்சு மாதம் 8-ம் தேதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் பாட்டுக் கச்சேரி மதராஸி ஸ்கூல் கட்டிட நிதிக்காக நடக்கப்போகிறது. அதை அடுத்தாற்போல் அதாவது மார்ச்சு 15-ம் தேதி ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாளின் கச்சேரி கர்னாடக சங்கீத சபையினர்கள் ஆதரவில் நடக்கும். ஆகவே டில்லியிலுள்ள தமிழர்கள் மார்ச்சு மாதம் எப்போ வரப்போகிறது என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மார்ச்சு முடிந்ததும் ஏப்ரல் வந்துவிடும். காருண்ய சர்க்கார், தங்கள் சிப்பந்திகளுக்கு இரண்டு வருடத்துக்கு ஒரு தரம் ஊருக்குப் போய் வர ரயில்வே சலுகை காட்டியுள்ளனர். ஆகவே ஏப்ரல் மாதம் 10-ம் தேதியிலிருந்து மே மாதம் முடிவுவரை இங்கு ஒரே நெருக்கடியை எதிர்பார்க்கலாம். கிராண்ட் எக்ஸ்பிரஸிலும், ஜனதாவிலும், டிலக்ஸிலும் தமிழர்கள் இம்மாதங்களில் "தமிழ்நாடு சலோ" என்று ஆரவாரித்துக் கொண்டே பிரயாணம் செய்வர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால் ஊருக்குப் புறப்படுமுன் அவர்கள் படும் கஷ்டங்களை நினைக்கும்போதுதான் வருந்தவேண்டியிருக்கிறது. பிரயாணச் சீட்டு வாங்க ரயில்வே ப்ளேட்பாரத்தில் இரவு பூராவும் கழிக்க வேண்டும். ஒரு சிலருக்கே டிக்கட் கிடைக்கும். இதர நண்பர்கள் மேற்படி பிரயாணச் சீட்டு கிடைக்காவிட்டாலும் மதராஸ் ஹோட்டலிலும், தென்னிந்திய போர்டிங் ஹௌஸிலும், இட்லியையும், சாம்பாரையும் ஒரு கை பார்த்துவிட்டே வீடு திரும்புவார்கள்.

குன்றக்குடி அடிகளின் அகில இந்தியச் சுற்றுப் பிரயாணம்

தமிழகத்தின் சமயத்துறையில் சிறந்த ஆக்கப்பணியும், அருள் நெறிப் பிரசாரமும் செய்துவரும் **தவத்திரு குன்றக்குடி அடிகளார்** அகில இந்தியச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள செய்தியறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். அவரது அலுவல் **திட்ட விவரம்** கீழே தரப்படுகிறது.

மார்ச் 1—பம்பாய் தமிழ்ச் சங்கம், பக்த ஜன சபை விழாக்கள்.

மார்ச் 3, 4—ராமகிருஷ்ண மடத்தார் ஏற்பாடு செய்யும் விழாக்கள்.

மார்ச் 5, 6, 7, 8—புது டில்லியில் நிகழ்ச்சிகள், பிறகு காஷ்மீர்.

அடிகளாரின் ஆன்மிக, இலக்கிய, கலாச்சார உரைகளை வட இந்தியப் பொது மக்களும், சிறப்பாகத் தமிழன்பர்களும் மாந்தி மகிழ்வார்கள் என நம்புகிறோம்.


டல்லஸ் நோய் காரணமாக படுக்கையில் கிடக்கிறார்
- செய்தி
அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை


மாக்மில்லன் ருஷ்யா சுற்று
பிரயாணம்
மாக்.
ருஷ்யா
ஐக்

உலக அரசியல்


குருஷேவ்
ஈரான்
ஐக்
ஈரான் - யு.எஸ்.
50 வருட ஒப்பந்தம்
செய்தி





கார்டூன் சந்தி

<கோபிநாத்>





வேத காலத்திலிருந்தே....

"तंतुं तन्वन्, रजसो भानुमन्विहि,
ज्योतिष्मतः
पथो रक्ष धिया कृतान् ॥
अनुल्बणं वयत,
जोगुवामपो, मनुर्भव, . . ."

ऋग्वेद

கதிரொளி நகைக்கும்
அதிமெருகு நூலே நூற்கவேண்டும்;
முடிச்சு முரணையற்ற
வடிவமை நூலேயே நெய்ய வேண்டும்;
ஆம், ஞானம் வகுத்தளித்த
நல்வழியைக் காத்து
சிந்தனையாளராய்த் திகழுங்கள்
இதுவே—
கவிஞர் பெருமக்கள் காட்டிய வழி
– ரிக்வேத சுலோகம் தழுவியது –

ALL INDIA HANDLOOM BOARD

கவின் மிகு வனப்பு

கைத்தறி நெசவே

அகில இந்திய கைத்தறி போர்டு,
ஷாஷிபாக் அவுஸ், விட்டட் ரோடு, பம்பாய்.


கண்ணும் கலந்தது; கருத்தும் இணைந்தது!
பெண்ணும் களித்தனள்; பிறை நகையும் பிறந்ததே!
மோராக்-ஸ்ரீனிவாஸின்
"பாண்டித் தேவன்"

போன் : 203 தந்தி : "TRANSPORT"

சண்முகம் டிரான்ஸ்போர்ட்

பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை.



எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
5. மதுரை To சாயல்குடி
6. மதுரை To அருப்புக்கோட்டை

பொது ஜனங்களும், வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பிராஞ்சு: மதுரை

போன் : 512 தந்தி : "TRANSPORT"

இவர்தான் இந்திரா காந்தி

ஆனந்தபவனம்.

இந்திய நாட்டு வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட அலகாபாத் மாளிகை. இதன் சொந்தக்காரரான மோதிலால் நேரு, தான் வகித்த காங்கிரஸ் அக்கிராசனர் பதவியைத் தன் ஆயுளிலேயே தனது மகன் வகிப்பதைக்காணும் பேறு பெற்றவர்.

அதே நிகழ்ச்சி—தந்தை ஜவஹர் வகித்த பதவியை, மகள் இந்திரா ஏற்றுக்கொண்டதின் மூலம் மீண்டும் நடைபெற்றுள்ளது !

ஆனந்தபவனத்திலே தோன்றிய தலைவர் வரிசையிலே இந்திரா காந்தியும் ஒப்பற்ற இடம் பெற்றுவிட்டார்.

* * *

இந்திரா காந்தி-காங்கிரஸ் பேரவையின் நான்காவது பெண் தலைவர். இவருக்கு முன்னால், அன்னிபெஸன்ட், சரோஜினி நாயுடு, நெல்லி ஸென் குப்தா ஆகியோர் இப்பதவியை வகித்த மாதர் திலகங்கள்.

ஒரு பெண் காங்கிரஸ் தலைவியாகப் பணியாற்றி 26-வருடங்கள் கழிந்து விட்டன.

* * *

பொருளாதார விடுதலைப் போரின் முக்கிய கட்டத்தில் நாடு நிற்கும் நேரத்தில், நாட்டின் மாபெரும் கட்சியின் தலைமை இந்திரா காந்தியிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

சோஷலிஸவாதிகள் அவர்பால் கொண்டுள்ள பெரும் மதிப்பிற்குச் சான்று இந்நிகழ்ச்சி. அதே நேரத்தில் மாறுன கருத்துக்கொண்டோர் சூழ்ந்துள்ள கட்சியை ஒரே வழியில் நடத்த வேண்டியபொறுப்பு இந்திரா காந்திக்கு ஏற்பட்டுள்ளது. உண்மையில், காங்கிரஸ் ஸ்தாபனம் மிதவாதிகள் தலைமைக்குள் சென்றுவிடக் கூடாது என்ற கவலையோடுதான், இடைக் காலத் தலைவராக இந்திரா காந்தியைத் தேர்ந்தெடுத்தார்கள் என்பது பகிரங்க இரகசியம்.

பிறந்தது முதல் 42-ஆண்டுகளாக அரசியல் சூழ்நிலையிலேயே தவழ்ந்து, தளர் நடைபோட்டு,வளர்ந்து வாழ்ந்து வரும் இப்பெண்மணியை இப்பொறுப்பிற்குத் தேர்ந்தது, பொருத்தமானதே!

* * *

பாட்டனார் மோதிலால், பிரபல அரசியல் வழக்கொன்றில் வாதாடுகையில் அவரது மடியில் தவழ்ந்தவர் இந்திரா.

சர்க்கா சங்கத்தை ஆறு வயதிலே ஆரம்பித்தவர். 10-வயதில் 6,000 சிறுவர், சிறுமியரின் படைக்குத் தலைவியாகப் பணியாற்றி, காங்கிரஸ் தொண்டர்களுக்கும் சேவை செய்தார். 12-வயதிலே தேசப் போராட்டங்களில் காயமுற்ற தொண்டர்களுக்குச் சிகிச்சை செய்ய மருத்துவ நிலையம் அமைத்தவர் இத்தலைவி.

தாயின் மரணத்துக்குப் பிறகு,தந்தையின் தலைசிறந்த காரியதரிசியாகப் பணி ஆற்றி வந்த இம்மாதரசி, அவரோடு உலகின் பல நாடுகளுக்கும் சென்று பெரும் அநுபவம் பெற்றுள்ளார்.

மாதர் காங்கிரஸ், அகில இந்தியக் குழந்தைகள் நலக் கவுன்சில் தலைவியாகவும், சிறு சேமிப்பு இயக்கம் மத்திய சமுதாய நலக்குழுவின் நிர்வாக உறுப்பினராகவும் குறிப்பிடத்தக்க சேவை செய்துள்ளார் இந்திரா.

* * *

தீவிரவாதி எனப் பெயர் பெற்றுள்ள இத்தலைவி, காங்கிரஸின் பிரச்னைகளை நன்குணர்ந்தவர். பொதுமக்கள் தொடர்பைக் கட்சி இழந்துவிட்டதைக் குறித்து வெளிப்படையாக வருத்தம் தெரிவிக்கிறார்.

இவரது புதிய செயற்குழுவும், செயல் முறைகளும், காங்கிரஸ் கட்சியில் புத்துணர்வைப் புகுத்தும் என்று நாடே எதிர்பார்க்கிறது. நாமும் அவ்விதமே நம்புவோமாக !

—"ஏழை பங்காளன்"

வேதாந்த விளக்கம்-5

நாமும் நாளையும்

ஜெயன்

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ..." எனும் பாடலைப் பள்ளிகளில் சிறு வகுப்புகளின் பாடப் புத்தகங்களிலேயே புகுத்தியிருப்பதால் நம் தமிழ் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்த ஒவ்வொருவரும் அதை மனப்பாடம் செய்து வைத்து அவ்வப்போது பிறருக்கு 'ஆறுதல்' கூறும் வார்த்தைகளாகப் பயன்படுத்தி வருகிறோமேயன்றி அவரவர் வாழ்க்கையில் அக்கருத்தை அனுசரிக்கிறவர்களாயில்லை. பெருந் தலைவர்கள் முதல் சாமானிய மனிதர் வரையும், ராஜ்கோட்டம் முதல் ராஜபாட்டை வரையும் இந்நிலையே இருந்து வருகிறது. 'நான்', 'நீ', 'அவன்', 'உறவினர்' என்போரெல்லாம் யார்? என்பதை ஆராய்ந்தறிய முற்படுவோர் ஒரு சிலரே. பிறவி, குணம், வாழ்வின் தன்மை எல்லாம் எந்த ஆதாரத்தில் அமைகின்றன? சீதோஷ்ண நிலைமைக்கேற்பவும், உண்ணும் உணவுக்கேற்பவும், தான் தாங்கியிருக்கும் உடலின் அமைப்பும் வெளி வண்ணத்திற்கேற்பவும், பெற்றோரின் பண்பிற்கேற்பவும் பலவாறாக ஒருவனுக்கு குணம், வாழ்க்கை எல்லாம் அமைகின்றன. அப்படியானால் நன்மை தீமைகளிலும், பாப புண்ணியங்களிலும், இம்மை மறுமையிலும் நம்பிக்கை கொண்ட (ஏன்? என்பதற்கு பிறிதொரு கட்டுரையில் விளக்கம் தரப்படும்) நாம், இவ்வளவையும் கணக்கிட்டு ஒருவனுக்குப் பிறவி அமைப்பதற்கு இறைவன் எதை ஆதாரமாகக் கொள்கிறான் என்பதை ஆராய்ந்தால் அவரவரின் 'பழவினை'களையே என்பது எளிதிற் புலப்படும். பழவினைப் பயனையே நாம் 'விதி', 'தெய்வ சித்தம்' என்றெல்லாம் கூறுகிறோம். ஒருவன் கருவிலிருந்து வெளி வந்த மாத்திரத்தில் தன் பழம் பிறப்புணர்ச்சியை இழந்து விடுகிறான், புதிதாக வந்து பிறந்த இடத்தில் அம்மா, அப்பா, அம்மான், அண்ணன் என்று உறவின் முறை எடுத்து பாசத்தை வளர்க்கிறான். இது எத்தனை காலத்திற்கு? வரப்போகும் உறவினர் யார்?

முந்திய உறவினர் யார்? ஒருவனுடைய இறப்புக்குப் பின் இவரில் எந்த உறவினருக்கு என்ன செய்ய முடியும். இறந்தவன் சம்ரக்ஷணையில் இவ்வுலகில் யாரும் வாழுகிறுர்களா? இறப்பைத் தவிர்த்தவர் யார்? பிறப்பும் இறப்பும் ஒன்றையொன்று தொடர்ந்து வருவது. பிறக்கும்போதே இறப்பும் நிச்சயமாகி விட்டது. நாம் பிரபஞ்சத்தில் கொள்ளும் தொடர்புகளும் அற்பகால அளவுடைத்தேயாம். ஆகவே அற்பத் தொடர்பும் அநித்திய வாழ்வும் உள்ள மாந்தர் மீதும் மற்றவை மீதும் பாசங் கொள்வதும், மடியும்போது மனந்தாழ்வதும் மடமை என்பதனை மேலும் விளக்க கீழே ஓர் கதை தரப்படுகிறது.

அன்றுதான் உயிர்நீத்த ஒரு வாலிபனின் தந்தை, தங்கை, மனைவி மூவரும் ஒன்றுமே நிகழாததுபோல் அன்றும் மிகவும் குதூகலமாய் இருந்ததைக் கவனித்த ஓர் சந்நியாசி அவ்'விபரீத' உள்ளங்களைப் பரிசோதிக்க விரும்பியவராய் தந்தையிடம் 'உன் மகனை இழந்த நீ இன்று கவலையுருமல் வழக்கமான உற்சாகத்துடன் இருப்பதன் காரணம் யாது?' என வினவினுர். தந்தை கூறியதாவது:—'மட் பாண்டங்களை சூளையிலிருந்து பிரிக்கும்போது உடைந்து காணப்படும் பாண்டங்களுக்காகக் குயவன் கவலைப்படுவதில்லை. எனெனில் சூளை வைக்கும் போதே சில பாண்டங்கள் அவ்வாருகும் என்பதை அவன் நன்கு அறிவான். சேதமுருமல் இருக்கும் பாண்டங்களோடு அவன் திருப்தி அடைகிருன். அவ்வாறே என் நிலையும்!'.

தங்கை மொழிந்தது:—'ஆல விருக்ஷத்தின் பழங்களைத் தின்று கொண்டிருக்கும்போது சில பறவைகள் இடையில் பறந்து சென்று விடுகின்றன. சில பறவைகள் புதிதாக வருகின்றன. அவைகளுக்காக இருக்கும் பறவைகள் கவலைப்படுவதில்லை. பின் தொடருவதுமில்லை. திருப்தியடையும் வரை அல்லது நிர்ப்பந்தப் படுத்தும் வரையும் இருந்து புசிக்கின்றன. அவ்வாறே என் சகோதரன் பிரிவு என் நிலையை மாற்றுவதற்கில்லை!'

அகமுடையாளின் கூற்று :— 'ஒரு நதியின் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து நதியில் உருண்டோடி வந்த ஓரு மரக் கட்டை சிறிது தூரத்திற்குப் பின், ஒரு கிளை நதியிலிருந்து வந்த கட்டையுடன் சேர்ந்து வந்து கொண்டிருந்தது. சிறுது தூரம் சென்ற பின் ஒரு இடத்தில் அந்நதி இரண்டாகப் பிரிந்து சமுத்திரத்தையடைந்தது. அந்த இடத்தில் கட்டைகளும் தனித் தனி கிளை வழியாய் சென்று சமுத்திரத்தையடைந்தன. அஃதேபோல் வெவ்வேறு இடங்களில் பிறந்த நாங்கள் இடையில் ஆண்டவன் சித்தம்போல் தாம்பத்ய வாழ்வில் பிணைக்கப்பட்டவர்களாய் சில காலம் வாழ்வின் பாதையில் இணை சேர்ந்து நடந்தோம். நாங்கள் இருவரும் போய்ச் சேருமிடம் ஒன்றே. இன்று என்னைப் பிரிந்து அவர் முன்னதாகச் சென்றுலும் நான் போகுமிடமும் அதுவே, சேர்ந்த அன்றே பிரிவும் நிச்சயமென்பதை உணர்ந்திருக்கும் நாம் பிரிவு வரின் கவலையுறுவதேன்?'.

★

பின்னல் சீலையில் நகர வரலாறு!

யார்க்ஷயரிலுள்ள டங்கர்ஸ்டர் ரோமானிய ஆட்சிக் காலத்தில் தோன்றிய நகரம். அதன் 2,000 ஆண்டு வரலாற்றை, பின்னல் சீலையில் சித்தரித்துக் காட்டியிருக்கிருர்கள். ரோமானியர் ஆட்சியிலிருந்து, நாளது வரையிலுள்ள ஒவ்வோர் முக்கிய நிகழ்ச்சியும் இதில் இடம் பெற்றிருக்கிறது.

டங்காஸ்டரில் கி. பி. 1350இல் உயர்நிலைப் பள்ளி நிறுவப்பட்டது. 1683இல் நகரசபைத் தலைவருக்கு கட்டியக்கோல் வழங்கப்பட்டது. டங்காஸ்டரில் நிலக்கரிச்சுரங்கம் உண்டு; குதிரைப்பந்தயம் உண்டு. இவை அனைத்தையும் இந்தப் பின்னல் சித்திரத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

டங்காஸ்டரில் கலைப் பள்ளியைச் சேர்ந்த ஸ்ரீமதி ஈ. எம். ஜான், இதைத் தயாரிக்க திட்டமிட்டார். சுமார் 200 பெண்கள், ஈராண்டுகள் உழைத்து இதை முடித்தார்கள். இந்தச் சித்திரச் சீலையை நகரிலுள்ள கலைக் கூடத்தில் வைக்க ஏற்பாடும் செய்திருக்கிருர்கள்.

புழு

புனலன்

[மனிதனை, புழுவாக உருவகித்துப் பாடுவது, ஒரு மரபு.]

புரள்கிறாய், புழுவே! இந்தப்
புழுதியில் என்ன கண்டாய்?

நுரையிடும் வாழ்வில், இன்பம்
நுகர்ந்ததும் ஏதும் உண்டோ?

சிரித்திடும் ஒளியில், தேயும்
சிறுஇருள் புணரும் காலைக்

கருக்கலைப் போலாம்; வாழ்வுக்
கவிதையில் மயக்கம் என்னே?

★

தனிமையில் புரளு கின்றாய்;
தனியாத வேட்கை கீறும்

கனவுகள் கோடி கோடி
கதைசொல, கவிதை சொல்ல,

மனதொடும் உறவு பேச
மயக்கத்தே புரள்வ தாமோ?

நினைவுகள் நீள, நீள
நீண்டிடும் தூரம் என்னே?

★

நெடுந்தொலை; எல்லை காணோம்;
நினைவெலாம் புரள,... ஓகோ!

தொடுவான விளிம்பிற் கப்பால்
தொலைவுதான் நீளு மேயோ?

கிடந்திடு: புழுதி மண்ணைக்
கிளறிடு: முடிவு நோக்கி

நடந்திடு: ஆமாம்... எங்கே?
நனவினுக் கெட்டு மேயோ?

★

(—கன்னிக்கண்ணன்—)

டாக்டர் ஹரிகிருஷ்ணமேதாப்பின் இலக்கிய வளம் செறிந்த இனிமையான வரவேற்புரையைத் தொடர்ந்து இந்தியாவின் இரு பெரிய மேதைகளின் — பேனா மன்னர்களின் அரிய பேருரையை கேட்கும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது. இவ்விரு பேருரைகளுமே இந்தப் 'பென் விழா'வின் சிறப்புக்குச் சிகரம் வைத்தாற் போல் இருந்தது என்று சொல்வதே பொருத்தம். அவ்வளவு அருமையான, அர்த்த புஷ்டி நிறைந்த அறிவுரைகள்தான் அவை. இவ்விரு மாமேதைகள் தான் யார்? பாரதத்தின் கண்ணின் மணிகளாக விளங்கும் பண்டித நேருவும், வேதாந்த விற்பன்னரான டாக்டர் ராதா கிருஷ்ணனும் தான் அந்த மேதைகள். இவ்விரு எழுத்தாளர் தலைவர்கள் தங்கள் பேருரைகளை ஆரம்பிப்பதற்கு முன் ஒரிஸ்ஸா கவர்னர் திரு. சுதங்கர் அவர்கள் அறிமுகச் சொற்பொழிவொன்றை ரத்தினச் சுருக்கமாக நிகழ்த்தி முடித்தார்.

பிறகு 'பென்' ஸ்தாபனத்தின் ஸ்தாபகச் செயலாளரான திருமதி. சோபியாவாடியா அவர்கள் 'பென்' விழாவை ஆரம்பித்து வைக்கும்படி பாரதப் பிரதமர் பண்டித நேரு அவர்களைக் கேட்டுக்கொண்டு மணி, மணியாகச் சில வார்த்தைகளைப் பேசினார். அவரது பேச்சில் 'கணீர்' என்ற மணி ஓசையின் 'த்வனி' இருந்ததைத்தான் குறிப்பிடுகிறேன். "பூத்து வரும் புதிய ஆண்டு ஆரம்பத்தில் புவனேஸ்வரம் என்ற இந்தப் புனிதமான புதிய மகா நகரில் பேனா மன்னர்களின் நாட்டைப்பாரதத்தின்பிரதமரும், பேனா மன்னர்களின் தலைவருமான பண்டித நேரு அவர்கள் ஆரம்பித்து வைப்பதே இந்த ஸ்தாபனத்தின் மகத்தான வெற்றிக்கு அறிகுறி" என்று திருமதி சோபியா வாடியா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கருத்த கோட்டும், தூய வெள்ளை சர்வாணியும் அணிந்து சிரித்த முகத்தோடு காட்சி அளித்த நேருஜி பேச எழுந்ததும் கூட்டத்தினரின் குதூகலம் கட்டுக்கடங்காமல் கரைபுரண்டோடியது. நேருஜியின் சிந்தனைக் குரலொலி 'கணீர்' என்று கேட்கவே ஆனந்த ஆரவாரம் செய்த மக்கள் பெருவெள்ளம் ஆடாமல், அசையாமல் மகுடிக்குப் பணிந்த பாம்பைப் போல் அமைதியாக அமர்ந்துவிட்டது. "இது அறிவாளிகளின் கூட்டம். இங்கு என்னைப் போன்ற ஆட்சியாளனுக்கு என்ன வேலை, என்ன பேச்சு?" என்று நகைச் சுவையோடு நேருஜி பேச ஆரம்பித்தார். அவர் மேலும் பேசுகையில், "நாம் இப்போது ஒரு புது யுகத்தில் வாழ்கிறோம். அதுவும் ஒரு பரந்து விரிந்த புதிய யுகத்தில் வசிக்கிறோம்.

இந்தப் புது உலகம் ஒரு புதிய நாகரிகத்தின் பண்பாட்டின் எல்லைக்கோட்டில் இப்போது இருக்கிறது. இர்திய எழுத்துலகச் சிற்பிகள்தான் அந்தப் புதிய உலகத்தை தலைமை தாங்கி சுபிட்சப் பாதைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்'' என்று அவர் குறிப்பிட்டார். மேலும் பேசுகையில் ''ஜாதி, மத, இன, மொழி பிரதேச வேறுபாடுகளை மறந்துவிடவேண்டுமென்றும், இந்தக் குறுகிய எண்ணத்தை நாம் கைவிடாதவரை, இந்தப் புதிய உலகத்துக்கும், இந்தப் புது யுகத்துக்கும் வெகு தொலைவில்தான் நாம் நின்றுகொண்டிருப்போம்'' என்று கூறி முடிப்பதற்குள் கூடியிருந்த மக்களும், குழுமியிருந்த பேனா மன்னர்களும் கரகோஷம் செய்ததை இன்னும் என்னால் மறக்கமுடியவில்லை.

"ஒன்று வானளாவப் புகழ்வது, இல்லையேல் வாய்க்கு வந்தபடி பழிப்பது என்ற ஒரு அநாகரிகமான கொள்கையைத்தான் நாம் கடைப்பிடித்து வருகிறோம். இந்த மோசமான போக்கை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். இந்தியாவில் எழுதப்படும் வாழ்க்கைக் குறிப்புகள் அனைத்தும் சரியான குறிப்புகளல்ல. இவ்வித வாழ்க்கைக்குறிப்புகளை எழுதுபவர்கள் அவற்றால் கடவுளைப் படைக்கிறார்கள் அல்லது பெரும் பூதத்தை சிருஷ்டிக்கிறார்கள். நாம் கடவுளும் அல்ல. பூதங்களும் அல்ல. நாம் வெறும் மானிடப் பிறவிகளே'' என்று நேருஜி கூறியதும் ஆடாது அசையாது செவி சாய்த்துக் கேட்டுக் கொண்டிருந்த எழுத்தாளர்கள் அனைவரது மனதிலும் சிந்தனையோட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது என்பதை அவர்கள் முகபாவமே எடுத்துக் காட்டிற்று. "இந்தப் 'பென்' விழாவில் நான் எழுத்தாளனாகவே கலந்து கொண்டேன். இப்பொழுது என் துறை வேறு என்றாலும் எழுத்துத் துறையின் மகத்துவத்தையும் முக்கியத்துவத்தையும் எப்பொழுதுமே நான் உணருகிறேன்'' என்று கூறித் துவக்க உரையை முடித்தார்.

இதைத் தொடர்ந்து 'பென்' ஸ்தாபனத்தின் தலைவரும், தத்துவஞானியுமான உப ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் அமைதியான சூழ்நிலையில், அழகான முறையில் மிகச் சிறப்பான வகையில் தலைமையுரையை நிகழ்த்தினார். அவர் வாயில் உதித்த ஒவ்வொரு சொல்லிலும் ஆவேசமிருந்தது; ஆணித்தரமான கருத்தும் இருந்தது; அழுத்தம் இருந்தது அர்த்தபுஷ்டியும் நிறைந்திருந்தது.

''புது யுகத்தின் புத்துணர்ச்சி நாம் சிருஷ்டிக்கும் இலக்கியங்களில் எல்லாம் வியாபித்திருக்க வேண்டும்'' என்ற கருத்துத் தொனிக்க டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் பேசினார்கள். "மனித உணர்ச்சி, அந்தப் புத்துணர்ச்சியிலிருக்கும் நம்பிக்கை ஆகியவற்றிற்கெல்லாம் ரட்சககர்த்தாக்களாக விளங்குபவர்கள் இந்த சிருஷ்டிகர்த்தாக்கள்தான்'' என்றார் அவர். அவரது பேச்சு, இலக்கிய கர்த்தாக்களுக்கு ஒரு இலக்கணமாக அமைந்தது என்று சொன்னால் அதில் தவறொன்றுமில்லை. 'எழுத்தாளன் யார்? அவனுக்கும் இந்த நாட்டுக்கும் என்ன தொடர்பு?' என்ற வினாக்களை எழுப்பி அதற்கு விளக்கம் தரும் விதத்தில் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் உரையை நிகழ்த்தினார்கள். இந்த அரிய இலக்கியப் பேருரையோடு முதல் நாள் மகாநாடு முடிவுற்றது.

ஜனவரி 2ம் தேதி காலை 9-30 மணிக்கு மீண்டும் 'பென்' விழா ஆரம்பமாயிற்று. வங்காளத்தின் பிரபல முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரான திரு. தாராசங்கர் பானர்ஜி அவர்களின் தலைமையில், 'நவ இந்தியாவில் நாவல் இலக்கியம்' என்பது பற்றிய உரை அரங்கு ஆரம்பமாயிற்று. இந்த உரை அரங்கில் இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களும் பங்குகொண்டு தங்கள் தங்கள் மொழியில் நாவல் இலக்கியத்தின் வளர்ச்சி, தன்மை, உத்தி முதலியவற்றை விளக்கி பெருமையோடு பேசினார்கள். தமிழ் நாவல் இலக்கியத்தைப்பற்றி திரு. கி. சந்திரசேகரன் அவர்கள் நீண்டதொரு கட்டுரையைப் படித்தார். அதில் அவர் தனிப்பட்ட முறையில் தமது சொந்தக் கருத்துக்களை குறிப்பிட்டிருந்தாரே தவிர உண்மையில் அவர் நடுநிலைமைக் கண்ணோட்டத்தோடு நாவல் இலக்கியத்தைப் பற்றி விமர்சிக்கவில்லை என்பதுதான் எனது தாழ்மையான கருத்து. இந்த உரை அரங்குடன் இரண்டாம் நாள் நிகழ்ச்சி முடிவடைந்தது.

''இலக்கியமும் அது புது உலகத்திற்கு விடும் சவாலும்'' என்ற உரை அரங்குடன் மூன்றாம் நாள் நிகழ்ச்சி காலை 9 மணிக்கு ஆரம்பமாயிற்று.

இந்த உரை அரங்கு நிகழ்ச்சியில் அடியேன் உள்பட பலர் பங்கு கொண்டு சிறப்பித்தார்கள். இந்த உரை அரங்கு சூடாகவும், சுவையாக வும் இருந்தது. காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் உணர்ச்சிவசப்பட்ட பிரசங்கங்களுக்கெல்லாம் இந்த உரை அரங்கு இடம் கொடுத்தது. அலுத்துக் களைத்துப் போயிருந்த பல எழுத்தாள அன்பர்களையும் ஒரு உலுக்கு உலுக்கி சுறுசுறுப்பாக்கிய பெருமை இந்த உரை அரங்குக்குத்தான் உண்டு. இத்துடன் காலை நிகழ்ச்சி முடிவடைந்தது.

மீண்டும் பிற்பகல் இரண்டு மணிக்கு திருமதி. சோபியா வாடியா அவர்கள் தலைமையில் "எழுத்தாளன் என்ற முறையில் என் அனுபவங்கள்" என்ற ரசமான உரை அரங்கு மிக சுவை யோடு ஆரம்பமாயிற்று. இதில் பங்கு கொண்ட அனைவரும் தங்களுக்கு ஏற் பட்ட ரசமான அநுபவங்களை மிக நகைச்சுவையோடு எடுத்துரைத்து அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்தனர். டாக்டர் ஹரிகிருஷ்ண மேத்தாப் தமது அநுபவங்களைப்பற்றி பேசுகையில் சபையோரை வயிறு குலுங்க சிரிக்க வைத்தது குறிப்பிடத் தக்கது. ஜனவரி முதல் தேதி மங்கள கரமாக ஆரம்பித்த பென் விழா ஜன வரி மூன்றும் தேதி மாலை மகிழ்ச்சிகர மாக முடிவுற்றது. இந்த மூன்று நாட் கள் நடைபெற்ற 'பென்' விழாவை யொட்டி ஆங்காங்கே எழுத்தாளப் பிரதிநிதிகளுக்கு ராஜோபசார வர வேற்புக்களும் கண்ணுக்கு விருந்தான கலாநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. ஒரிஸ்ஸா முதல் மந்திரியும் எழுத்தா ளர் மகாநாட்டு வரவேற்புக்குழு தலை வருமான ஹரிகிருஷ்ண மேத்தாப் அளித்த விருந்துபசாரமும், கவர்னர் திரு. சுதங்கர் விருந்துபசாரமும் அவற்றில் குறிப்பிடத்தக்கவை.

இவ்விரு விருந்துபசார வைபவத்தி லும் அருமையான கலாநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இக்கலாநிகழ்ச்சிகள் கண்ணுக்கு விருந்தாகவும், காதுக்கு இனிமையாகவும், உள்ளத்திற்கு இத மாகவும் இருந்தது என்று சொன்னால் அது மிகையல்ல. இக்கலாநிகழ்ச்சி களில் ஒரிஸ்ஸாவின் கலை, கலாச்சா ரம், பண்பு, பழக்கவழக்கங்கள் அத்த னையும் பிரதிபலித்தன. இந்தக் கலா நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக இருந்த வர் ஒரு தமிழர் என்று தெரிந்ததும், என் இதயம் பெருமிதத்தால் விம்மி பெருகியது. கட்டாக் வானொலி நிலை யத்தின் டைரக்டர் திரு.பி.வி.கிருஷ்ண மூர்த்தி அவர்கள்தான் அந்தத் தமிழ் கலைஞர். தமிழனின் திறமையை, கலை ஞானத்தை தமிழறியா பிறமொழியா ளரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் பணிபுரியும் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மகாநாடு முடிந்ததும் பூரி, ஜகன்னா தம், கொனார்க் என்ற சூரிய ஆலயம் உதயகிரி, ரத்தினகிரி போன்ற இடங் களுக்கு எங்களையெல்லாம் அழைத்துச் சென்று காட்டினார்கள். இந்த இடங் கள் அனைத்தும் சரித்திரப் பிரசித்த மான பார்க்கத் தகுந்த இடங்கள். பூரி ஜகன்னாதம் இந்தியாவிலுள்ள புண் ணிய க்ஷேத்திரங்களில் ஒன்று. பழமை யான கோவில்களில் அதுவும் ஒன்றும். கொனார்க் சூரியாலயம் விஞ்ஞான அடிப்படையில் கட்டப்பட்டது. பல் லாயிர வருடங்களுக்கு முன்னமேயே விஞ்ஞான அடிப்படையில் கட்டப்பட்ட தென்றால் அது ஆச்சரியத்துக்குரிய தல்லவா? சூரியபகவானுக்குக் கோயில் கட்டிக் கும்பிடும் வழக்கம் இருந்தது என்பதற்கு இந்த ஆலயமே சான்று. இந்தியாவிலேயே இருக்கும் ஒரே சூரியாலயம் இதுதானும். இந்தக்கோயி லின் அமைப்பே அக்கினி தேவன் ரதத்தில் பவனி வருவது போன்றே அமைக்கப்பட்டிருக்கிறது. உதயகிரி, ரத்தினகிரி ஆகிய மலைக்குன்றுகளில் காணும் குகைகளில் சமண ஜைன புத்த பிட்சுக்களும் அவர்கள் மடாலயங் களும் இருந்ததற்கான அறிகுறிகள் அந்தந்த மதத்தின் சின்னங்களில் இருந்தே தெரிகிறது.

புவனேஸ்வரிலுள்ள லிங்கராஜ் ஆல யமும், ராஜாராணி ஆலயமும் பிரசித்த மானவை. இந்தக் கோயில்களில் காணும் கோபுரங்களின் உருவ அமைப்புத்தான் தமிழ்நாட்டு கோபுரங் களின் அமைப்புக்கு மாறுபட்டிருக் கிறதேயன்றி அந்தக் கோபுரங்களில் பொறித்திருக்கும் சிற்பங்களில் காணும் கலைத்திறனும், அமைப்புக்களும் தமிழ் கலையை பிரதிபலிப்பதாகத்தான் இருக் கிறது. "கலிங்கத்துப்பரணி" என்ற தமிழ் நூல் பிறக்க காரணமாக இருந்த கலிங்கதேசம்தான் இன்று ஒரிஸாவாக திகழ்கிறதென்றால் அதில் ஆச்சரியப் படுவதற்கு எதுவும் இல்லையல்லவா?

மனிதன் இன்னும் சந்திரனுக்குப் போய்ச் சேரவில்லை. ஆனால் கட்டாயம் அங்கு போய்ச் சேருவான் என்பதில் ஐயமில்லை. சமீப காலத்தில் விஞ்ஞானம் கண்டுள்ள பல சாதனைகளும் மனித குலத்தோருக்குப் புதியதோர் சகாப்தத்தைத் தோற்றுவித்திருக்கின்றன. அண்ட வெளியின் மர்மங்கள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. வான வெளியிலே பிரயாணம் செய்து பல்வேறு விண்கோள்களுக்கும் செல்ல வேண்டுமென மனிதன் கண்டு வந்த கனவுகள் பலவும் நனவாகும் காலம் நெருங்கி விட்டது.

சந்திரன்—சில உண்மைகள்!

சந்திரன் தான் நமது பூமிக்கு மிகவும் அருகாமையிலுள்ள கோள். ஆகவே இதுதான் மனிதன் அடியெடுத்து வைக்கும் முதலாவது அண்ட வெளிக் கோளாக இருக்குமென்பது தெளிவு. பூமியிலிருந்து சந்திரனுக்குப் பறந்து செல்வதற்கு அதிக நேரம் தேவையிராது. சுமார் 53 மணிகளில் போய்ச் சேர்ந்துவிடலாம். சந்திரனை ஆராய்ந்து வான நூல் அறிஞர்கள் எவ்வளவோ விஞ்ஞான விவரங்களைச் சேகரித்து வைத்திருக்கிறார்கள். பூமியிலே நாம் அறிந்துள்ள நிலைமைகளிலிருந்து அறவே மாறுபட்ட நிலைமைகளையுடைய சந்திரனின் மேற்பரப்பிலே மனிதன் இறங்குவதற்குத் தேவையான தயாரிப்பு வேலைகளைச் செய்வதற்கு இந்த விவரங்கள் பெரிதும் துணை புரிகின்றன.

சந்திரனில் ஈர்ப்புச் சக்தி, பூமியிலுள்ளதைவிட ஆறு மடங்கு குறைவானது. ஆகவே பூமியில் 80 கிலோகிராம் எடையுள்ள ஒரு மனிதன், சந்திரனில் 13 கிலோகிராம் எடைதான் பெற்றிருப்பான்.

வானவழி இடைநிலையம்!

சந்திரனிலே இவ்வாறு எடை பெரிதும் குறைந்து விடுவதால், அண்ட வெளியிலே பிரயாணம் செய்ய விரும்பும் மனிதன் பூமியிலிருந்து புறப்படுவதைக் காட்டிலும் சந்திரனிலிருந்து புறப்படுவது பன்மடங்கு இலகுவாயிருக்கும். அண்ட வெளிக் கப்பல் பூமியின் ஈர்ப்புச்சக்தியின்பிடியிலிருந்து விடுபட்டுப் பிய்த்துக் கொண்டு அண்ட வெளிக்குள் தப்பிச் செல்ல வேண்டுமானால், அக்கப்பலுக்கு வினாடிக்கு 11 கிலோமீட்டர் (சுமார் 6.88 மைல்) வேகம் அளித்தாக வேண்டும். ஆனால் சந்திரனுடைய ஈர்ப்புச் சக்தியிலிருந்து விடுபட்டு வெளியேறி பூமிக்கும் இதர கோள்களுக்கும் செல்வதற்கு அக்கப்பல் வினாடிக்கு 2.4 கிலோமீட்டர் (1.5 மைல்) வேகம் பெற்றால் போதும். எனவே சந்திரன், மனிதனது அண்ட வெளி சஞ்சாரத்திற்கான மிகவும் வசதி வாய்ந்த வழி நிலையமாக அமையக் கூடியதென்பது தெளிவாகிறது.

சந்திரனின் மேற்பரப்பு!

சந்திரனுடைய பரப்பு பூராவும் ஒத்த வகையில் பிரகாசம் பெற்றிருக்கவில்லை. சிறிதும் பெரிதுமாக பல கரிய திட்டுகளும், ஒளி மிகுந்த புள்ளிகளும் அதன் பரப்பிலே தென்படுகின்றன. வெறுங் கண்களால் பார்த்தால்கூட இந்த விவரங்கள் புலனாகி விடுகின்றன. பெரிய கருந்திட்டுகள் யாவும் ஆழமான குழிகளாகும். இவற்றில் சொட்டுத் தண்ணீர்கூட இல்லையென்றாலுங்கூட இந்தப் பெருங் குழிகளைக் கடல்கள் என்று அழைக்கிறோம். சிறிய கரும் புள்ளிகள் யாவும் வளைகுடாக்கள், ஏரிகள், சதுப்பு வெளிகள் என்று பெயரிடப்பட்டுள்ளன. கடல்களைப் போலவே இவற்றிலும் தண்ணீர் கிடையாது. பிரகாசமான புள்ளிகள் மலைகளையும் எரிமலை வாய்களையும் குறிக்கின்றன.

சந்திரனின் பரப்பு பிரகாசமாகத் தெரியும் நேரங்களில் தொலைநோக்கிக் கருவியின் மூலமாகப் பார்க்கும்போது வட்டமான மலைத் தொடர்களுக்கு நடுவிலுள்ள பிரமாண்டமான கிணறு

கள் கண்ணுக்குப் புலப்படுகின்றன. எரிமலை வாயினுள் ஆழமான கருங்குழி இருப்பது தெரிகிறது.

நிலப்படங்கள்!

முதலாவது அண்ட வெளிப் பிரயாணிகளின் உபயோகத்திற்காக சந்திரனுடைய மேற்பரப்பை நன்கு அறிந்து பிழையற்றவாறு நிலப்படங்கள் தயாரிப்பது இப்பொழுது அவசியமாகியுள்ளது. சந்திரனுடைய பரப்பு சம்பந்தமாக நவீன காலத் தொலை நோக்கிக் கருவிகள் மூலம் கண்டறியக் கூடிய எல்லா விவரங்களும் இந்தப் படங்களில் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். சந்திரனிலுள்ள மலைகளின் உயரம், குழிகளின் ஆழம், எரிமலை வாய்களின் சரிவைப் பற்றிய அளவுகள் போன்ற பல விவரங்களையும் இந்தப் படங்களில் குறித்தாக வேண்டும். சந்திரனில் இறங்குவோர் அவர்கள் எப்பகுதியிலுள்ளனர் என்பதைத் தெரிந்து கொள்வதற்கும், ஒன்றுக்கொன்று அதிக வித்தியாசமில்லாத ஏராளமான மலைகளிடையே வழி தவறிவிடுமென்ற அச்சமின்றி நெடுந்தூரம் பிரயாணம் செய்வதற்கும் இந்தப் படங்கள் அவர்களுக்கு உதவி புரியும்.

நீரில்லாத கடல்கள்!

சந்திரனிலுள்ள கடல்களைச் சேர்ந்த பெரும், பெரும் சமவெளிகள் தொலை நோக்கிக் கருவியிலே பார்க்கும்போது மேடு பள்ளங்களின்றி சமதளமாக இருப்பதாகதோன்றுகின்றன. உண்மையில் இவை ஏற்றத் தாழ்வுடையதாகவும் பஞ்சைப் போல் பொலபொலப்பாகவும் உள்ளன.

காற்று உண்டா?

சந்திரனில் காற்று மண்டலம் இல்லை என்பது ஆராட்சிகள் மூலமாய் தெளிவாகியுள்ளது. எனவே விண்கற்கள் தடங்கலின்றி அதன் பரப்பிலே வேகமாக விழுகின்றன. இதனால் வெடி அதிர்ச்சி ஏற்பட்டு இந்த விண்கற்களும் சந்திரனது மேற்பரப்பைச் சேர்ந்த பொருள்களில் ஒரு சிறு பகுதியும் ஆவியாக மாறி விடுகின்றன. இதன் விளைவாக உலோகக் கசடு போன்ற பெருக்கு உண்டாகிறது. லட்சோப லட்சக் கணக்கான ஆண்டுகளாக விண்கற்களும் அண்ட வெளித் துகள்களும் சந்திரனது பரப்பின்மீது மோதி அதைத் துளைத்தும் தகர்த்தும் மேடு பள்ளங்களை ஏற்படுத்தி வந்துள்ளன.

எரிமலை வெடித்தது!

அமெரிக்க வானநூல் அறிஞர்கள் சென்ற ஆண்டில் சந்திரனுடைய பரப்பைப் படம் பிடித்தார்கள். எரிமலை வாய்கள் சிலவற்றிலிருந்து வாயுக்கள் வெளிவரக் கூடும் என்பதற்கு இந்தப் படங்கள் ஆதாரமாக அமைந்தன. ரஷ்யாவில் புல்கோவோ வானாராய்ச்சி நிலயத்தைச் சேர்ந்த என். ஏ. கசுரேவும், கார்கோவ் வானாராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வி. ஐ. எஜர்ஸ்கியும் கடந்தஅக்டோபர்,நவம்பர்மாதங்களில் ஆராய்ந்து எதிர்பாராத பல உண்மைகளையும் கண்டுபிடித்தனர். நவம்பர் 3ம் தேதி மாஸ்கோ நேரம் 6 மணிக்கு அவர்கள் அல்பான்சோ எரிமலை வாயின் நிறமாலையைப் புகைப்படம் பிடித்தனர். அந்தப் படத்தில் பிரகாசமான ஒளிச்சுடர் தெரிந்தது. எரிமலை வாயிலிருந்து வெளிவந்த வாயுவின் ஒளியே இது. சந்திரனில் எரிமலை வெடித்துப் புகைவதை சோவியத் விஞ்ஞானிகள் படம்பிடித்து விட்டனர் என்பது புலனாகியது. பூமியில் நடைபெறுவதைப் போலவே சந்திரனிலும்

எரிமலைகள் வெடித்து அதன் மேற் பரப்பின் வடிவத்தை உருவாக்குவதில் பங்கு கொள்கின்றன என்று கருதுவ தற்கு இந்த நிகழ்ச்சி இடமளித்திருக் கிறது.

சந்திரனில் உயிர் வாழ்க்கை !

சந்திரனிலுள்ள யதார்த்த நிலைமை கள் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்றவை யல்ல. ஆகவே சந்திரனில் வளர்ச்சி அடைந்த உயிர் வகைகள் இருக்க முடியாது. கீழ் மட்டத்து உயிர் வகை களில் கடினமான நிலைமைகளையும் தாக்குப்பிடிக்க வல்லவை சில அங்கு இருக்கக் கூடும். இதுவுங்கூட மிக வும் துர்பலமானதே.

மதியில் மனிதனின் தேவைகள்!

சந்திரனின் மேற்பரப்பில் மனிதன் எத்தகைய நிலைகளை எதிர்நோக்க வேண்டி யிருக்கும் ?

முதலாவதாக அண்ட வெளிக் கப்பலிலிருந்து சந்திரனில் மனிதன் கீழே இறங்கும் பொருட்டு காற்று அமுத்தத்தோடு கூடிய விசேஷச் கவச உடைகள் அணிந்திருக்க வேண்டும். அனேகமாகக் காற்றே இல்லாத சந்திர மண்டலத்தில் மிகவும் குறைவான அமுத்தத்தினால் ஏற்படக்கூடிய அபா யங்களிலிருந்து அப்பொழுதுதான் அவன் பாதுகாப்புப் பெற முடியும், சுவாசிப்பதற்காக அவன் பிராண வாயு எடுத்துச் சென்றாக வேண்டும். மலை களின் நிழலிலுள்ள சந்திர வெளி களில் சென்று அவற்றை ஆராயும் போது மனிதனுக்கு ஏற்ற வெப்ப நிலை அவன் உடைகளினுள் இருக்கும்படி ஏற்பாடு செய்வதற்கு வேண்டிய வெப்பக் கட்டுப்பாடு அமைப்புகள் அவன் உடைகளில் பொருத்தப்பட் டிருக்கவேண்டும். சந்திரனில் வெளியி லுள்ள இடங்களில் இருக்கும் வெப்ப நிலைக்கும் நிழலான இடங்களில் இருக் கும் வெப்பநிலைக்கும் பெருமளவு வித்தியாசம் இருக்கும்.

மதியில் ஒலி !

சந்திரனில் நிரந்திர நிசப்தம் நிலவு கிறது. அங்கு காற்று மண்டலம் இல்லையாதலால் பூமியைப் போல அங்கு சப்தங்கள் பரவ வழியில்லை. ஆதலால் சந்திர மண்டல ஆராய்ச்சி யாளர்கள் அவர்களுடைய தலைக் கவசங்களினுள் சின்னஞ் சிறு ஒலி செலுத்தி சாதனத்தையும் ஒலி வாங்கி சாதனத்தையும் வைத்திருந்தா லொழிய ஒருவரோடொருவர் பேசிக் கொள்ள முடியாது.

இரவுமில்லை, பகலுமில்லை!

சந்திரனில் வைகறைப் பொழுதும் மாலைப் பொழுதும் கிடையாது. பகல் திடீரென இரவாகவும், திடீரென நொடிப் பொழுதில் பகலாகவும் மாறி விடுகின்றன. குன்றுகளின் நிழல் கள் மையிருட்டாகவும் தெளிவான வரையறுப்புகளுடனும் தென்படும். பூமியில் நாமறிந்த சாம்பல் நிறங்களை யும் அங்கு காண இயலாது. அங்கு காற்று மண்டலம் இல்லாததே இவை யாவற்றிற்கும் காரணம். சந்திரனின் குன்று ஒன்றின் நிழலினுள் புகுந்து விட்ட ஒருவரை அவருக்குப் பக்கத் திலே நிழலுக்கு வெளியே நிற்கும் வேறொருவர் பார்க்கவே முடியாது.

கரு வானம்!

வானம் கரிபோல் கருத்திருக்கும். நீலமாயிராது. வெயில் கண்களைத் தீய்ப்பதுபோல் பிரகாசமா யிருக்கும். வெயிலின் கடுமையைக் குறைப்பதற்கு வானத்தில் மேகங்களே இருக்க மாட்டா. வெறுங் கண்ணால் பார்க் கும்போதே சூரியனும், அதைச் சுற்றி லுமுள்ள செந்நிற ஒளிவட்டமும், ஒளி மயமான உச்சிகளும் தெளிவாகத் தெரியும். சூரிய வட்டம் அளவு கடந்த பிரகாசமுடையதாய் தோன்றும்.

பகலில் நட்சத்திரங்கள்!

பகல் பொழுதிலுங்கூட வானத்திலே புள்ளிப் புள்ளியாக நட்சத்திரங்கள் தெரியும். கண் சிமிட்டாத நட்சத் திரங்கள் இவை. சந்திரனிலிருந்து பார்க்கும் மனிதனுக்கு நமது பூமி, இங்கு பூமியின் வானத்திலே தெரியும் சந்திரனைவிட 13.7 மடங்கு பெரியதா யுள்ள பிரகாசமான கோளமாகத் தெரியும். பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்வதை எவ்வித தொலை நோக்கிக் கருவியுமின்றி அங்கிருந்து தெளிவாகப் பார்க்கலாம்.

மனிதன் அறியாத பகுதி!

நட்சத்திரப் புள்ளிகளிடையே வானில் சூரியன் மெள்ள ஊர்ந்து சென்று 15 நாட்கள் வரை அடிவானத்திற்கு மேலே தெரிந்து கொண்டிருக்கும். அதன்பின் 15 நாட்கள் வரை வெளியே தலைகாட்டாமல் அடிவானத்திற்குக் கீழே மூழ்கிக் கிடக்கும். நமது பூமி சந்திரனுடைய வானத்திலே ஒரே இடத்தில் அப்படியே நிலையாகத் தெரியும். அதிர்வு காரணமாய் பக்கவாட்டில் ஓரளவு ஆடுவதைத் தவிர்த்து வேறு அசைவே இல்லாமல் வானத்திலே தோற்றமளிக்கும். சந்திரனின் எதிர்ப்புறத்தில் பூமி என்றுமே கண்ணுக்குத் தெரியாது. ஏனெனில் சந்திரன் எப்பொழுதும் நமக்கு ஒரு முகத்தை மட்டும்தான் காட்டுகிறது. பூமியிலிருந்து பார்க்க முடியாத சந்திரனது மற்றொரு பக்கத்தை அண்ட வெளி யாத்திரிகர்கள் ஆராய்ச்சி செய்தாக வேண்டும். சந்திரனுடைய இந்த எதிர்ப் பக்கத்தைப் பற்றி இன்று நமக்கு எதுவுமே தெரியாது.

மின்சாரம் தயாரிக்கலாம்!

மேகங்களால் மூடி மறைக்கப்படாத பிரகாசமான சூரியன் தொடர்ந்து ஆகாயத்திலேயே ஒளி விடுவதால், சந்திரனில் மனிதன் எந்நேரமும் சூரிய ஒளி மின் கலங்களை உபயோகித்து மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். பிரயாணத்திற்காகவும் சந்திரனது நிழல் பரப்புகளை வெளிச்சப்படுத்துவதற்காகவும் மனிதன் இந்த மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்வான்.

நம்பிக்கை!

பூமிக்கு முதன் முதலாக செயற்கை உபகிரகங்களைப் படைப்பித்துள்ள சோவியத் அமெரிக்க விஞ்ஞானிகளுடைய முயற்சிகளின் பயனாய் அண்ட வெளிப் பிரயாணங்களுக்கான காலம் ஆரம்பமாகிவிட்டது. மனிதன் சந்திரனுக்குச் சென்று வரும் காலம் தொலைவில் இல்லை.

(கட்டுரை உதவி: **'சோவியத் நாடு'**)

★



கீச்சுக் கீச்செனும் கிளி

ராமு: டேய் சோமு! என் வீட்டுக்கு நான் தான் எஜமான் உனக்குத் தெரியுமா?

சோமு: அப்படியா? அது சரி. உன் மனைவி எப்போது பிறந்த வீடு போனுள்?

கஜப்புளுகு

பஸ்கண்டக்டர்: அம்மா இந்தக் குழந்தைக்கு டிக்கெட் வாங்கணும். பையனுக்கு என்ன வயது?

தாயார்: மூன்று தான் ஆகிறது.

கண்டக்டர்: பையா! உன் வயசு என்ன?

பையன்: மூணு!

கண்டக்டர்: அப்படியா! அம்மா! உங்கள் குழந்தை ஒன்று யானைக் குட்டி போல வளர்வான், அல்லது பெரிய புளுகனைப் பேரெடுப்பான்!

அடுத்தது காட்டும் பளிங்கு போல்

"எப்பொழுது பார்த்தாலும் முகத்தைச் 'சிடு சிடு கடு கடு' என்று வைத்துக் கொண்டிருக்கிருரே அவர் யார் ஸார்?"

"அவரா? அவர் தான் என் தமையன்!"

"அப்படியா? நான் ஒரு முட்டாள் ஸார். உங்களிருவருக்கும் உள்ள முக ஒற்றுமையை முதலிலேயே கவனிக்கவில்லை!"

* * *

நோயாளி: டாக்டர்! என் உயிரைக் காப்பாற்றிய உங்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

வைத்தியர்: (அடக்கமாக) அதெல்லாம் ஒன்றுமில்லை. எல்லாம் ஆண்டவன் செயல்!

நோயாளி: அப்படியானல் நீங்கள் 'பில்' அனுப்பமாட்டீர்களே!

திக்காத திக்கெல்லாம்......

வழிப்போக்கர் ஒருவர் திக்குவாயர். எதிரில் சந்தித்த ஒரு நபரைப் பார்த்து "ப...ப...ப...பட்டுக்...கோ...கோ...ட்டைக்கு வ...வ...ழி எ...எ...எப்...ப்படி?" என்று கேட்டார். அந்த நபர் பதில் சொல்லாமலே வந்து விட்டார். இதைக் கவனித்துக் கொண்டிருந்த மூன்ருவது ஆசாமி, "ஏன் சார் அவருக்கு வழிகாட்டுவது தானே" என்று கேட்டார். அதற்கு அவர், "நா...நா...ன் அ...அ...வரை கே...கே...லி செ...செய்வதாக நி...னி...னைத்து விட்டால்!" என்ருர்!

படுகுழி மர்மம்!

கிராமத்துச்சாலை ஒன்றில் சென்று கொண்டிருந்த கார் திடீரென்று உளையில் சிக்கிக் கொண்டது. சக்கரங்கள் ஆழப்புதைத்து விட்டன. காரை ஓட்டி வந்தவர் என்ன செய்வது என்று புரியாமல் வண்டியைச் சுற்றிச் சுற்றி வந்தார். அப்போது பக்கத்துக் குடிசையிலிருந்து ஒருவன் வந்து அவருக்கு உதவி செய்யவே கார் சேற்றிலிருந்து விடுபட்டது. சந்தோஷப்பட்ட அவர் அவனுக்கு ஒரு ரூபாய் பரிசளித்து விட்டு. 'நீ யாரப்பா உன் தொழில் என்ன?" என்ருர். "என் தொழிலா? இந்த ரோட்டை நல்லா கொத்தி நாலுவாளி தண்ணி ஊத்தி வைப்பது தானுங்க" என்ருன் அவன்!

சீர்திருத்தமும், திருத்தமும்.

கோட்டு தலைப்பாகை ஜரிகை அங்கவஸ்திரத்துடன் ஒரு பிரமுகர் பத்திரிகாசிரியர் முன் தோன்றி, "நேற்று வந்த செய்தி ஒன்றுக்குத் திருத்தம் போட வேண்டும்," என்று இரைந்தார்.

ஆசிரியர்: நிதானமாகச் சொல்லுங்கள். என்ன நடந்தது?

பிரமுகர்: நான் பதவியிலிருந்து விலகிய செய்தியைச் சொல்லுகிறேன்.

ஆசிரியர்: சரியாகத்தானேபோட்டிருக்கிறேன்.

பிரமுகர்: செய்தியை நகரசபை அபிவிருத்திகள் என்ற பத்தியிலல்லவா போட்டிருக்கிறீர்கள்?

மோட்டார் சைக்கிளில் போகும் மனிதர்

ஆண்மையும் வெற்றியும் திகழ, மக்களின் மனத்தைக் கவருகிறார் எங்கு போனாலும் சரி இவர் மக்களின் கவனத்தைக் கவருகிறார். கம்பீரத்துடன் எல்லோரையும் தாண்டி முன்னேறுகிறார். இவர் போன்றவர்க்கே வெற்றி தயாராகக் காத்திருக்கிறது.

ராயல் என்பீல்ட்

ஒப்பந்தப்படி தயாரிப்பவர்கள்:
என்பீல்ட் இந்தியா லிமிடெட்,
மதராஸ்-19

பூரண விற்பனையாளர்கள்:
தி மதராஸ் மோட்டார்ஸ்
பிரைவேட் லிமிடெட்,
மதராஸ் - பெங்களூர் - டில்லி

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணாடி சாமான்கள், பீங்கான், எனாமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவித மான சாமான்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி. டி. மதராஸ்.

S. SANTHOSA NADAR & SON

1/4. EVENING BAZAR . . . . . P.T. MADRAS

BAROOL

கிளை ஆபீஸ் : 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்—3.
7, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

முதல் பாகம் : காரிருள்

‘ஆறிடு மேடும் மடுவும் போலாம் செல்வம்’ என்பர். வல்லரசுகளின் வாழ்வும் அத்தன்மையது தான். இதற்கு உலக வரலாறு எவ்வளவோ சான்று பகரும்.

கால வேகத்திலே தோன்றி வளர்ந்த சாம்ராஜ்யங்கள் மக்களின் வாழ்விலும் நாட்டின் பண்பாட்டிலும் தங்கள் முத்திரைகளைப் பதிக்கின்றன. கால வெள்ளத்தின் சுழிப்பிலே அடிபட்டு அவை இருந்த இடம் தெரியாமலும் போய்விடுகின்றன. அவற்றின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் பற்றிப்பேசும் சாட்சியங்களாக விளங்குகின்றன சரித்திரங்கள்!

தமிழகத்தில் முப்பெரும் வல்லரசுகள் வாழ்ந்து, ஆட்சி புரிந்து, நாட்டை வளம்படுத்தின. உலகத்தின் இதர பல நாடுகளிலும் தங்கள் புகழ் ஒளி பரப்பின. பின் காலச் சூறையிலே சிக்கிச் சிதைந்தும் போயின. எனினும் அவற்றின் எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும் பற்றித் திட்டவட்டமாகக் கூறும் வரலாறுகள் இல்லைதான்.

தமிழகத்தை ஆண்டு வந்த மூவேந்தரில் பாண்டியர்கள் சிறப்புடன் வாழ்ந்த காலமும் இருந்தது. செயல் திறம் இழந்து ஒடுங்கிக் கிடந்த காலமும் உண்டு. மீண்டும் எழுச்சி பெற்றுப் புகழ் ஓங்க அவர்கள் திகழ்ந்த காலமும், பின் தேய்ந்து மறைந்த காலமும் தொடர்ந்தது. அவை பற்றி அறுதியிட்டுச் சொல்லக் கூடிய நிச்சயமான ஆதாரங்கள் கால வெள்ளத்திலே அடிபட்டுப் போயின. ஆயினும், ஆராய்ச்சியும் அறிவும் உண்மையின் சிலசில துணுக்குகளைக் கண்டு தொகுத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்—பாராட்டத் தகுந்ததும் கூட.

அவ்வாறு கிடைத்துள்ள வரலாற்றின்படி, பாண்டி நாட்டில் கி.பி. 3-ம் நூற்றுண்டின் ஆரம்பம் முதல் கி.பி. 6-ம் நூற்றுண்டின் பிற்பகுதி வரை ‘களப்பிரர்’ என்போரின் ஆதிக்கம் நிலவி நின்றது. களப்பிரரின் படையெடுப்பும் ஆளுகையும் பாண்டி நாட்டில் பலப் பல மாறுதல்களையும் புரட்சியையும் உண்டு பண்ணின. இவர்களுடைய ஆட்சிக் காலம் வரலாற்றினரால் ‘இருண்ட காலம்’ எனக் கூறப்பட்டுள்ளது.

நாட்டிலே இருள் பரப்பிய ஆட்சியினரை வென்று ஒழித்து மீண்டும் நல்லாட்சி நிறுவியவன் பாண்டியன் கடுங்கோன். (கி.பி. 575–600.) அம் மன்னனின் லட்சிய தாகமும், முயற்சிகளும், அவனது வீரமும், போராட்டமும், வெற்றியும் புகழுதற்குரியன. காலத்திரையின் பின்னே மூடுண்டு கிடக்கும் அவற்றை ஒருவாறு அறிமுகப் படுத்துவதற்காகவே உதயமாகிறது இந்த ‘விடிவெள்ளி!’

—வல்லிக்கண்ணன்.

1. இருளோடு வந்தவன்

வல்லிக்கண்ணன்

மதுரை மாநகரம் இருளில் மூழ்கிக் கிடந்தது.........

சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த திருநகரம்—வீர மறவரின் புகழ் வளரத் துணைபுரிந்த பெருநகரம்—பாண்டி மன்னரின் தலைநகராய் விளங்கிய அழகு நகரம் காரிருளில் ஆழ்ந்து பொலிவிழந்து நின்றது.

இயற்கை இருள் மட்டுமல்ல; இதர இருள் பண்புகள் பலவும் கரும் போர்வையாய் மூடி மறைத்துவிட்டன அந் நகரின் உயர்வை. 'நீரிலே தவழ்ந்து, நெருப்பிலே நின்று', மன்னர் மடியிலே வளர்ந்து, அறிஞர் நெஞ்சிலே வீற்றுச் சிறப்புற்று உயர்ந்த தமிழ், தனது தாயகத்திலேயே, வீட்டுக்கு வேண்டாத மருமகள்போல ஒதுங்கி ஒடுங்கிக் கிடக்கவேண்டிய நிலை பெற்றிருந்தது.

சைவம் மணம் பரப்பிய மதுராபுரியிலே சமணம் தலைதூக்கி ஆடியது. தமிழ்க் கலையும், தமிழர் நாகரிகமும், சிறந்த மனிதப் பண்புகள் பலவும் சிதைந்துசீர் கெட்டுக் கிடந்தன. அறச் செயல்கள் அழிந்துபட்டன. அறஞ் செய்ய ஆசை கொண்டோர் கூட அஞ்சி நடுங்கிப் பதுங்கி வாழ நேர்ந்த காலம் அது.

சில நூறு வருடங்களிலேயே களப்பிரர்கள் தமிழின் மேன்மையைச் சிதைத்து, தமிழரின் வீரத்தையும் பெருமையையும் ஒடுக்கி, நாட்டின் மாண்பைச் சிரழித்து விட்டார்கள். சோழ நாட்டைப் பிடித்த வியாதி பாண்டி நாட்டையும் தொற்றியது. களப்பிரர்கள் சோழநாட்டில் தங்கள் தலைநகரை அமைத்திருந்த போதிலும், கொடியவர்களான அவர்களது சக்திகள் மதுரையிலும் பேயாட்டம் போடாமலில்லை. பாண்டி நாட்டின் இதர பகுதிகளிலும் அந்த ஆட்சியின் விஷக் கரங்கள் மீண்டும் திடீர் திடீரென்று தொல்லை தருவதும் இயல்பாக இருந்தது.....

பகலிலேயே பாழடைந்த நகரம் போல் தோன்றிய மதுரை இரவு நேரங்களில் அச்சம் தரக்கூடியதாய் விளங்கியது. வீதிகள் எல்லாம் வெறிச்சோடிக் கிடந்தன. மணி என்னவோ எட்டரை அல்லது ஒன்பதுதானிருக்கும். ஆனாலும் ஜனசந்தடி அடங்கிவிட்டது. பத்துப் பதினொரு மணிக்குள்ளாகவே நகரம் மயான உறக்கத்தில் லயித்துவிடும்.

இப்பொழுதுகூட ஒரு சில வீடுகளில்தான் விளக்குகள் 'மினுக்கு மினுக்கென்று' ஒளி சிமிட்டிக் கொண்டிருந்தன. மழைக் காலம் ஆகையால், மழை வந்துவிடும் என்று மிரட்டிய சூழ்நிலையும் குளிர் காற்றும் சேர்ந்து கொண்டு, மக்களை வெகு சீக்கிரமே அவரவர் உறைவிடங்களில் பதுங்கி விடச் செய்தன.

ஆனாலும், ஒரு மனிதன் மழைக்கால மையிருட்டையோ, ஊளை வாடையையோ, அமானுஷ்யமான அமைதியையோ பொருட்படுத்தாமல் நடந்து கொண்டிருந்தான். எங்கு செல்கிறோம் என்ற குறிப்பு எதுவும் இல்லாதவன் போல அவன் சிறு சிறு தெருக்கள் வழியாகத் திரிந்தான். பெரிய வீதிகளில் நடந்தான். அவ்வப்போது சற்று நின்றும், அங்குமிங்கும் பராக்கப் பார்த்தும், அவசரம் இல்லாதவனாக நடந்தான் அவன்.

ஒரு வீதி முனை திரும்பியதும் அவன் வேறொரு உலகத்துக்கு வந்துவிட்டவன்போல் திடுக்கிட்டுத் திகைத்து நின்றான். காரணம், அவ்வீதியில் உள்ள பெரிய பெரிய வீடுகளில் எல்லாம் மிகுதியான விளக்கொளியும் கலகலப்பும் நிலவியதுதான்.

நகரின் இதர பகுதிகளுக்கும் அந்தப் பகுதிக்குமிடையே நீடித்த முரண்பாடுகள்தான் மிகத் தெளிவாகப் புலனாகிக் கொண்டிருந்தன. ஆளும் வர்க்கத்தைச்

சேர்ந்தவர்கள் அங்கு வசித்து வந்தார்கள். **அச்சுதன்கந்தன்** எனும் மன்னன் சோழநாட்டில், அவன் அமைத்துக்கொண்ட தலைநகரில் தங்கியிருந்தான். அவனுக்குப் பிரதிநிதியாய், அவனது உறவினனான **கூற்றன்நாயனார்** மதுரையில் கோலாகலமாக வாழ்ந்து வந்தான். அவனுக்கேற்ற தோழர்களாகத் திகழ்ந்த உறவுமுறையினரும் பிறரும் அவ்வீதியில் உல்லாச வாழ்வு வாழ முடிந்தது.

நாட்டின் சீர்கேடோ, நாட்டு மக்களின் துயர நிலையோ அவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்கு எப்போதும் குடி, விருந்து; எந்நேரமும்கூத்தாட்டம்; விரும்பியபோதெல்லாம் மங்கையர் தரும் இன்பம்தான். பொருள் தேவைப்படும்போது நாட்டினரிடம் கேட்டுப் பெறுவதில்லை அவர்கள். ஆட்களைய னுப்பிக் கொள்ளையடித்துத் தங்கள் நிதி நிலைமையை உயர்த்திக் கொள்வதில்தான் அவர்கள் ஆர்வம் காட்டினார்கள்.

அன்று கூற்றன்நாயனார் மாளிகையில் ஏதோ விசேஷ தினம். செல்வமும், செல்வாக்கும் இருக்கும்போது விருந்தும், விசேஷமும் கொண்டாடத் தனியான காரணமும் வேண்டுமோ? வேண்டியவர்கள் பலரும் ஒன்று கூடி, உல்லாசமாகக் குடித்து ஆனந்தமாகப் பொழுதுபோக்கும் எண்ணம் ஏற்பட்டாலே போதுமே! இருப்பினும் அன்று அவர்கள் ஒன்று கூடுவதற்கு முக்கியமான காரணமும் உண்டு.

தலைநகரிலிருந்து வீரன் **உக்கிரநாதன்** வந்திருந்தான். அவனே களப்பிரர் படையின் சேனாபதி அல்லவாயினும், படையினரிடையே அவனுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. தளபதி **ஜெயகீர்த்தி**க்கு அடுத்த ஸ்தானத்திலிருந்த அவன் எந்நேரத்திலும் படைத் தலைமையைக் கைப்பற்றிக் கொள்ளக் கூடும் என்று கூற்றன்நாயனார் கருதினான். அவனுக்கு உதவி செய்வதன் மூலம் தனது நலன்களைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்ற கள்ளக் கருத்து கூற்றன் உள்ளத்தின் ஒரு மூலையில் பம்மியிருந்தது.

உக்கிரநாதனோடு அவன் நண்பன் **மார்பியஸ்** என்கிற யவனனும் வந்திருந்தான். தனது சோம்பலுக்கும் உல்லாச மனோபாவத்துக்கும் ஏற்ற சில தத்துவங்களை வகைப் படுத்திக் கொண்டு 'ஞானி' என்ற பெயரை எளிதில் பெற்றுவிட்டவன் அவன். "வாழ்க்கை என்பது இன்பங்களை அனுபவிப்பதற்குத்தான். சென்றது நமக்குத் தெரியாது; இனி வரப்போவதையும் நாமறிவோம். இப்பிறவி ஒன்றுதான் நிச்சயமானது. அதை அனுபவித்துவாழாமல் மறுமைக்காக ஏங்கி, நாட்களை வீணாக்குவது பேதமை. அழகிகளும், மதுவும், நாமும் கூடுகிற இடத்திலே சொர்க்கம் ஏற்படுகிறது" —இவ்வாறு பல, பல பேசும் சொல் வல்லவன் அவன்.

இருவரையும் கௌரவிப்பதற்காக அன்றைய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது என்று கொண்டால் அது தவறாகாது. முக்கிய பிரமுகர்கள் பலர் விருந்தில் கலந்துகொண்டார்கள். பல்சுவை உணவும், மதுவும் தாராளமாகப் பரிமாறப்பட்டன. இசை விருந்தும், நாட்டியமும் நிகழ்ந்தன. பேச்சுக்கும் சிரிப்புக்கும் குறைவே இல்லை.

பூசுந்தரி எனும் ஆடலழகி ஒய்யாரமாக நடனமாடிக் கொண்டிருந்தாள். அவள் அழகையும், அசைவுகள்தோறும் மலர்ந்த புதுப் புதுக் கவர்ச்சிகளையும் விருந்தினர் பார்வையால் விழுங்கி வியந்தபடி இருந்தனர்.

மார்பியஸ் அளந்து கொண்டிருந்தான்:

'கடவுளரை மனிதராக மாற்றவும் வேண்டாம். மனிதர்களைக் கடவுளராக மாற்ற ஆசைப்படுவதும் சரியல்ல. ஆனால் கடவுளர்கள் மனித உருவில் வந்து அற்புதங்கள் செய்ததாகப் பேசுவதில் பெருமையடைகிறார்கள் ஜனங்கள். அதேபோல ஒரு சில மனிதர் கடவுள்தன் வேலைகள் செய்தனர் என்று சொல்வதிலும் அவர்களுக்கு உற்சாகம் அதிகம்தான். இந்தப் பாண்டிநாட்டுத் தமிழர்களையே பாருங்களேன். **வடிம்பலம்ப நின்ற பாண்டியன்** என்று ஒருவன் இருந்தானாமே......'

'ஆமாம். ஒரு சமயம் கடல் பொங்கி எழுந்தபோது அவன் வேல் எறிந்து அதை அடக்கிவிட்டதாகச் சொல்கிறார்கள்' என்று **விஷ்ணுசிம்மன்** கூறினான். இவன் மதுரையில் குடியேறி,

செல்வச்சீமாட்டி, அந் நகரத்துப்பெண்ணை மணந்து கொண்டு சுகமாக வாழ்பவன்.

மார்பியஸ் பிரமாதமாகச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பு வீதியிலே வந்து ஒரு ஓரத்தில் சுவரோடு சுவராக இருளில் கலந்து நின்றவனின் காதுகளை அறுப்பதுபோல் ஒலித்தது. மேலும் காது அடைபட்டுப் போகும்படி அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்ததுபோல் எழுந்தது யவன ஞானியின் பேச்சு.

"அதைத்தான் நானும் குறிப்பிடுகிறேன். பொங்கி எழுந்தது பிரளயம். உலகமே அழிந்துபட்டது.

ஆனால் எங்கள் பாண்டியன் அருகே வந்ததும் அது அவன் பாதங்களைத் தொட்டு அலம்பி வணங்கி வடிந்து விட்டது என்று சொல்கிறார்களே, எவ்வளவு அபத்தமான பேச்சு!' என்றான் அவன்.

'தலைக்கனமான தற்புகழ்ச்சி!' என்று உறுமினான் உக்கிரநாதன்.

'அளவில்லாமல் தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வதில் இந்தத் தமிழர்களுக்கு இணையாக வேறு எவருமே இருக்கமுடியாது' என்று கூற்றுவன்நாயனார் கூறினான்.

'வீண் பெருமைதான்! உண்மையில் அவர்கள் பொட்டுப் பூச்சிகளாகவும் புழுதியோடு புழுதியாகி மறைந்து கிடக்கும் தேரைகளாகவும்தான் எனக்குத் தோன்றுகிறார்கள்......'

மார்பியஸ் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

அவ்வேளையில்தான், அங்கிருந்தவர்களில் யாருமே எதிர்பாராத — எதிர்பார்க்க முடியாத — அந்தச் சம்பவம் வெடித்தது. அனைவருக்கும் அதிர்ச்சி அளித்தது.

திறந்திருந்த சாளரம் ஒன்றின் வழியாக 'விஷ்' என ஓசை எழுப்பி வேகமாக வந்த ஒரு பொருள் சரவிளக்கின் பித்தளைச் சங்கிலிமீது 'நங்கென்று' மோதியது. தரையில் விழுந்தது. அது எழுப்பிய ஓசையோடு கலந்தது நாட்டியமாடி நின்ற பூசுந்தரியின் பயம் தொனிக்கும் கூச்சல். எல்லோர் பார்வையும் கீழே விழுந்த பொருள் மீது பதிந்தன.

சிறு கை ஈட்டி அது. அதன் முனையில் ஓலை ஒன்று சொருகப்பட்டிருந்தது.

கூற்றன்நாயனார் உத்திரவிடவும், பணியாள் ஒருவன் அதை எடுத்து அவனிடம் தந்தான்.

முதலில் வியப்பினால் அகன்ற கூற்றனின் கண்கள் ஓலையைப் படித்ததும் கனல் எழ உருட்டி விழித்தன. 'ஏய், ஆட்களை ஏவு! எங்கும் தேடச்சொல். இதை எறிந்தவன் உடனே பிடிபட வேண்டும். சீக்கிரம்!' என்று கொக்கரித்தான் அவன்.

அவன் கட்டளையை நிறைவேற்ற ஓடினர் சிலர்.

'சிங்கத்தின் குகையிலே வாலாட்டத் துணிந்திருக்கிறது ஏதோ ஒரு நரி! எச்சரிக்கையாம்! ஹூஹ்' என்று உறுமல் பிறந்தது அவனிடமிருந்து.

'என்ன ஓலை அது?' என்று கேட்டான் உக்கிரநாதன்.

'நமக்குச் சாவோலையாம்! "நாட்டைச் சீர்கெடுத்துத் தாம் வாழ முயல்கின்ற நாசகாரர்களே! உங்களுக்கு அழிவு காலம் நெருங்கி விட்டது! அகங்காரம் வேண்டாம்!" இவ்வளவே இதில் எழுதப்பட்டிருக்கிறது. ஒரு கொடியும் பூமாலையும் கீழே

பொறிக்கப்பட்டுள்ளன' என்றான் கூற்றன்.

விஷ்ணுசிம்மன் அந்த ஓலையை வாங்கிக் கூர்ந்து நோக்கினான். 'கொடியில் ஒரு மீன் இருக்கிறது. மாலை வேப்பம்பூ மாலையாக இருக்கலாம்' என்றான்.

'ஏனோ?' உக்கிரநாதனின் கேள்வி இது.

'இவை பாண்டியரின் சின்னங்கள்!'

'பாண்டியர்களே ஒழிந்துவிட்டபிறகு அவர்களின் சின்னங்களுக்கு இந்த ஓலையில் என்ன வேலை?' என்று முணுமுணுத்தான் படைத் தலைவன்.

'வேலையற்றவன் எவனோ விட்டெறிந்தவைதானே இந்த ஓலையும் ஈட்டியும்?' என்றான் விஷ்ணுசிம்மன்.

'இதை நாம் அலட்சியப்படுத்துவதற்கில்லை. சிறிது காலமாகவே நாட்டில் குழப்பங்களும், பகைமையும் நம் மீது வெறுப்பும் உள்ளூற வளர்ந்து வருவதாக எனக்குச் சந்தேகம் உண்டு... இன்று இரவுதான் சிறு ஆதாரம் கிடைத்திருக்கிறது' என்று கூற்றன் நாயனார் அறிவித்தான்.

'யோகிகளும் போகிகளும் நள்ளிரவில் கண் விழித்திருப்பார்கள் என்று கூறுகிறார்கள். கொள்ளைக்காரர்களும் சூழ்ச்சி செய்வோரும்கூட இரவில் வெகுநேரம் வரை விழித்திருப்பார்கள்' என்று சொல்லி, தான் இருப்பதைக் காட்டிக்கொண்டான் மார்பியஸ்.

கூற்றன் பேச்சைக் கேட்டு முகம் சுளித்தான் உக்கிரநாதன். 'சந்தேகம் எழுந்த பிறகும் தூங்கிக்கொண்டிருப்பது சரியல்ல, நண்பரே. உம்மிடம் அதிகாரம் இருக்கிறது. ஆள் பலம் இருக்கிறது. வேறென்ன வேண்டும்? உள்ளூற அரிக்க ஆரம்பித்துள்ள கறையான்களை புற்றோடு சேர்த்து அழித்திருக்கவேண்டாமா?' என்று குறை கூறினான் அவன்.

கூற்றனின் புருவங்கள் மேலேறி நெளிந்து இறங்கிச் சமநிலை பெற்றன. வெகுண்டெழுந்த சீற்றத்தின் குறி தான் அது. ஆயினும் அவன் தன்னை அடக்கிக்கொண்டான்.

இதற்குள் வெளியே ஓடிச் சென்ற ஆட்கள் திரும்பி வந்தார்கள். 'எங்கும் எவரையும் காணவில்லை' என்று பணிவுடன் தெரிவித்தார்கள்.

'மடையர்கள்' என்று கர்ஜித்தான் கூற்றன். 'எவனும் வீசி எறியாமல், மாயத்தினாலா இது வந்து விழுந்தது? தீப்பந்தங்களோடு தேடச் சொல்லு. தெருத் தெருவாகத் தேடட்டும். எவனும் அகப்படாவிட்டாலும், ஊரார் பயந்து நடுங்கட்டும்!' என்று கட்டளையிட்டான் அவன்.

2. சிறிது வெளிச்சம்

இருளோடு வந்து, ராஜ வீதியின் வெளிச்சத்தைக் கண்டு ஒரு மாளிகையின் சுவர் மறைவில் பம்மி நின்றவன், அங்கு மாடிக்குள் எழுந்த அட்டகாசச் சிரிப்பைக் கேட்டுப் புகைந்து நின்றான். மேலும் மேலும் எவ்விய அகம்பாவ ஒலிபரப்பைக் கேட்டுப் பொங்கினான்.

'நமது நாட்டில் வாழ வந்தவர்கள்—நம்மை மிதித்து மேலே ஏறி உயர்ந்தவர்கள்—நம்மையும் நமது முன்னோரையும் கேவலமாகக் கருதி எள்ளி நகையாடும் காலமும் வந்ததே' எனக் குமைந்தது அவன் உள்ளம். உணர்ச்சி வசப்பட்டான் அவன்.

எவ்விதமேனும் உரியவர்களிடம் சேர்ப்பித்துவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு அவன் தயாரித்து வைத்திருந்த ஓலையை எடுத்தான். அதை ஈட்டியில் குத்தி, குறிபார்த்து விட்டெறிந்தான்.

அதனால் பரபரப்பு விளையும் என்பது கூடவா அவனுக்கு? விரைவில் அங்கிருந்து தப்பி நகர்ந்து விடும்படி தூண்டியது உள்ளுணர்வு. அவன் பெருஞ் சுவர்களின் நிழலோடு நிழலாகப் பம்மி, ஓசையின்றி வேகமாக நடந்தான். மாளிகைகளின் பின்புறமாகச் சென்ற போது, இரு பெரும் பவனங்களிடையே சிறு சந்து ஒன்று தென்பட்டது. இருள் மண்டிய அக்குறுகல் வழியினூடு புகுந்த அவன் ஒரு இடத்தில் சுவரோடு ஒண்டி நின்றான். திடுக்கிட்டான்.

அந்தச் சுவர் நகர்ந்து விலகுவது போன்ற உணர்வு ஏற்பட்டதுதான் அதற்குக் காரணமாகும். அது ஒரு கதவு என்பதும், உள்ளே தாழிடப் பெருமலே அது சும்மா அடைத்துவைக்கப்பட்டிருந்தது என்பதும் உடனடியாகவே அவனுக்குப்புரிந்துவிட்டது. அதனால் தைரியம் அதிகமாயிற்று. அது முகத்திலே முறுவல் பூக்கச் செய்தது.

'யார் வீடாக இருந்தால் நமக்கென்ன? நாம் இங்கு குடியிருக்கவா போகிறோம்? கொஞ்ச நேரம் பதுங்கியிருப்போம். வீதியில் சந்தடியும் ஆர்ப்பாட்டமும் ஒடுங்கியவுடனே வெளியேறி விடலாம்' என்று பேசியது அவன் மனம்.

அவன் அக்கதவைத் திறந்து, மெதுவாக உள்ளே புகுந்தான். அது தோட்டத்திற்குள் வழிவிட்டது. அவன் நன்றாகத் தாழிட்டுவிட்டு சுவரோடு ஒட்டி நின்று உற்றுக்கேட்டான்.

வெளியே இரண்டு மூன்றுபேர் நடந்து வருவது போன்ற ஓசை எழுந்தது. கொஞ்சம் கொஞ்சமாகக் கனத்தது. பின் தேய்ந்து மறைந்தது.

'ஆட்கள் தேடித் திரிகிறார்கள். நல்ல சமயத்துக்குக் கதவு நமக்கு உதவியது' என்று எண்ணி மகிழ்ந்தான் அவன்.

நேரம் மெதுவாக ஊர்ந்தது. வேறு குழப்பமோ ஒலிகளோ எழவில்லை என்றே அவனுக்குத் தோன்றியது. ஆகவே கதவைத் திறந்து கொண்டு வெளியேறலாம் என்று துணிந்தான் அவன். மேலும் ஒருசில கணம் தயங்கி நின்றான். தாழ்ப்பாளை அகற்றினான். அது 'டடக்' எனச் சிற்றொலி எழுப்பவும் அவன் நெஞ்சு 'திக்திக்'கென அடிக்கத்தொடங்கியது.

'அவசியமற்ற பயம்' என முழங்கியது உள்ளம். அவன் கை கதவை மெதுவாத் திறக்க நீண்டது. அதே சமயம் அவன் தோளைப் பற்றி யாரோ அவனை வேகமாகப் பின்னுக்கு இழுக்கவும் அவன் திடுக்கிட்டான். அவ்வேளைக்கு பயம் அவனை ஆட்கொண்டது. அவன் உடலில் சிறு நடுக்கம் பரவியது.

'பயம் வேண்டாம். இப்ப வெளியே றினால் நிச்சயம் ஆபத்து எதிர்ப்படும்' என்று எச்சரித்தது ஒரு மென்குரல். அது பெண்குரல் என அவன் உணர்வு சொன்னது.

'யாரையோ தேடிப்பிடிக்க குதிரை வீரர்கள் தீப்பந்தமும் கையுமாகக் கிளம்பி யிருக்கிறார்கள். நீ யாராக இருந்தாலும் சரி. இவ்வேளையில் அவர்கள் முன்னே போய் விழுவது உனக்கு நன்மை பயக்காது' என்றாள் அவள்.

'என்னைக் காக்க வந்த அன்னை வாழி!' என்றான் அவன்.

'நீ பாண்டி நாட்டவனோ?' என்று அவள் வினவினாள்.

'ஆம்' என்று அவன் மெதுவாகச் சொன்னான்.

'நல்ல இடம் பார்த்தாயே ஒளிந்து கிடப்பதற்கு! இது விஷ்ணுசிம்மனின் இல்லம் ஆயிற்றே!' என்று அவள் கூறினாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை. சொல்வதற்கு என்ன இருக்கிறது? அவளும் மௌனமாக நின்றாள். பிறகு சொன்னாள்:

'ஆட்கள் சந்தேகமடைந்து ஒவ்வொருமாளிகையின் பின்புறமெல்லாம் தேட வந்தாலும் வரலாம். எதற்கும் முன்னெச்சரிக்கையோடு இருப்பது

நல்லதுதானே? நீ இங்கேயே நிற்க வேண்டாம். பாதுகாப்பான இடம் ஒன்று காட்டுகிறேன், வா!'

அவள் முன்னால் நடந்தாள். அவனும் அவள் பின்னாலேயே சென்றான். அவள் செய்கையில் தீயநினைவு கலந்திருக்குமோ என்ற ஐயம் அவன் மனதிலே பிறந்தது. 'சீ என்ன நினைப்பு!' என்று கடிந்தது மனசின் ஒரு பகுதி.

ஒரு இடத்தில் சென்றபோது மாடம் ஒன்றிலிருந்து வெளிப்பட்ட ஒளிக்கற்றை அவள் முகத்தை வருடியது. அப்பொழுது அவன் அம்முகத்தை ஒருவாறு அறிய முடிந்தது. அருள் பூத்த முகம் அது. அன்பு தவழும் விழிகளும் மனநிறைவும் அம்முகத்துக்குத் தனிரக எழில் சேர்த்தன. அவள் முதியள் அல்லள். எனின், இளையவளும் அல்ல.

தோட்டத்தின் ஒரு புறத்தில் சிறு வீடு போன்ற அமைப்பு தென்பட்டது. அதன் கதவைத் திறந்து அவனை உள்ளே அனுப்பி வைத்தாள் அவள். 'நான் வந்து அழைக்கும் வரை இங்கேயே இரு. உனக்கு எவ்வித ஆபத்தும் வராது' என்று அவள் உறுதி கூறினாள்.

'நான் உன்னை உள்ளே விட்டு, வெளியே கதவைப் பூட்டி விடுவேன். ஒரு வேளை காவலர்கள் வந்தாலும், பூட்டைப்பார்த்து விட்டுத்திரும்பி விடுவார்கள். இல்லையெனில், கதவைத் திறந்து உள்ளே பார்க்க ஆசைப்படுவார்கள். அவர்களுக்கு நாம் ஏன் அந்த ஆசையையம் வீண் வேலையும் கொடுக்க வேண்டும்?' என்று சொல்லி அவள் மெதுவாகச் சிரித்துக் கொண்டாள். அவனிடமிருந்து மறுமொழி எதையும் எதிர்பாராமலே அவள் கதவை அடைத்து வெளியே பூட்டிக் கொண்டாள்.

அவள் வந்த ஓசை அவன் காதில் விழாதது போலவே, அவள் அங்கிருந்து எப்படி நகர்ந்தாள்—எந்தப் பக்கம் போனாள்—என்று புலப்படுத்தும் சத்தமும் கேட்கவில்லை. அவளை நம்பலாம் என்று தோன்றியது. ஒரு சமயம். 'அவளை நம்பலாமா' என்ற சந்தேகமும் எழுந்தது அவனுக்கு. தன்னை அறைக்குள் போட்டுப் பூட்டி விட்டுச் சென்றவள் காவல்காரர்களை அழைத்து வந்து காட்டிக் கொடுத்து விட்டாலோ? அவன் மனம் அரித்தது.

'சரி, சரி வருவது வரட்டும். என்ன வந்தாலும் ஏற்றுக் கொண்டு எதிர்த்து நிற்க வேண்டியதுதான்' என்று தீர்மானித்தான் அவன்.

வீதியில் 'சடபட'வென ஒலித்தது குதிரைகளின் குளம்பொலி. தான் பத்திரமாக இருப்பதை எண்ணி மகிழ்வுற்றான் அவன். 'என்னைக் காட்டிக் கொடுக்க விரும்பியிருந்தால் அவள் இந்த இடத்துக்கு அழைத்து வந்திருக்க வேண்டாமே? அங்கேயே நிற்க வைத்திருந்தாலே போதும்' என்று நினைத்தான். 'இவள் தமிழ் மகளாகத் தான் தோன்றுகிறது. விஷ்ணு சிம்மனின் மாளிகையைச் சேர்ந்தவளாகவே இருக்கலாம். இருந்தாலும் இருட்டிலே அவள் என்னை எப்படிக் கண்டு பிடிக்க முடிந்ததோ தெரியவில்லை' என்று குழம்பியது அவன் உள்ளம்.

அங்கங்கே திடீர் திடீரென்று ஆரவமும், கூவலும் அழைப்பும் எழுந்தன. ஒடுங்கின. சுவர்கள் மீது ஏறிக் குதிக்கிற மாதிரியும், உதிர்ந்த சருகுகள்

மேல் நடப்பது போலவும் ஓசைகள் வந்தன. தேய்ந்தன. ஒரு சமயம் அந்தச் சிறு குடிலின் அருகிலேயே பேச்சொலி கேட்டது. சிலர் நடந்து வருவது போலவும் இருந்தது. 'திமுதிமு'வென எரியும் தீப்பந்தங்களின் சுவாலை பரப்பிய ஒளி வீச்சு சிறுசிறு இடைவெளிகளின் வழியாக அவ் வீட்டினுள்ளும் எட்டிப் பார்த்தது.

அவன் நெஞ்சு பதை பதைத்தது. அவள் ஆட்களை அழைத்து வந்து விட்டாள் என்று கொதித்தது மனம். ஆயினும் விபரீதமாக எதுவும் நிகழவில்லை, ஒளி குன்றியது. ஆட்கள் போய் விட்டார்கள் என்றும் புரிந்தது. அவள் பேரில் சந்தேகம் கொண்டதற்காக அவன் வருந்தினான். இதயத்தின் ஆழத்திலிருந்து எழுந்த வருத்தம் அது. தன்னை இன்னான் என அறியாதபோதும் பாண்டித் தமிழன் என்பதற்காகத் தனக்கு அன்பாலும் அனுதாபத்தாலும் உதவி செய்யத் துணிந்தவளைப் பற்றித்தான் தவறுதலான எண்ணம் வளர்ந்து விட்டதற்காக நாணுற்றான் அவன்.

இருளில் தன்னந் தனியனாய், ஆபத்தான சூழ்நிலையில், தங்கி யிருந்த அவனுக்கு நேரம் மெதுவாக—மிக மிக மெதுவாக — ஊர்வது போல் பட்டது. அவனால் உறங்கவும் முடியாது. அந்த இடத்தில் அவனுக்கு அப்பொழுது எப்படி உறக்கம் வரும்? ஆகவே, என்னென்னவோ எண்ணியவாறு உட்கார்ந்திருந்தான் அவன்.

வெளியே 'கிளிக்' எனும் ஒலி எழுந்தது. பூட்டு திறக்கப்படும் ஓசை நாதாங்கி அகற்றப்படும் ஒலியும் வந்தது. அவன் எச்சரிக்கையோடு நிமிர்ந்து உட்கார்ந்தான். 'நான்தான்' என்று மெதுவாகக் குரல் கொடுத்தபடி அவள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள். மீண்டும் அதை அடைத்துத் தாழிட்டுவிட்டு அங்கு ஒரு இடத்திலிருந்த சிறு விளக்கை ஏற்றினாள். அவனைக் கவனித்தாள்.

அவனும் அவளை ஆராய்ந்தான். அவளுக்கு சுமார் முப்பது வயது இருக்கும் என மதித்தான் அவன். எளிமையும் சுத்தமும் கலந்த ஆடை அவளுடைய அழகுக்கு இனிமை சேர்ந்தன.

'அம்மா, எனக்கு நீங்கள் செய்த உதவி மிகப் பெரியது. எனது நன்றியை......'

'பேச வேண்டாம்!' என்று விரல்களால் வாயைப் பொத்தி சாடை காட்டினாள் அவள். 'எங்கும் அமைதி ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது நீ வெளியேறலாம்' என்றாள்.

'தெய்வம் போல் வந்து உதவிய தாங்கள் யார் என்று...'

அவள் மென்முறுவல் பூத்து, குறுக்கே பேசினாள்: 'நான் தெய்வம் ஒன்றுமில்லை. சாதாரணப் பெண் தான். தமிழ் புலவர் ஒருவரை நான் எதிர்பார்த்து நின்றேன். திடீரென்று வெளியே ஏதோ பரபரப்பு ஏற்பட்டது போல் தெரிந்து, பின்புறக் கதவைத் தாழிடலாம் என்று வந்தேன். நான் கைவைத்த சமயம் கதவு திறந்து கொள்ளவும் விலகி நின்று கவனித்தேன். பிறகுதான் உனக்கே தெரியுமே!'

அவள் அவனைக் கனிவுடன் நோக்கினாள். 'நீ சிறு பிள்ளைதான் இன்னும்!' என்றாள். குறுநகை புரிந்தாள்.

என்ன கருத்தில் அவள் அப்படிச் சொன்னாள் என்பதை அவனால் புரிந்து கொள்ள இயலவில்லை. 'நீங்கள் யார் என்று...' ஆரம்பித்தான்.

'அவசியம் தெரிந்து கொள்ள வேண்டுமா என்ன?' என்று கேட்ட அவள் அவளுக்கு இயல்பான மென் சிரிப்பைக் காட்டினாள். 'நான் **மங்கையர்க்கரசி**. இவ்வளவு போதும் இப்பொழுது. உன் பெயர் என்ன?' என்றாள்.

'**இளம்வழுதி**. நான்...'

'மற்றக் கதை எல்லாம் வேறொரு சமயம் கேட்டுக் கொள்கிறேன். இப்ப நீ இங்கிருந்து செல்வதே நல்லது' என்று கூறி, விளக்கை அணைத்து விட்டு வெளியே வந்தாள் அவள்.

அவனும் அங்கிருந்து நகர்ந்தான். அவள் வழிகாட்ட, தோட்டத்தின் வாசலை அடைந்தான். அவளுக்கு வணக்கம் அறிவித்துவிட்டு இருள் மண்டிய வீதியில் அடி பதித்தான். அவனுக்குப் பின்னால் கதவு தாழிடப் படும் ஓசை எழுந்து விடைகொடுத்தது.

அப்பொழுது சிறு தூறல் பன்னீர் தெளித்துக் கொண்டிருந்தது' இரை தேடித் திரியும் பாம்புபோல் வாடைக் காற்று 'உஸ்-ஊஸ்' என்று மூச்சுவிட்ட படி' நெளிந்தது. தோட்டங்களில் புஷ்பித்த இரவு நேர மலர்களின் நறுமணம் 'கம்'மென்றுபரவி நாசியைத் தாக்கியது. எங்கும் நிசப்தம்.

இளம் வழுதி வேகமாக நடந்தான். பெரிய வீதிகளின் வழியாகச் செல்லாமல், கிளைப் பதைகளினூடும், சந்துகள் சிறு தெருக்களினூடும் புகுந்து சென்றான் அவன்.

ஒரு திருப்பத்தைக் கடந்து சற்றே பெரிய தெரு ஒன்றில் திரும்பியபோது அவன் காலில் ஏதோ தடுக்கியது. அவன் குனிந்து நோக்கவும், அது ஒரு மனிதன் என்று தெரிந்தது. செத்தவன் உடலாக இருக்குமோ என அறிய முயன்றான் அவன்.

கீழே விழுந்து கிடந்த ஆளுக்கு நன்றாக மூச்சு ஓடிக் கொண்டிருந்தது. இளம் வழுதி அந்த நபரைத் தொட்டுத் தட்டி உலுக்கத் தொடங்கவும். அசைவு பிறந்தது. 'ஐயா...யாரய்யா இது? மயக்கமா? அல்லது குடி போதையா?' என்று கேட்டான் அவன்.

'இரண்டுமல்ல. நீயார்?' என்று கேட்டபடி அந்தப் பெரியவர் எழுந்து உட்காருவார் என அவன் எதிர் பார்க்கவேயில்லை. ஆதலால் திடுக்கிட்டுப் போனான். பிறகு சமாளித்துக்கொண்டு 'வழிப்போக்கன்' என்றான்.

'நெடும் போக்காக, திரும்பாத வழியில் செல்லத் துணிந்து மதுரை வீதியில் திரிகிறாயா? இன்று இம் மூதூர் நரகத்தின் தலைவாசலாக மாறி யிருக்கிறதே!' என்று முனங்கினார் அவர்.

'குதிரை வீரர்கள் உங்களைத் தாக்கினார்களோ? பலத்த காயமோ?' எனக் கேட்டான் இளம் வழுதி.

'இங்கேயிருந்து உரையாடுதல் கூடாது. என்னைச் சற்றே தூக்கு' என்றார் அவர்.

'உங்களால் நடக்க முடியுமா?' என்று வழுதி ஐயத்தோடு வினவினான்.

'முடியும். உன் தோளைப் பற்றிக் கொண்டு நடக்கத் துணைபுரிந்தால் போதும். நான் செல்ல வேண்டிய இடம் அதிகத் தொலைவிலும் இல்லை. இரவின் மீதப்பொழுதை நீ என் வீட்டிலேயே போக்கலாம்' என்றார்,

இருவரும் மெதுவாக நடந்தார்கள்.

'உனக்கு இந்த நகரமில்லை என்று நினைக்கிறேன். எங்கிருந்து வருகிறாய்?' எனப் பெரியவர் விசாரித்தார்.

'செவ்விருக்கை நாடு' என்ற பதில் கிடைக்கவும் அவர் நின்று அவன் முகத்தை உன்னிப்பாகக் கவனித்தார்.

'செவ்விருக்கைநாடு-இளம்வழுதி! ...நீ பாண்டியன் மரபினன் தானே?' என்று கேட்டார் அவர். அவன் 'ஆம்' எனத் தலையசைக்கவும், அவர் கடுகடுப்பாகச் சொன்னார்:

'அந்தப் பேரைச் சொல்லாதே. உன் ஊரையும் பேரையும் இங்கு உரக்கக் கூறாதே! இனி வாய் திறவாமல் என்னோடு நட!'

அதன் பிறகு அவரும் பேசாமலே நடந்தார்.

(வளரும்)

கன்னித்தமிழ் வளர்த்த கூடல்மாநகரம், களப்பிரர் பிடியிலே சிக்கிச் சீரழிந்த காலமது. பாண்டியநாட்டினர் பொலிவிழந்து குன்றி நின்ற வேளையில், ஊராளவந்தோர் உல்லாசமாக வாழ்ந்தார்கள். 'விடிவெள்ளி'யின் முதல்படியில் அந்த உல்லாசபுரியினரைச் சந்திக்கின்றோம். 'வல்லிக்கண்ண'னின் எழுத்தோவியத்தை, உயிரோவியமாக்கி இவ்விதழ் முகப்புச் சித்திரமாக வழங்குகிறார் ஓவியர்ராமு.

போன் : 55142

லோட்டஸ் சேமியா

இது விஞ்ஞான ரீதியில் சுத்தமாகச்
செய்யப்பட்டது.

யாவரும் இதை உபயோகியுங்கள்!

கிடைக்குமிடம் :

லோட்டஸ் சேமியா கம்பெனி

81, G. A. ரோட்,
மதராஸ்-21.

தந்தி : குமரன்

டெலிபோன் : { மில் 93, ஆபீஸ் 538 }

குமரன் மில்ஸ் லிமிடெட்,

பூளைமேடு P.O. கோயமுத்தூர்.

நிறுவப்பட்டுள்ள கதிர்கள்	...	19,044
மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு	...	5,900

நாங்கள் உயர்தரமான 20^s 36^s 40^s 60^s 80^s நிர். பருத்தி நூலும்,
20^s நிர். ஸ்டேபிள் பைபர் நூலும் தயார் செய்கிறோம்.

**எங்கள் நூலை
சென்னை ஆந்திர மாகாணங்களில்
மிகுதியாக உபயோகப்படுத்துகிறார்கள்.**

Sri G. V. RAMASWAMY NAIDU &
Sri G. V. MUTHUSWAMY NAIDU
Committee of Directors.

இரண்டாவது பரிசுக் கதை :

தீபம் அணைந்தது

ஷேரலி

முன்னுரை

சரித்திரச் சான்று தேடி சிவகங்கைச் சீமையின் சமீபமுள்ள காளையார் கோவிலுக்குச் சென்றேன். ஒரு காலத்தில் 'கானப்பேரெயில்' என்ற பெயரில் விண்ணைத் தொடும்படியான பெரும் பெரும் மாட மாளிகைகள், கூடகோபுரங்கள், பாதாளலோகத்தை எட்டும் ஆழமான அகன்ற அகழிகள் ஆகியவற்றை யெல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டு தென்னகமே தன்னைத் திரும்பி காணும்படியான அட்டகாசச் சிரிப்பைத் தெரித்தது இதே காளையார் கோவில்தான் !

நான் கோயிலுக்குள் நுழைந்தபோது முதன் முதலில் என் கண்ணில் எதிர்ப் பட்டது ஒரு வெள்ளைத் தாடி துறவி ! கழுத்திலும் கையிலும் உத்திராட்சக் கொட்டை, விபூதிப் பட்டை சகிதமாக காட்சி யளித்த அவரை அணுகி நான் வினவ, தான் வைத்திருந்த பல சுவடி முத்துக்களைக் கொடுத்தார். அதன் பின் அங்கேயே நின்று அப்பொழுதே மற்றொரு சுவடியில் என்ன வெல்லாமோ எழுதினார். எழுதி முடித்ததும், 'தம்பி! இது கோர்வையில் லாதது. படிப்பது மிகவும் சிரமம்; நீ கோர்வையாக்கி படித்ததின் பின் உனக்கு சந்தேகங்கள் எழுமானால் இதோ இந்தச் சுவடியில் இப்போது நான் எழுதினேனே அது உன் சந்தே கங்களை நிவர்த்தி செய்யும். ஆனால் ஒன்று, நீ இந்த ஏடு முழுவதும் படிக்கும் முன் இதைப் படிக்கக்கூடாது. இதோ வாக்குறுதி கொடு!' என்றார். நானும் வாக்குறுதி கொடுத்துவிட்டு அம் முத்துக்களைப் பெற்றுக் கொண்டேன்.

தான், காசியோ, இராமேஸ்வரமோ யாத்திரை போகும் முன் அச்சுவடிகளை என்னிடம் சேர்த்துவிட்டதில் பரம திருப்திபட்டுக் கொண்டார். 'என்னை இனி நீ காண முடியாது' என்றும் சொல்லிக் கொண்டார்.

நான் ஒவ்வொரு முத்துக்களாக எடுத்து—ஆரமாகத்தொடுக்கநினைத்துக் கோர்க்கவாரம்பித்தேன்.

1. விளக்கு

'ஆசாகு எந்தை
யாண்டுளன் கொல்லோ
குன்றத் தன்ன
களிற்றொடு பட்டோன்
வம்பலன் போலத்
தோன்றும் உதுக்காண்
வேனல் வரிஅணில்
வாலத் தன்ன
கான ஊகின்
கழன்றுகு முதுவீ
அரியல் வான்குழல்
சுரியல் தங்க
நீரும் புல்லும்
ஈயாது உமணர்
யாரும்இல் ஒருசிறை
முடத்தொடு துறந்த
வாழா வான்பகடு
ஏய்ப்பத் தெறுவர்
பேருயிர் கொள்ளும்
மாதோ அதுகண்டு
வெஞ்சின யானை
வேந்தனும் இக்களத்து
எஞ்சலில் சிறந்தது
பிறிதொன்று இல்லெனப்

படைத்தவர்.

பண்கொளற்கு
அருமை நோக்கி
நெஞ்சற வீழ்ந்த
புரமை யோனே!'

—எழுதி முடித்ததும் எழுத்தாணி யைக்கீழே வைத்தாள். தான் எழுதிய அந்தப் பாடலைக் கையிலெடுத்தாள்.

ஒருமுறைஇருமுறையென பலமுறை உரக்க

வாசித்தாள். உதட்டோரத்தில் குறு நகை அரும்பச் செய்து கொண்டாள்.

'சுதமதி' இதுதான் இவள் பெயர். சில நாட்களுக்கு முன்பு உடைந்த உள்ளம்–தளர்ந்த நடை–புசிக்க உண வின்றி பசிப்பிணியால் வாடித் துவண்ட உடலாக இருந்த இவள், இன்று அத்தாணி மண்டபத்தில், அணி தேர்ப் புரவி ஆட்பெரும் படையுடன் வேந்தன் வேங்கைமார்பனின் பட்ட மகிஷியாக நிமிர்ந்த நன்னடையுடன், நேர் கொண்ட பார்வையோடு வலம் வருகிறாள்.

இவளுக்குத் திடீர் என்று அடித்துக் கொண்டது தான் யோகம். இவள் சகோதரன் மட்டும் இறந்திருக்கா விட்டால், இவள்-இன்று-இங்கே-இருந்திருப்பாளா என்பது சந்தேகம் தான்!

நறிய பசலை நிறத்தினளான இவள் மாறேருக்கத்தினள். இவளும், இவள் சகோதரனும், கரிய இருளில் கானப் பேரெயிலின் எல்லைக்குள் கால் வைத்த போது வழிப்பறிக்கு ஆளாயினர். அந்த வழிப்பறியில் தான் நடந்தது உயிர்ப்பறியும்!

தன் சகோதரன் இரத்தக் களரியிலே மிதக்க, தலைவிரிகோலத்துடன் அழுதுகொண்டிருந்தாள் சுதமதி. அப்பொழுது அவ்வழியே வந்த கட்டிளங்காளை தான், வேந்தன் வேங்கைமார்பனின், படை வீரர்களில் ஒருவன் எனவும் கொற்றவனிடம் கூறி அவள் வாழ்க்கைக்கு வழிவகுத்துத் தரச் செய்வதாகவும் சொல்லி அழைத்து வந்தான்.

இரு நாட்கள் வரை காயத்தின் காரணத்தால் படுக்கை விட்டு எழாத அவள் சகோதரன், மூடிய கண்ணைத் திறந்து தூக்கத்திலிருந்து விடுபடாமல் மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்தான். அது கண்டு விம்மினள்–பொருமினள்–வேதனையே உருவெடுத்து ஊண் உறக்கம் ஒன்றுமே இன்றி இருந்தாள்.

இறுதியாக ஒருநாள் அந்தஏழைப்போர் வீரனிடம் வந்தாள். 'எனக்கு விடை கொடுங்கள்; வேந்தனிடம் என்னை அழைத்துச் செல்கிறேன் எனக் கூறி ஏமாற்றி விட்டீர்கள்; பரவாயில்லை! என்பால் உள்ள சிறு புலமையால் நான் கவி பாடி பிழைத்துக் கொள்வேன். இத்தனை நாளாக என்னை நீங்கள் ஆதரித்தமைக்கு நன்றி! என் உயிர் உள்ளளவும் மட்டுமென்ன ஏழேழு பிறப்பும் உங்களை மறக்க மாட்டேன்' என்று கெஞ்சிக் கண்ணீர் உகுத்தாள்.

அவன் வீரன்! பற்பல போர்க் களத்தைக் கண்டவன்! இரத்த வெள்ளத்தைக் கண்டவன்! குற்றுயிராய்க் கிடக்கும்-இரண வேதனையால் கதறும் மனிதப் பிறவிகளைக் கண்டவன்! அவற்றை யெல்லாம் கண்டதின் பலன் அவன் இதயம் இரும்பென இறுகிப் போயிருக்கும்!

ஆம்; அவன் இப்பொழுது சிரிப்பதும் அதற்காகத்தான். அதோ! விலா வெடிக்கச்சிரிக்கிறன்! சுதமதியின் இதயம் தெறித்து விடும்படியாகச் சிரிக்கிறன்! சிரித்துக்கொண்டே இருக்கிறன்! 'நிறுத்துங்கள், நிறுத்துங்கள்' என்று சுதமதி எவ்வளவு சொல்லியும் நிறுத்திலான்!

சிரிப்பை ஒருவாறு நிறுத்தி விட்டு தொட்டுத் தாலி கட்டியவன் போல் திடீரென்று சுதமதியை வாரியெடுத்தான். தன் விரலை சுவற்றில் தோய்த்தெடுத்து அதன் சுதையால் அவள் பிறை நுதலில் திலகமிட்டான். பின் 'நான்தான் வேந்தன் வேங்கைமார்பன்' என விளம்பினன்!

* * *

மெல்லிய நீண்ட கரத்திலே பிடித்த ஏட்டை யாரோ பறிப்பதைக் கண்டு பயந்தெழுந்து பறித்தவர் யாரெனத் திரும்பி நோக்கினுள்.

"...பிரபு...நீங்களா?"

"...ம்..."

"படிக்கலாமல்லவா..."

"....." நாணிக் கோணிக் குனிந்தாள்.

வேங்கைமார்பன் பாடலைப் படித்தான். பின் 'கல்கல'வெனக் கை கொட்டிச் சிரித்தான்.

"ஏன் சுதமதி, உன் கணவன் இவ்வாறன போர் செய்யும் ஆற்றல் உடையவனு? அடேயப்பா, எவ்வளவு ஆசை! 'குன்றினைப் போன்ற களிற்றெடு பொருது வீழ்ந்து கிடக்கிறனே அவன் யார்? யாரோ அயலன் போல் தோன்றுகிறன். அதோ பார்! புல்லும் நீரும் இன்றி உப்பு வணிகரால் கைவிடப்பட்டுச் சென்ற முடம்பட்ட எருமைக் கிடா தன் அருகே பட்ட அனைத்தினையும் தின்று தீர்க்குமாறு போல், அசையாது நின்று, வரும் பகை வரை எல்லாம் தீர்த்துக் கட்டுகிறனே ஒருவன்! அவன் ஆற்றல் கண்டு அஞ்சிப் பகை வேந்தனும் வெற்றி பெற்று, புலவர் பாடும் புகழ் பெறத் தன்னுல் இயலாதெனக் கருதி தன் நெஞ்சுறுதி நீங்க தானும் அவன் வேலால் பட்டு வீழ்கிறனே, அவ்வாறு போர் செய்யும் தகுதி உடையவன் தான் என் கணவன் அறிவாயாக தோழி!' என்று எழுதி இருக்கிறயே, என்னை என்ன அத்தகைய வீரன் என்று கருதி விட்டாயா..."

"பின் என்ன, நீங்கள் கோழையா..."

"சுதமதி! விளக்கு ஒளிரும் முன்பே விளக்கின் ஒளி பற்றி பாடி விட்டாயே என்று தான் கேட்டேனே தவிர, நான் அந்த விளக்கிற்கு ஒளிரும் திறனில்லை என்று சொல்லவில்லையே!"

"...ஸ்வாமி, நான் ஒரு விளக்கு..."

"...அதை ஒளி பெறச் செய்தவன் நான். கூடிய சீக்கிரம் இந்த விளக்கும் ஒளிரும் காலம் வரும் என்று எதிர் பார்க்கிறேன்..."

"...பிரபு..."

"உக்கிரப் பெருவழுதி! சேரர், சோழர்களின் நட்பை நாடி விட்டான் இந்தக் கானப்பேரெயிலைக் கைக் கொள்ள! பாதாளத்தை எட்டும் ஆழமான அகழிகள் காற்புறமும் சூழ, வானை முட்டும் உயரமான மதில்கள், மீன் பூத்த வான் போன்ற சூட்டினையும், காவற் காட்டினிலே இம்மியும் வெயில் நுழையாதனவாகப் பெற்ற இந்த சிற்றரணைக் கைக்கொள்ள சிறுத்தை முயலுகிறதாம். அதனை அழித்தொழிக்கும் ஆற்றல்-திறன்- தைரியம் - துணிவு - யாவும் இந்த

நெஞ்சத்துள் புதைப்பட்டுக் கிடக்கிறது சுதமதி புதைபட்டுக் கிடக்கிறது.''

* * *

2. சுடர்

கயற் கொடி துள்ளி விண்ணைத் தொடும்படியாகப் பட்டொளி வீசிப் பறக்க, கூடல் மாநகரைத்தலைநகராகக் கொண்டான் பெருவழுதி. இவன் உக்கிரம் மிகுந்தவன். இவன் தந்தை தலையாலங்கானத்தில் எழுவரின் தருக்கினையடக்கியவன். சோழன் மகளை மணந்தவன்.

உக்கிர(சினம்)ப் பெருவழுதி தன் தந்தையைப் போன்று தானும் ஏதாவது ஒரு மகத்தான சாதனை செய்ய வேண்டும். அதனால் தான் சுடரெனத் திகழ வேண்டுமெனக் கருதி இருந்தான்.

* * *

நர்த்தகி நந்தினி ஆடற் கலையில் வல்லவள். சாக்கைக் கூத்து, வேத்தியர் கூத்து போன்றன ஆடுவதில் அவளுக்கு நிகர் அவளே. ஆனால் அவள் சோழ மண்டலத்தினள். அவள் நடனத்தில் ஒரே காதலாக உக்கிரப் பெருவழுதி இருந்தான். ஒரே ஒரு முறை, நடனச் சுடர் நந்தினியின் நர்த்தனத்தை எப்படியாவது கண்டு களித்து விட வேண்டுமென இருந்தான்.

* * *

எப்பொழுதும் நெருப்பில்லாமல் புகையாது. பாண்டியன் உக்கிரப் பெருவழுதியிடம் மீனவர்களை வேங்கைமார்பன் இகழ்கிறான் என்று பலர் வந்து சொல்லப் படை எடுக்க நினைத்தான் உக்கிரப் பெருவழுதி!

3. எண்ணெயும், திரியும்

அந்த நாளில்—

சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி புலிக்கொடி பறக்க புகழோடு திகழ்ந்தான். இவன் இராயசூயம்–அதாவது 'சாம்ராட்' என்னும் பெயர் பெறும் வேள்வியைச் செய்தவன்.

சேர நாட்டில் சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறை விற்கொடி விண்ணைத் தொட விளங்கினன்.

சோழ நாட்டின் வடக்கெல்லையான வட வெள்ளாற்றிற்கும், தொண்டை நாட்டின் தெற்கெல்லையான பாலாற்றுக்கும் இடைப்பட்ட நடு நாட்டை மலையமான் திருமுடிக்காரி திருக்கோவலூரை தலைநகராகக் கொண்டு செருக்கோடு திகழ்ந்தான்.

ஒரு சமயம் கூட சோழன் இராயசூயம்வேட்ட பெருநற்கிள்ளிக்கும் சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறைக்கும் போர் நிகழ்ந்த போது மலையமான் திருமுடிக்காரி தன் படைகளைத் தந்து சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி வெற்றி பெறும் படிச் செய்தான்.

சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி வெற்றி பெற்றதின் நிமித்தமாக தன் அவையிலேயே நந்தினியின் நடனத்திற்கேற்பாடு செய்து விட்டு பாண்டியன் உக்கிரப் பெருவழுதிக்கு நந்தினியின் நடனத்தைக் காண வரும்படி ஓலை விடுத்தான். பாண்டியன் உக்கிரப் பெருவழுதி செல்லத் துணிந்த போது மெய்க்காப்பாளன் முதல் முதலமைச்சர் வரை தடுத்தனர். சோழ வேந்தன் பாண்டியனை அழைப்பதில் ஏதோ சூது இருக்கிறது என்றனர். ஆனால் உக்கிரப் பெருவழுதி ஒரே பிடிவாதமாக செல்லத்தான்போவதாகச்சொன்னான். கடைசியில் சோழன் அவைக்கு சென்றுதான் தீர்த்தான்.

உக்கிரப் பெருவழுதி சோழன் இராய சூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் அவைக்குச் சென்ற போது வேழமுடை சோழக்கோன் நகைமுகங் கொண்டு முத்துடை வேந்தனை வரவேற்றான்.

அந்த ஒரு நிகழ்ச்சி தான். அப்பப்பா! எத்தனை மாறுதல்! முடியுடை மூவர் ஒன்று சேர்ந்தனர்! ஆம், சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி –குறுநில மன்னன் – சேரமான் மாரி வெண்கோ, பாண்டியன் உக்கிரப் பெரு வழுதி!—ஆகிய மூன்று வெவ்வேறு நிலவேந்தர்கள் பிரிக்க இயலா பெரு நண்பர் ஆயினர்! அவ்வாறு மூவரும் ஒரு இடத்தில் கூடி அளவளாவிக் கொண்டிருக்கும் போது அதனைக் கவனித்துவிட்ட தமிழ்ப் பெரும் மூதாட்டி ஔவை தன் இதயக் களிப்பை கவி வடிவில் வார்த்தாள்!

சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளியையும், சேரமான்

வெண்கோவையும் எண்ணேயும் திரியுமாகப் பயன்படுத்திக்கொள்ள உக்கிரப் பெருவழுதி நினைத்தான்.

4 உரைகல்லும் தீக்குச்சியும்

எப்படி உரைகல்லும் திக்குச்சியும் உராய்ந்தால் நெருப்புப் பிடிக்குமோ அப்படிப் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியின் கானப்பேரெயில் கோட்டையின் ஆசையும் வேங்கை மார்பனின் எதிர்ப்பும் மோதி, போர் என்னும் தீ பரவியது.

நகரின் வீதி எங்கும் போர் போர் என்று பறை முழங்கியது. பட்டாளத்து வீரரெல்லாம், பார், பார்! அந்தப் பகை வேந்தன் படையின் பரந்த மார்பின் மேல் பாய்ந்து அவன் உயிரைக் குடிக்கும் பரவசக்காட்சியை' என்று ஆர்த்தனர்: வில்லிலிருந்து விடுபடும் நாணொலிசெவிப் பறையைக் கிழித்துவிடும்போல் ஒலித்தது. கார் மேகம் போல் திரண்டெழும் பரிசப் படை—மனதில் அச்சத்தை விளைவிக்கும் மலையெனப் பருத்து பெருத்த யானைப் படை—கடலெனப் பொருதும் காலாட்படை யாவும் ஒருமித்து மோதின!

அச்சத்தால் காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமாகச் செல்லும் பறவை இனம்போல் படை வீரர்கள் கடுகி விடுத்த அம்புகள் களிறுகளின் கைகளைத் துளைத்து குத்திட்டுத்தைத்து நிற்க அக்கையுடன் அதன் கையுடன் வாயினையும் வெட்டி வீழ்த்தினன் ஒரு வீரன்.

வாளெல்லாம் குருதிக் கரை படிந்து செக்கர் வானநிறம் ஆகியும், பகை வரை வெட்டி வீழ்த்தி கதுவாய் ஒடிய வடிவிழந்தன. வேல்களோ பகைவர் நாடழிக்கும் முயற்சியில் காம்பின் ஆணி கலங்க நிலை கெட்டன. களிறுகளோ பகைவர் அரணை மோதி அழித்தலால் கிம்புரிகள் கழன்றன. வாயோ, மதிற் கதவுகளை குத்தி, உடைத்தும் சிதறியும், மழுங்கிய தந்தங்களோடு மதம் பிடித்து துதிக்கைகளை தூக்கிக் கொண்டு பிளிறி ஓடி வருவனவாயின. குதிரைகள் போர்க் களத்து பகைவர் உருவழிய ஓடி மிதித்துச் சென்றதால் குருதிக்கரை படிந்த குளம்புகளோடும், இடசாரி வலசாரி திரும்பக் கட்டிய முகக் கருவி உதிரங் குடித்த புலிவாயை ஒத்து இருபாலுஞ் சிவந்து தோன்றின! பட்டாளத்து வீரர்கள், களங்கொள்ள வீரக்கழலின் கால் வரிசையிட்டுப் போர் புரிவதால் அரும்பு வேலைப்பாடுகள் மறைந்து கொல்லேற்றுக் கொம்பு போலாயின.

பாசறையிலே போர் முரசம் இடி போல் முழங்கிக் கொண்டுதான் இருந்தது.

வாளோடு வாள் மோதிக்கொள்வதாலும், காலிலே அணிந்துள்ள வீரக் கழல் வீரன் இங்கு மங்கும் சுழன்று போராடுவதால் ஏற்படும் சதங்கை ஒலியும் ஏதோ ஆர்த்தெழும் பெருங் கடலும் கடலும் மோதிக் கொள்வதை நினைவுபடுத்தின.

ஆயிற்று, வெயிலவன் சாயும் நேரம் வரை சமர் செய்தாகிவிட்டது. கடைசி நேரம்வரை யாருக்கு வெற்றி யாருக்கு தோல்வி என்று சொல்ல முடியாது.

5. நந்தா விளக்கு

இரவு நேரம்—போர் வீரரெல்லாம் தத்தம் பாசறைக்குப் போய்விட்டனர். சிறிது நேரத்துக்கு முன் ஆர்த்துக் கொண்டிருந்த அந்த இடத்தில் கோட்டானும், கழுகும், பெருகவும் கூடி இரையுண்டு களிக்கும் இடமாக மாறிவிட்டது.

அதோ வேங்கை மார்பனின் பாசறை. படைத் தளபதி இளந் தத்தன் எழுந்தான். தன் படையினரை ஊக்குவிக்க, ஆவேசமாக பேசினன். இளம் உள்ளங்கள் முறுக்கேறின. அக்கணமே பகை வேந்தனைக் கிழித்து ஒழித்துவிடுவோமா என்று எண்ணினர். தங்கள் உள்ளத்திலே உரமுள்ள மட்டுமென்ன, உடலிலே ஒரு சொட்டு ரத்தம் இருக்கும் வரை போராடியே தீருவோம் என்றனர்.

மறுநாள்—

காலை; கதிரவன் இன்னும் தன் பயணத்தை துவக்கவில்லை. கதிரவன் வரும் முன்பே செவிப்பறை கிழிந்து விடும்படியாக அதிரும் போர்ப்பறை முழங்கியது.

மின்னலெனப் போர் வீரர்கள் தாவி எழுந்தனர். தேர்மீது நின்று வலிய வில்லிலே நாண் பூட்டி அம்பினைக் கடுகிச் செலுத்தினர். இரும்பென

இருக்கும் தன் இரு விரல்களால் நாணினை இழுத்து இழுத்துப் போர்ப் பறையைப் போல் பெரும் ஒலிசெய்யும் வண்ணம் போர் செய்தனர்.

வேங்கை மார்பனின் வீரர்கள் காத்த கழனியையும் குளத்தினையும் பகை வேந்தன் தன் களிறைவிடுத்துப் பாழ் செய்தான்! நகரெல்லாம் இடிந்து பாழாக கானப் பேரெயிலை சுற்றியுள்ள நகரே கோரமாகக் காட்சியளித்தது!

வேங்கை மார்பனின் வீரர்கள் சற்றுப்பின் வாங்கினர்! தங்கள் தளபதி இளந்தத்தன் போரிலே இறந்துவிட்டான்! இனி தங்களை நடத்திச் செல்ல தகுந்த தலைவன் இல்லை! இதை எண்ண எண்ண அவர்களுக்கு முன்னேறும் ஊக்கம் மடிந்தது! மேய்ப்பனற்ற ஆடுபோல் ஆகிவிட்டோம் என்பது உணர ஆற்றல் இழந்துவிட்டாற் போல் பட்டது! ஆகையினல் தங்கள் மன்னர்பால் ஓடினர். களச் சேதி கூறினர்!

வேங்கை மார்பன் வெகுண்டெழுந்தான்! வீரர்களை ஒருங்கு திரட்டினன்! "நீங்களெல்லாம் வீரர்கள் தானு?" என்று கேட்டான்! "பிறந்த கடனை பொன்னுட்டிற்காகச்செலவு செய்யாத உங்கள் உடலிலே ஓடுவதென்ன மறத் தமிழர் குருதிதானு? உங்களிலே யாராவது போர்க் களத்தைக் கண்டு அஞ்சும் நெஞ்சம் கொண்டவராக இருந்தால் இக்கணமே சொல்லுங்கள்! உங்களுக்குப் பாதுகாப்பான இடம் தந்து அந்தப்புற அழகிகளின் சேவைகளையும் செய்யச் சொல்லுகிறேன்"

"......................"

"ஏன் பேச மறுக்கிறீர்கள், உங்கள் நா கூசுகிறதோ.......... சற்றும் கூச வேண்டாம்.......மனமின்றிக் களத்தை நாடி என்னை ஏசவேண்டாம்! நீங்கள் போர்க்களத்திலே ஏற்கும் ஒவ்வொரு விழுப்புண்ணும் வீர மாது உங்களுக்குத் தரும் அன்பு முத்தங்கள். அதையேற்க உங்கள் தொடை நடுங்குகிறது .... இந்நிலம் பகைவேந்தன் கைகொள்ள அவன்பாலிருந்து பாற்சோற்றை எதிர்பார்க்கிறீர்கள்.......... அப்படித்தானே......... இதோ நான் போர்க்கோலம் பூண்டு வ[illegible]றன். விரும்புவோர்கள் என் [illegible]ருங்கள்.........'

ஆவேசமாகப் பேசிவிட்ட வேங்கை மார்பன் அந்தப்புரம் சென்றுன்! தன் அழகுமிகு தங்கத்தை அழைத்தான்! ஆள்காட்டி விரலைக் கிழித்து செந்நீர் திலகமிட்டுவிட்டு நந்தா விளக்கேற்ற வர்த்தியை அதன் அருகே கொண்டு சென்றபோது—

வர்த்தி அணைந்துவிட்டது!

சுதமதி அழுதாள்!"அன்பே சகுனம் சரியில்லை! தாங்கள் செல்ல வேண்டாம்" எனத் தடுத்தாள். ஆனல் வேங்கைமார்பன் அவள் பேச்சிற்கு செவி சாய்க்கவில்லை! மீண்டும் விளக்கேற்றிவிட்டு மீண்டுமொருமுறை திலகம்மேல் திலகமிட்டு விட்டு போர்க்கோலம் பூணச் சென்றுன்!

வேங்கைமார்பனின் வீராவேசப் பேச்சு ஒவ்வொருவர் உள்ளத்திலும் அக்கணமே ஆயிரம் வீரர்களைக் கொல்லும்படியான முறுக்கை ஏற்றின. தடந்தோள் பொங்க பகை வேந்தனைக் கொல்லும் விரகதாபத்துடன் நின்றிருந்தனர்.

போர்க்கோலம் பூண்ட வேங்கை மார்பன் வெண்புரவி பூட்டிய இரதத்தில் ஏறி வேகமாக விரட்டினன். அவன் பின் லட்சோப லட்சம் காலாட் படையினரும் நாட்டுப் பற்றில் நாட்டம் கொண்டோரும் ஓடினர்.

6. தீபம் அணைந்தது

போர்க்களத்தே வேங்கை மார்பன் பம்பரமெனச் சுழன்று பொருது நின்றுன்! அவன் விடுக்கும் அம்புகள் மழையெனப் பொழிந்து பகைவேந்தரின் படைகளைப்பரலோகம்அனுப்பின. வெருண்ட படையினர் பின் வாங்க வேங்கைமார்பன் வெருட்டிக் கொண்டே முன்னேறினன். அவன் முன்னேறும் இடந்தோறும் பாசறை அமைத்து முரசம் முழங்கச் செய்தான்!

திடீரென்று—

பகை வேந்தனின் படையிலிருந்து ஒரு இளைஞன் துணிந்தெழுந்தான்—குறுநில மன்னரின் படைகள் 'தூள் தூள்' என்றுன். 'வேல்! இவ்வேல் வெற்றிவேல் 'என்றெறிந்தான். அந்த வேல் வேங்கைமார்பன் நெஞ்சத்திலே [illegible]கு நிற்க அதனைப்பிடுங்கி எறிந்து அ[illegible]வ[illegible]ஞ்ஞை விண்ணுக்கனுப்பினுன் [illegible]கைமார்பன்.

197700

மார்பிலே வேல் தைத்ததால் குருதி பீறிட்டுக் கொட்ட மயங்கி விழுந்தான் வேந்தன் வேங்கைமார்பன்! அப்போதைக்கு படைத் தளபதியாய் நியமிக்கப்பட்டவன் வேந்தனை பாசறைக்குக் கொண்டு சென்றான்!

படைகள் முன்னேறின!

*   *   *

நிலைகொள்ளாது தவித்துக் கொண்டிருந்த சுதமதிக்கு 'நம் படைகள் முன்னேறுகிறது' என்று ஒற்றர் வந்து சொன்ன செய்தி மிகவும் மகிழ்ச்சி தந்தது. ஆனால் கடைசிவரை அப்படியே ஆகவேண்டும்!

பூஜை அறையினுள் வேங்கைமார்பன் ஏற்றி வைத்த நந்தா விளக்கின் பக்கம் ஓடினாள்! அந்த விளக்கைப் பார்த்த மாத்திரத்திலேயே அவள் முகம் கருத்தது! அது வாடிக்கொண்டு வந்தது! அது அணைந்துவிடும் நிலைக்குள்ளாகி இருந்தது!

அந்த விளக்கில் உள்ள எண்ணை இன்னும் பல நாட்கள் காணும். ஆனாலும் சுதமதி ஓடி மேலும் எண்ணை ஊற்றினாள்! திரியைச் சற்று நகர்த்தி விட்டாள்! ஜ்வாலை வீசி பிரகாசிக்காதா என்று ஆவலுடன் பார்த்தாள்!

ஆனால் விளக்கு—?

வாடிக் கொண்டு வந்தது!

சுதமதி கண்ணீர் விட்டாள் : 'அவர் மார்பிலே பட்ட புண் பெரிதாகியுள்ளது. வண்டுகள் வந்து மொய்க்கின்றவாதலால் வீட்டிலே ஏற்றி வைத்த விளக்கும் எரியாதுஅவிகிறது. பல நாட்கள் உறங்காது அவர் அருகே இருந்த என் கண்கள் தாமாகவே மூடுகின்றன. அதோ கூகையும் கூவுகிறது...!'

'அம்மா! அம்மா!!' என்று ஓடி வந்தாள் ஒரு பாங்கி.வேங்கைமார்பன் விழுப் புண் ஏற்றுவிட்ட செய்தி சொன்னாள் வேற்றொருத்தி! நெற்றியிலே இட்ட இரத்த திலகம் வியர்வை நீரால் கரைந்துவிடும் நிலைக்குள்ளாகி இருப்பதை நினைவுபடுத்தித் திலகமிட்டுக் கொள்ளச்சொன்னாள் வேற்றொருத்தி!

இவற்றையெல்லாம்கேட்கக் கேட்க சுதமதியின் தலை சுழன்றது. கரத்தை எடுத்து சித்திரத்தில் இட்டாள்!! பின் மயங்கி விழுந்தாள்!

*   *   *

சுதமதி கண் விழித்த போது செம்முது பெண்டிர் பலர் வந்தனர். நீரும் நெல்லும் எறிந்து, 'எம் கொற்றவர் பிழைத்துக் கொள்வார்' என்றாள் ஒருத்தி மகிழ்ச்சி பொங்க.

இதைக் கேட்ட சுதமதியின் சிந்தையிலே பழைய நிகழ்ச்சிகள் தோன்ற 'எங்கே என் ஸ்வாமி' என்றாள். அந்தப் பேச்சின் பூச்சிலே உயிர் இல்லை! ஒளி இல்லை களை—ஜீவன் ஒன்றுமே இல்லை!

நந்தா விளக்கு இருக்கும் அறையிலே கிடத்தப்பட்டிருக்கும் வேந்தன் பால் சென்றாள் :சுதமதி, 'ஸ்வாமி, பிரபு...'என்று மாற்றி மாற்றி அழைத்தாள். அவன் கண் விழித்தால் தானே!

'...நெல்லும் நீரும் எறிந்து இவர் பிழைப்பார் என்று சொன்ன செம்முது பெண்டிரின் சொல்லும் குறைபாடாகிறதே! துடி கொட்டுபவனே! பாணனே! விறலியே! இனி நீங்கள் என்ன ஆவீர்களோ இனி நீங்கள் இங்கிருந்து வாழ்தல் உமக்கரிது! மொட்டையிட்டு அல்லியரிசி உண்டு வாழும் களிகல மகளிரைப் போல் சாவின் வழியை எதிர்நோக்கிக் காத்திருத்தல் எமக்கு அரிதே! அவர் இறப்பு நெருங்குகிறது. யானும் உடன் சாகப் போகிறேன். நீங்கள் வேறிடம் சென்று வாழ்க!'

மீண்டும் தொடர்ந்து புலம்பினாள். அப்பொழுது தீபம் அணைந்தது!

*   *   *

'ஜய! விஜயீபவா! உக்கிரப் பெருவழுதி வாழ்க! கோஷங்கள் வானைப் பிளந்தன! கோட்டைக் கதவுகளை தகர்த்துக் கொண்டு,கோட்டையினுள் உக்கிரப் பெருவழுதியின் வீரர்கள் நுழைந்தனர்!

அவர்கள் உள்ளே நுழைந்ததும் முதல் வேலையாக அரசியைக் கைது செய்ய அந்தப்புரத்தில் நுழைந்தனர். ஆனால் அங்கே அரசி இல்லை! இங்கே அங்கே என்று எங்கும் தேடினர். சுதமதியையும் காணவில்லை. பூஜை அறையில் கிடந்த கொற்றவனையும் காணவில்லை! ஆனால் அணைந்துவிட்ட நந்தா விளக்கின் கீழ் ஒரு ஓலை கிடந்தது, அதில்—

'என்னை மார்பிற் புண்ணும் வெய்ய
நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்
நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா
துஞ்சா கண்ணே துயிலிம் வேட்கும்!
அஞ்சுவரு குராஅல் குரலும் தூற்றும்!
நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லும்
நிரம்பாது
துடிய பாண படுவல் விறலி
என்ஆ குவிர்கொல் அளியிர் நுமக்கும்
இவண்உறை வாழ்க்கையோ அரிதே
யானும்
மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர்
வாரத்
தொன்றுதாம் உடுத்த அம்பனகத்
தெரியல்
சிறுவெள் ஆம்பல் அல்லி உண்ணும்
களிகல மகளீர் போல
வழிநினைந்து இருத்தல் அதனினும்
அரிதே!'

—மாரோக்கத்து நப்பசலையார்.

என்றிருந்தது. சுதமதிதான் விளக்கின் முன்னிருந்து முணங்கியதை கவி வடிவில் வார்த்திருந்தாள்.

முடிவுரை: ஆரம் தொடுத்து முடித்தாகி விட்டது. இப்போது எனக்கு ஒரு சந்தேகம்! அதாவது பண்டைப் பேரரசரின் வரலாறு என்றால் புறத்தில் அதைப் பற்றிய பாடல் இருக்கவேண்டுமே! புறத்தைப் புரட்டினேன். சுதமதி முதன் முதலில் பாடிய 'ஆசாகு' என்னும் பாடல் [புறம் 307] யார் பாடியது. யாரைக் குறித்துப் பாடியது என்ற குறிப்பற்று இருக்கிறது. 'என்னை மார்பிற்' என்னும் இறுதிப் பாடலோ [புறம் 280] மாரோக்கத்து நப்பசலையார் பாடியது என்று இருக்கிறதே தவிர யாரைக் குறித்து என்றுப் எழுதப் பெறவில்லை. ராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சோழமான்மாரி வெண்கோ, உக்கிரப் பெருவழுதி ஆகிய மூவரும் கூட அள வளாவியதைப் பற்றி ஔவை புறம் 367ல் இருக்கிறது.

மாரோக்கத்து நப்பசலையார் பெண்பாற் புலவரா? அப்படி யென்றால் வேங்கை மார்பனின் பட்டமகிஷியா? பட்டமகிஷிஎன்றால்-ஏன்மாரோக்கத்து நப்பசலையாரின் இயற்பெயர் சுதமதியா?—ஆகிய குறிப்பைக் காண துறவி தந்த ஏட்டைத் திருப்பினேன்.

அதில் இருந்தது:

'வேங்கை மார்பன் கானப்பேரெயிலை கோட்டையாகக் கொண்டு ஆள உக்கிரப் பெருவழுதி அதனை கைக்கொண்டு கானப்பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி எனப் புகழப் பட்டான்! என்பது சரித்திரச் சான்று. இனி என் சொல்லை கவனமாகக் கேள்: உக்கிரப் பெருவழுதியின் நண்பர்கள் சேரமான்மாரி வெண்கோ, இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகையினால் எல்லோரும் ஒரு காலத்தவர். இதுவும் சரித்திரச் சான்று. இராயசூயம்வேட்ட பெருநற்கிள்ளிக்கும் சோழமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறைக்கும் போர் நிகழ மலையமான் திருமுடிக்காரி உதவினான். தம்பி! இதுவும் சரிதம் கண்டவுண்மை.

இப்போதுதான் நீ கவனமாகக் கேட்கவேண்டும்! மேற்கண்ட உண்மைகளால் யாவரும் ஒரு காலத்தவர் என்று உனக்குப் புலப்படும் இல்லையா?

நீ புறம் 126ல் பார்த்தாயானால் மலையமான் திருமுடிக்காரியின் மேல் மாரோக்கத்து நப்பசலையார் கவி வார்த்திருக்கிறார்! ஆகையினால் யாவரும் ஒரே காலத்தவர்தானே!

தம்பி, மாரோக்கத்து நப்பசலையார் பெண்பாற் புலவர்தான். கொற்கைத் துறையை அடுத்த நாட்டிலுள்ள மாரோக்கம் என்னும் ஊரினள், நறிய பசலை நிறத்தினள்.

இந்தக் குறிப்புகளை நீ தமிழக சரித்திரத்திலோ அல்லது வேறெந்த காப்பியத்திலோ காணலாம்! ஆனால் மாரோக்கத்து நப்பசலையாரின் இயற்பெயர் சுதமதி என்றோ இவள் வேந்தன் வேங்கை மார்பனின் பட்டமகிஷி என்றோ எதிலுமே இருக்காது. நீ வீண் சிரமப்பட வேண்டாம்! எதையும் புரட்டாதே! நான் கூறிய சான்று. தவிர மற்ற அத்தனையும் என் கற்பனை!"

முதியவரின் குறிப்பு இத்துடன் முடிந்து விட்டது!

பிரம்மதேவன் பேனாவை விஷத்தில் ஒரு தடவையும், அமிர்தத்தில் ஒரு தடவையும் தோய்த்து எடுத்து மேதை ஸ்ரீ சத்யமூர்த்தியின் நாவில் எழுதி இருக்கவேண்டும்! எதிராளிகளைத் தாக்கும்போது அவருடைய நாவிலிருந்து விஷந்தோய்ந்த சொல்லம்புகள், சரசர வென்று கிளம்பும். சில சமயம் ஒரே வார்த்தையினால் எதிராளிகளை மடக்கி உட்கார வைத்துவிடுவார்.

ஸ்ரீ சத்யமூர்த்தி பிரபலமாகி வந்த பொழுது தமிழ்நாட்டில் ஸ்ரீ வி. எஸ். சினிவாச சாஸ்திரியாரின் பெயர் மிகவும் பிரபலமாயிருந்தது. 'இங்கிலீஷ் பேச்சுக்கேட்கவேண்டுமென்றால் சாஸ்திரியாரிடம்தான் கேட்க வேண்டும். அவர்மாதிரிசுத்தமாகவும்மதுரமாகவும் இங்கிலீஷ் பேசக் கூடியவர்கள் இங்கிலாந்திலேயே இரண்டொருவர் தான் உண்டு' என்று அந்தக் காலத்திலே சொல்வார்கள்.

அரசியலில் மிதவாதியாகிய ஸ்ரீ சினிவாச சாஸ்திரியார் தியாகவாழ்க்கையை மேற்கொண்டு கோகலேயின் இந்திய தேசிய சங்கத்தில் சேர்ந்தார். இப்படிப்பட்ட நிலைமையில் சாஸ்திரியாரைத் தாக்கி அவருடைய செல்வாக்கைக் குறைக்க வேண்டிய அவசியம் ஸ்ரீசத்யமூர்த்திக்கு ஏற்பட்டது. ஒரே ஒரு வார்த்தையில் இந்தக் காரியத்தை அவர் செய்துவிட்டார்.

ஸ்ரீ சத்யமூர்த்தி கூட்டத்தை நன்றாகப் பார்த்து பரவசப்பட்டார். அவருடைய தனித்த கம்பீரமான தீர்க்கமான உச்சரிப்பில் "......ஸ்ரீமான் சினிவாச சாஸ்திரி......" என்று சொல்லி ஒரு கணம் நிறுத்தினார். பிறகு இன்னும் தீர்க்கமாக "......... மகானுபாவன்" என்றார். உடனே அந்தக் கூட்டத்தில் எழுந்த ஒரு சலசலப்பும், சிரிப்பும், கரகோஷமும் அடங்க கால் மணி நேரமாயிற்று...... அந்தச் சிரிப்பை 'கல்கி' வர்ணிக்கும்போது "அந்தச் சிரிப்பானது ஸ்ரீ சினிவாச சாஸ்திரியாரின் அரசியல் கொள்கையைப் பார்த்து தேசமே சிரித்ததுபோலிருந்தது" என்று குறிப்பிட்டார்.

* * *

சென்னை நகரின் சமூக வாழ்க்கையில் டிசம்பர் கடைசியில் நடக்கும் சங்கீதவிழாக்கள், முக்கியத்துவத்தை அடைந்திருக்கின்றன. இந்த விழாக்க திறந்து வைப்பதற்குச் சங்கீதம் தெரியாத பிரமுகர்களை ஒவ்வொரு வருஷமும் அழைப்பதும் வழக்கமாயிருந்து வருகிறது.

இந்தத் திறப்பு விழாக்களை நடத்துபவர்கள் சாதாரணமாக "எனக்குச் சங்கீதத்தைப்பற்றி ஒன்றும்தெரியாது" என்று அவையடக்கம் சொல்லிக்கொண்டுதான் ஆரம்பிக்கிற வழக்கம். அதேமாதிரி .... அந்த வருஷம் மியூசிக் அகாடமி விழாவைத் திறந்து வைத்த.........பிரபல பிரமுகர் மிகவும் அழகாகத் தமது பிரசங்கத்தை ஆரம்பித்தார். முதல் வாக்கியத்திலேயே அவர் தம்மை 'இக்னாரமஸ்' என்று தெரிவித்துக் கொண்டார்.

கூட்டத்திலிருந்த 'கல்கி'யிடம் அவருடைய அத்யந்த எழுத்தாள நண்பர், "இக்னாரமஸ்" என்ற வார்த்தைக்கு தமிழில் சரியான பிரதிபதம் என்ன என்று கேட்டார். 'கல்கி' சிரித்துக் கொண்டே "அஞ்ஞான இருள் குன்று, 'மௌடீகமலை', மடசாம்பிராணி" என்று அர்த்தபுஷ்டி ததும்ப கூறினார். அருகிலிருந்த எல்லோரும் 'கொல்'லென்று சிரித்துவிட்டார்கள்.

பிரடல பிரமுகரின் திறப்புவிழாப் பிரசங்கம் முடிந்ததும் பேராசிரியர் 'கல்கி' சிரித்துக்கொண்டே "சிறிது நேரத்திற்குள் அபத்தங்களையும், அசட்டுவாதங்களையும் சொல்லக்கூடியவருக்கு 'இக்னாரமஸ்' என்ற பட்டம் தகுதியில்லையென்றால், வேறு யாருக்குத்தான் தகுதியாயிருக்க முடியும்?......" என்று கேட்டார். கூடியிருந்தோர் குலுங்கக், குலுங்கச் சிரித்துவிட்டார்கள்!

* * *

பிரபல ஐரிஷ்கவியாகிய ஈட்ஸ்க்கு ஒரு சமயம் அவருடைய அபிமானிகள் ஒரு விருந்து அளித்தார்கள். அப்போது கவிஞர் ஸ்பூனை வாயில் வைத்தபடியே தம்மை மறந்து ஏதோயோசனை செய்து கொண்டிருந்தார். அவர் அப்படி இருப்பதைக் கவனித்தவர்கள் "அடடா! என்ன கவித்துவம்! சாப்பிடும்போது கூடக் கவி கட்டும் ஞாபகந்தான்" என்று வியந்தார்கள். அவர் பக்கத்தில் அமர்ந்திருந்த பெண்மணி "தாங்கள் இப்போது எதைப்பற்றி யோசனை செய்து கொண்டிருந்தீர்கள்? என்று கேட்டார்.

"நாளைக்கு ஸ்காட்டிஷ் எக்ஸ்பிரசில் பிரயாணம் செய்யப்போகிறேன். அதில் மத்தியானம் டீ கிடைக்குமா, கிடைக்காதா என்பதைப் பற்றி!" என்று கவிஞர் பளிச்சென்று பதிலளித்தார்.

* * *

ஒரு பெரிய சங்கீதக் கச்சேரிக்கு சில பத்திரிகை ஆசிரியர்களுக்கும், அப் பத்திரிகைகளின் சித்திரக்காரர்களுக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார்கள்.

ஒரு பத்திரிகையின் சித்திரக்காரரின் அனுமதிச் சீட்டை எடுத்துக்கொண்டு அவருடைய நண்பர் ஒருவர் சங்கீதக் கச்சேரிக்கு வந்து சேர்ந்தார். ஆளைப் பார்த்ததும் சங்கித சபையின் காரியதரிசி சந்தேகப்பட்டு "நீங்கள் இன்ன பத்திரிகையின் சித்திரக்காரர்தானா? என்று கேட்டார்.

"ஆமாம்" என்றார் நண்பர்.

"இருந்தாலும் எனக்குச் சந்தேகமாய் இருக்கிறது. இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் இப்பொழுதுதான் உள்ளே நுழைந்தார். அவர் ஒப்புக்கொண்டால் உங்களை உள்ளே விடுகிறேன்" என்று சொல்லி அவரை அந்தப் பத்திரிகையின் ஆசிரியரிடம் அழைத்துக்கொண்டு போனார். நண்பர் நடுங்கிக்கொண்டே சென்றார்.

ஆசிரியரைப் பார்த்து காரியதரிசி "இவர் உங்கள் பத்திரிகையின் சித்திரக்காரர்தானா?" என்று கேட்டார். "ஆமாம்! யார் இல்லை என்று சொன்னது?" என்று பதிலளித்தார் ஆசிரியர். இதைக்கேட்டதும் நண்பருக்கு உயிர் வந்தது. கச்சேரி முடிந்ததும் நண்பர் ஆசிரியரைப் பார்த்து "தாங்கள் என் மானத்தைக் காப்பாற்றியதற்காக மிகவும் வந்தனம்" என்றார்.

அதற்கு ஆசிரியர் "இதைப் பிரமாதப்படுத்தாதீர்கள். ஏனெனில் நான் பத்திரிகையின் ஆசிரியரல்ல. உம்மைப் போல இரவல்சீட்டு வாங்கிக்கொண்டு வந்தவன்தான்!" என்றார்.

* * *

ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் ரயிலில் இரண்டாம் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். சாதாரணமாக அவர் மூன்றும் வகுப்பில்தான் செல்வார். ஆனால் அச்சமயம் ஒரு பெரிய பணக்காரர் அவருக்கு இரண்டாம் வகுப்பு 'டிக்கெட்' வாங்கிக் கொடுத்து வழி அனுப்பி வைத்திருந்தார்.

விவேகானந்தர் இருந்த வண்டியில் இரண்டு வெள்ளைக்காரர்களும் இருந்தார்கள். அவர்களுக்கு அவரைப் பார்க்க வேடிக்கையாயிருந்தது. "இந்தப் பரதேசியைப் பாரடா! பெட்டி இல்லை, படுக்கை இல்லை! காவி உடை உடுத்துக் கொண்டு கவலையில்லாமல் 'கொழு கொழு' என்றிருக்கிறானே!" என்றான் ஒருவன்.

"ஆமாம்! இவன் கெட்ட கேட்டுக்கு இரண்டாம் வகுப்பு வேறு" என்றான் மற்றவன்.

உடனே இருவரும் 'கொல்'லென்று சிரித்தனர். இப்படியே அவர்கள் விவேகானந்தரைக் 'கேலி' செய்து பொழுது போக்கிக்கொண்டிருந்தனர். விவேகானந்தருக்கு ஆங்கிலம் தெரியாது என்பது அவர்களின் எண்ணம். இல்லாவிட்டால் அப்படி எல்லாம் பேசத் துணிச்சல் வருமா?

வழியில் வண்டி ஒரு ஸ்டேஷனில் நின்றது. உடனே விவேகானந்தர்

தலையை வெளியே நீட்டிப் பார்த்தார். அப்போது 'ஸ்டேஷன் மாஸ்டர்' அங்கு வந்தார்.

அவரைப் பார்த்து "இங்கு குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா?" என்று அழகாக ஆங்கிலத்தில் கேட்டார் விவேகானந்தர்! ஆங்கிலத்தில் அவர் பேசியதைக் கேட்டதும் அந்த ஆங்கிலேயர் இருவரும் திடுக்கிட்டனர். பிறகு விவேகானந்தரை நோக்கி "ஏனய்யா உமக்கு ஆங்கிலம் கூடத் தெரியுமா? அப்படியானால் நாங்கள் இவ்வளவு நேரமாகப் பேசியதை எல்லாம் கேட்டுக்கொண்டு ஏன் சும்மா இருந்தீர்?" என்று கேட்டனர்.

"ஓ அதுவா!...நான் முட்டாள்களைக் காண்பது இதுவல்ல முதல் தடவை" என்று அழுத்தமாகச் சுடச்சுடசிரித்துக் கொண்டே பதிலளித்தார் :சுவாமி விவேகானந்தர்!

* * *

ஒரு கவிஞர் சாந்திநிகேதனத்துக்குச் சென்றாராம். அப்போது அவருக்கு தம்மைவிட அறிவாளி கிடையாதென்ற நினைப்பு. இந்தக் கர்வத்தை அறிந்த ஒரு மாட்டுக்காரப் பையன் மந்தையை விட்டு ஓடி வந்து, கையிலிருந்த தார்க்குச்சியால் தரையிலே வளைவான கோடு ஒன்றைப் போட்டு "இது எதைக் காட்டுகிறது கவிஞர் பெருமானே!" என்று கேட்டான்.

கவிஞர் யோசித்தும் பதிலளிக்கமுடியவில்லை. "நடைமாடு சிறுநீர் கழித்த மாதிரி இல்லை? இது தெரியவில்லையே......" என்றான் அந்தப் பையன் சிரித்துக்கொண்டே!

(தொகுத்தவர் : **திருமால்**)

★

போன்: **88** தந்தி: **VEEVEEYES**

வே. வ.

சண்முக நாடார் & சன்ஸ்

விருதுநகர்.

★

எங்களிடம் தயாராகிற

நயம் நல்லெண்ணை,

நயம் உளுந்து, துவரம்

பருப்புகளை

வாங்கி உபயோகியுங்கள்.

ASP

சிக்கரி கலந்த

காப்பித் தூள்

★

தயாரிப்பாளர்:

A.S.P. **அய்யம்பெருமாள் நாடார்,**

விருதுநகர்.

6. வேட்டு வெடிக்கவில்லை ! விழிகளோ சுட்டன !

[" கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்தான் பெண்தகை
பேதைக்கு அமர்த்தன கண் " —திருக்குறள்.

" என் காதலியின் கண்ணின் அழகை இச்சமயம் நன்கு காண முடியாது. அதன் கடைக்கண் நோக்கே விசித்திரமானது. இப்பொழுதோ சரிவர வாரிப் பின்னுத கூந்தல் படர்ந்து அதை மறைக்கும். அதனை ஒளிவீசச் செய்யும் மை, தீட்டப்பட்டிராது. என்னுடன் கூடிக் குலவி மதுவைக் குடித்து விழிக்கும் பொழுது, உலகத்தை மயக்கும் மாயம் அதில் தோன்றும். இப்பொழுதோ மது அருந்தா விரதமிருப்பாள். இவ்வாறு அதன் உயர்ந்த தோற்றத்தைக் காண உனக்குக் கூடாதெனினும், இங்கிலையில்கூட அவள் உன்னை உயர் நோக்கிப் பார்க்கும் பொழுது அக்கண் அழகைக் கண்டு பிரமிப்பாய். சுபசகுன சூசகமாக இடது கண் துடிக்கும். அது சிறு மீன் துள்ளுவதால் அசையும் கரு நெய்தல் போலும் கரிய மின்னல் போலும் பிரகாசிக்கும். இயற்கை அழகுடையோர் எவ்வித அவஸ்தையிலும் மனோகரர்களாக இருப்பார்கள் என்பதை உணர்வாய்."

மகாகவி காளிதாசனின் 'மேக தூதன்'—
செய்யுள் 98.]

ஆனந்தரங்கத்திற்கு அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு நீண்ட நேரம் பிடித்தது.

'அழகிய குளிர்ந்த அல்லி மலர இடம் தரும் வாவியின் நீர், தான் சூடாகவே இருப்பதைப் போன்று, கோலமிகு இக்குமரிக்கு இவ்வளவு கோபமா ?' என்று வியந்தது அவரது மனம்.

'பூக்களைச் சிந்தி வர்ண ஒளியைப் பரப்பும் வாணம், குறி தவறிவிட்டால் கூரையையே எரிப்பதைப் போல, உயரப் பறந்து செல்லும் வாய்ப்பைனுக்கு வழங்கும் மனித விமானம், விபத்துக்குள்ளாகி விட்டால் அவனது உயிரையே காவு கொள்வது போல் சிரித்துப் பேசும் சிங்காரிகள் சீறத் தொடங்கி விடின் ஏற்படும் பயங்கர விளைவுகள், இவ்வளவு கொடூர மானவையா?' என்று அவரது உள்ளம் வெந்தது.

ஏறுபோல் பீடு நடை போட்டு, அநாதை இல்லத்தில் நுழைந்தவர், கூறுக்கக் கொண்டு செல்லப்படும் கொலை ஆடுபோல் கூனிக் குறுகி நடந்தார்.

'செல்லுங்கள், வெளியே !'

'செல்லுங்கள், வெளியே !' என்று உலகெங்கும் குரல்கள் ஒலித்ததாக அவர் உணர்ந்தார்.

'குயிலைப் பழிக்கும் குரலில் இந்த

இடி முழக்கம் எவ்வாறு வந்ததோ?' என்று கேள்விக்குக் குறியிட்டது மனம்.

வானத்தின் முகட்டிலே இருந்து, தாராவின் கண்கள் தன்னைச் சுடுவதாக எண்ணித் தலை குனிந்தார். பூமியிலும் — அவரது காலடியில் அவருக்கு முன் விழும் நிழலாகப் படர்ந்தது அந்த அழகிய முகம்.

கொற்றவையை நினைவூட்டும், குருதியைத் தோற்கடிக்கும் செம்மை— அந்தக் கண்களில் படர்ந்து கிடந்தது.

'ஆராய்ச்சிக்காக இரண்டு பச்சிளம் குழந்தைகளின் வாழ்வைப் பாழ்படுத்த நினைக்கும் நீங்கள் மனிதர்தானா? உங்களுக்கு நெஞ்சமே இல்லையா? அல்லது பாலையாகத் திரிந்துவிட்டதா? செல்லுங்கள் வெளியே!'

தாராவின் முகம் அவருக்கு முன் பூமியிலே படர்ந்து, பரவி இந்த வார்த்தைகளை வாரியிறைத்தது.

ஆனந்தரங்கம் காதுகளை மூடிக் கொண்டார்; கண்களை இருட்டாக்கினார்!

காதுகளை விட்டுவிட்டுக் கருத்திலே ஒலித்தது, தாராவின் குரல்!

இமைகளைத் துறந்து இதயத்திலே நிழலாடின, அந்தக் கள்ளியின் கண்கள்!

கால்களை இயந்திரமாக இயங்க விட்டு, கருத்தைப் பித்தமாகப் பிறழுமாறு கட்டவிழ்த்து விட்டு நடந்து கொண்டே இருந்தார் பேராசிரியர்!

அவர் வீட்டை அடைந்த பொழுது இரவு பன்னிரெண்டாவது மணியைக் கடந்து நடந்து கொண்டிருந்தது!

*　　*　　*

மறு நாள்.

தாராவின் தரிசனத்தால் தனது இலட்சியத்தையே மறந்துவிட்ட பேராசிரியருக்குப் பொழுதுவிடிந்ததும் சிறிது போதை தெளிந்தது.

'கைக்கெட்டிய இரட்டைக் குழந்தைகள் இப்படி நழுவிவிட்டனவே?' என்று உளம் நொந்து அமர்ந்திருந்த பொழுது, திடீரென்று, கன்னியம்மாள் கடற்கரையில் அவரிடம் தந்த கண்ணாடிக் குப்பியைப்பற்றி அவருக்கு நினைவு வந்தது!

'அதை எங்கே வைத்தோம்?' என்று எண்ணிப் பார்த்த பொழுது... போலீஸ் ஸ்டேஷனில் தன்னைச் சோதனையிட்டு அதைப் பற்றிக் கொண்டது அவரது ஞாபகத்திற்கு வந்தது!

'அதற்குப் பிறகு அதைத் திரும்பப் பெறவில்லையே? எப்படியாவது மீண்டும் பெற்றாக வேண்டும்! போலீஸ் ஸ்டேஷனுக்கு மீண்டும் செல்லுவதா? அந்தக் கன்னெஞ்சர்களைத் திரும்பவும் பார்ப்பதா?''

ஆனந்தரங்கம் சிறிது நேரம் சிந்தித்த பின், மாலதியின் துணையை இதற்காக நாடுவது என்று முடிவு செய்து புறப்பட்டுவிட்டார்.

*　　*　　*

'மாலு...மாலு...'

பதிலில்லை. மாலதியின் அறை காலியாக இருந்தது.

'எங்கே போய்விட்டாள்?' என்று அவர் திகைத்து நின்ற நேரம்—

மாடிப் படியிலிருந்து யாரோ, 'தட, தட' என்று இறங்கி வருவது கேட்டது!

மாலதியின் அறை வாயிலிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த ஆனந்தரங்கம், கதிரேசன் வேகமாக வெளியேறுவதைப் பார்த்தார்.

'ஒருவேளை மாடி அறையில் மாலு இருக்கிறாளோ? பார்க்கலாம்' என்று மாடியிலே ஏறிச் சென்றவர் நேரே மகாதேவன் அறையைக் கண்டதும்—

'ஏன்...மாலதியிடம் உதவி கேட்பதைவிட மகாதேவனையே "மாணவியின் தந்தை" என்ற முறையில் அணுகினால்...' என்றெண்ணலானார்.

இவ்வாறு அவர் கருத்து கட்டளை யிட, கால்கள் மகாதேவனின் அறைக்கு நடந்தன.

அங்கே — கதிரேசனின் பயமுறுத்தலால் நிலைகுலைந்து நின்றிருந்தார் மகாதேவன்!

'எனக்குக் கீழே பணியாற்றும் ஒருவனுக்கு நான் அச்சப்பட நேர்ந்து விட்டதே! என்ன கொடுமை! இந்தக் கண்ணாடிக் குப்பி இவனிடம் எப்படிக் கிடைத்தது! இவனது பயமுறுத்தலுக்குப் பயந்து எனது அருமைக் கண்மணி மாலுவைப் பலியிடுவதா?' இவ்வாறு மகாதேவனின் சிந்தனை கட்டுக்கடங்காத வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

கடன்தொல்லை மிகுந்தவிட்ட வியாபாரியைப்போல் உள்ளம் நொந்தபடி நின்றிருந்தார் மகாதேவன்.

அறை வாயிலில் நிழலாடியது. 'மீண்டும் கதிரேசனா?' என்று அவரது நெஞ்சுத் துடிப்பு அதிகரித்தது.

'வணக்கம் ஐயா!' என்று கரம் கூப்பியவாறு நுழைந்தார் ஆனந்தரங்கம்.

ஆனந்தரங்கத்தை ஏற்கனவே சில முறைகள் மகாதேவன் சந்தித்திருந்தாலும், அவரது மனம் யார்? என்று; கேள்விபோட புருவம் உயர்ந்து, கண் விரிந்து முகம் அதைப் படம் பிடித்தது!

'ஓ...மறந்து விட்டீர்களா! நான் மாலாவின் கல்லூரிப் பேராசிரியர்! கல்லூரி விழாவில் மாலு அறிமுகப்படுத்தியதை மறந்து விட்டீர்களே!'

மகாதேவனின் நினைவு தெளிந்தது. சமாளித்துக் கொண்டபடி. 'ஓ... எஸ்...இப்பொழுது நினைவுக்கு வருகிறது! நிற்கிறீர்களே! உட்காருங்கள், உட்காருங்கள்!' என்று பரபரப்பாகப் பேசினார்.

சில விநாடிகள் கரைந்தன. ஆனந்தரங்கம் மெதுவாக 'ஒரு உதவியை நாடி உங்களிடம் வந்தேன். மன்னிக்க வேண்டும்' என்று ஆரம்பித்தார்.

'அதற்கென்ன! தயங்காமல் கூறுங்கள்' என்ற பதில் அவருக்கு ஊக்கம் அளித்தது.

'மிஸ்டர் கதிரேசனிடம் எனக்குச் சொந்தமான ஒரு கண்ணாடிக் குப்பி இருக்கிறது...அதை"

ஆனந்தரங்கம் வார்த்தைகளை முடிக்கவில்லை. கொதியுண்ட பால் போல் பொங்கி எழுந்தார். மகாதேவன்.

அவரது கை, இயந்திர கதியில் இயங்கி, மேசை அறையைத் திறந்து ஒரு கைத்துப்பாக்கியை வேகமாக வெளியே எடுத்தது. துப்பாக்கி, கண் இமைக்கும் நேரத்திலே ஆனந்தரங்கத்தின் நெஞ்சுக்குநேராக நீண்டது!

ஒரு விநாடி......ஆனந்தரங்கத்தின் நெஞ்சு 'குபுக்' என்று மேலே உயர்வது போல உணர்ந்தார். ஆனால். உடனடியாகச் சமாளித்துக் கொண்டார்.

'என்ன...என்ன ஸார்! இது?' என்று ஓர் வினாவை வீசியது அவர் நா.

'உன்னைப் போல் எத்தனைப் பேர் கிளம்பியிருக்கிறீர்கள்! கண்ணாடிக் குப்பி, கழுதைக் குட்டி என்று இங்கே வந்து கலாட்டா செய்கிறீர்கள்! இன்னுமொரு முறை இந்தப் பக்கம் பார்த்தால் சுட்டுப் பொசுக்கிவிடுவேன் பொசுக்கி...நட வெளியே!'

வலியவனால்தாக்கப்பட்டவன், தனது தோல்வி மனப்பான்மையில் தனக்கு எதிர்ப்படும் தன்னை விட வலுவில் குறைந்தவனைக் காரணமின்றித் தாக்குவது போல, மகாதேவன் கதிரேசனிடம் காட்ட முடியாத கோபத்தை அவரை அறியாமலே ஆனந்தரங்கத்தின் மீது காட்டிவிட்டார். சிறு துவாரம் அணையில் விழுந்தவுடன், நீர்ப்பெருக்கு மிக வேகமாக வெளியே ஓடுதல் ஒத்து அவரது சினம் வெளிப் பாய்ந்து, பீறிட்டு ஓடியது! 'கண்ணாடிக் குப்பி' என்ற ஒரு சொல் அவரை அவ்வாறு நிலைகுலையச் செய்துவிட்டது!

ஆனந்தரங்கம் குழப்பத்தோடு வெளியேறி வெகு நேரம் ஆனபிறகே, மகாதேவன் தனது தவறை உணர்ந்தார்.

பனி சூழ்ந்த மலைகளில், ஒரு பனிச் சுவர் சாய்ந்தவுடன், 'மட,மட' வென்று அதைத் தொடர்ந்து பல சுவர்கள் சாய்ந்துவிடும். மகாதேவனின் மனதும் அந்நிலையை அடைந்துவிட்டது.

7. கொடிகள் இரண்டு! கொழுகொம்போ ஒன்று!

"உலகத்தில் திக்கற்றுக் கிடைத்த குழந்தைகளில் பல எங்கெங்கோ கண்டெடுக்கப்பட்டு, வளர்ந்த பிறகு பெரிய உத்தமர்களாக, கற்பரசிகளாக விளங்கியிருக்கிறார்கள். ...முல்லை எங்கோ எப்படியோ வளர்ந்தாலும், அதன் மலர் ஒரே வகையானதுதான். குப்பையில் வளர்ந்தாலும் சரி, சிறந்த முற்றத்தில் வளர்ந்தாலும் சரி; சாய்க்கடை நீரால் வளர்ந்தாலும் சரி; தூய ஊற்று நீர் பாய்ச்சி வளர்ந்தாலும் சரி; எல்லாம் முல்லை மலர்தான். மற்றொன்று எண்ணிப் பாருங்கள் அம்மா! இயற்கையின் பொதுவான ஒழுங்கை என்ன என்பது! எவ்வளவு உயர்ந்த மலர்களாக இருப்பதாலும் வாடி உதிர வேண்டும்; அழுகி மண்ணாக வேண்டும்; அலலது உலர்ந்து சருகாக வேண்டும்! மீண்டும் அந்த மண்ணில் கலந்து, அதற்குச் சத்து ஊட்டி, மற்றொரு செடிக்கோ, கொடிக்கோ உரமாக வேண்டும். அந்தச் செடியிலோ கொடியிலோ மலராக மணம் வீசிக் காயாகச் செழிக்க வேண்டும். மனித வாழ்விலே இந்த உண்மையை உணர்ந்துவிட்டால் போதும் அம்மா! இதைவிடப் பெரிய ஞானம் இல்லை!"

தமிழ்ப் பேரறிஞர் டாக்டர் மு. வரதராசன்
—"நெஞ்சில் ஒரு முள்"ளில்.]

மாலு மாடிப் படிகளின் வழியாகக் கீழே இறங்கிய பேராசிரியரை வரவேற்றாள்!

பேராசிரியர் மாடியறைக்குச் செல்வதைப் பார்த்த மாலு, விரைவாகத் தனதறைக்குச் சென்று வெளியே புறப்படுவதற்குத் தயாராக வந்து நின்றாள்.

பேராசிரியரை அங்கே பார்த்த உடனே அவளது நெஞ்சம் மகிழ்விலே துள்ள ஆரம்பித்தது. கதிரேசனது வருகையால் ஏற்பட்ட கலவரத்தைக் கூட அவள் கருத்து மறந்துவிட்டது.

'மாலு! மாலு!' என்று ஆனந்தரங்கம் அழைத்த குரல், அவள் காதுகளில் இன்பத் தேனைப் பாய்ச்சியது. ஆனால் அவள் உடனே அவ்வரைப் பார்க்க வெளிவரவில்லை. 'மாடிக்குப் போய்விட்டுத்தான் வரட்டுமே?' என்று சிந்தித்தவாறு ஒப்பனை செய்வதில் முனைந்தாள்.

பனிப்பூச்சும், வெள்ளைத்தூளும் முகத்திலே ஏறின. கரு விழிகள் அஞ்சனத்தை உண்டன. உதடுகள் நாவினால் நீவி விடப்பட்டன. எடுப்பான வண்ணச் சேலையும், மேலங்கியும் மேனியிலே ஏறின. மின்னிய கூந்தலில் இரண்டு இழைகள் வகிட்டின் அருகிலே பிரித்தெடுத்து நெற்றியிலே சுருட்டி விடப்பட்டன.

அழகிய வண்ண ஓவியத்தைத் துடைத்து மாட்டும் பொழுது பழைய கவர்ச்சியோடு புது மெருகு கூடுவது போல மாலு ஐந்தே நிமிட ஒப்பனைக்கு பிறகு ஒளியிலே மிக்கவளானாள்!

இயற்கை அழகி, செயற்கையாக ஊட்டப்பட்ட அழகும் கூடிப் பொருந்தி இழைந்ததால், பேரழகியானாள்! அஜந்தா ஓவியம் அசைந்தாடி வருதல்போல, பொன் வண்ண மிதியடி பூமியிலே மிதந்து சறுக்கி விளையாட, நடை பயின்று மாடிப்படியருகிலே நின்றாள்.

பலகணியின் ஓரத்திலே எட்டிப் பார்த்து நிற்பது போல, காற்றால் அலைவுறும் போது தலையை நீட்டி மகிழ்ந்து கொண்டிருந்தது முல்லைக் கொடி ஒன்று. பண்செய்த மண்ணிலே பதியனிட்டு வளர்த்து, உரமிட்டு வளம் பெருக்கி, நீரூற்றி நிலம் கொத்தி கண்ணின் மணியாய்க் கவனமாக வளர்க்கப்பட்ட அப்பூங் கொடிக்கு ஏனோ அருமையாக அமைக்கப்பட்ட பந்தலைப் பற்றுவதற்கு மனமில்லை!

தனது இனத்தினின்றும் பெரிதும் வேறுபட்ட, வெள்ளி முலாம் போல வண்ணம் ஊட்டப்பெற்ற பலகணியின் கம்பிகளுக்குக் காதல் நோக்குகளைக் காணிக்கையாக்கி நின்றது. மெல்லத் தீண்டுவதும், காதல் மின்சாரம் ஏறிய தும் பின்னே திரும்புவதும், பூக் கொத்துக் கன்னம் சற்றே விரிய நாணத்தால் தலை குனிந்து தரையை நோக்குவதும், மீண்டும் உணர்வு பெற்றுப் பலகணிக் காதலனை பற்ற அசைவதுமாகக் காதல் நாடகம் நடாத்திக்கொண்டிருந்தது அம்முல்லைக் கொடி.

அக்கொடியின் ஆட்டத்திற்கு, வஞ்சிக் கொடியாம் மாலு கற்பித்துக் கொண்ட பொருள் அது.

மாடிப்படி யருகே செல்லுமுன்னால் இம்முல்லைக் கொடி அருகில் சென்று பலகணி வழியே ஓர் சிறு கொத்தை மலர்களும் இலையுமாகக் கிள்ளி யெடுத்துத் தலையிலே சொருகிக் கொண்டு, 'முல்லை, நீ பாக்கியசாலி யடி!' என்று பெருமூச்சுவிட்டு சில கணங்கள் அங்கு நின்று விட்டுத்தான் அன்றும் மாலு வந்தாள்.

முல்லைக் கொடிக்கு அவள் கற்பித்துக்கொண்ட இந்நிகழ்ச்சிகள், அவளது மனப் போராட்டத்தின் எதிரொலிகள் தானே ?

நீண்ட நாட்களாகப் புதிய மரக் குதிரைப் பொம்மை ஒன்றில் சாய்ந்து, சாய்ந்து ஆடவேண்டும் என்ற துடிப்புக்களைக் கற்பனையில் வளர்த்து வந்த ஓர் சிறுவன், கடை வீதியில் ஓர் குதிரைப் பொம்மையை நேராகவே எதிரே பார்க்கும் பொழுது அனுபவிக்கும் உணர்ச்சியை, சந்தேகமாகவே அன்பு செலுத்தி வந்த காதலிக்குக் காதலனே தன் நெஞ்சைத் திறந்து காட்டும் பொழுது ஏற்படும் போதை உணர்வை அப்பேதை அனுபவிக்கலானள் !

'தன்னைத் தேடி வருமளவிற்கு ஆனந்தரங்கம் வந்துவிட்டாரே!' என்ற எண்ணம், அவளது நெஞ்சத்தில் இன்ப அலைகளை எழுப்பியது.

மாடிப்படிகளின் அருகே கலைத் தேவிக்குக் கவிதையைக் காணிக்கை ஆக்கத் துடித்து ஆவேசத்தோடு நிற்கும் கவிஞனது உணர்வுத் துடிப்போடு, கன்றுக்குப் பாலூட்டத்தவித்து நிற்கும் பசுவின் அன்பு மனத்தோடு, வழிமேல் விழி பதித்து ஆனந்தரங்கத் திற்காகக் காத்து நின்றிருந்தாள் மாலு. காதளவோடிய கயல் விழிகள் மாத்திரமே நிலையற்றுச் சுழன்று அவள் ஓர் உயிரோவியம் என நினைவு படுத்தின !

பேராசிரியர் ஆனந்தரங்கமோ, ஒவ்வொருபடியாக இயந்திரத்தைப் போல எண்ணிக் கொண்டு மெதுவாக இறங்கிக் கொண்டிருந்தார் !

* * *

'தாரா!' -கடுமையாகவே ஒலித்தது ஏகாம்பரம் செட்டியாரின் குரல்.

அறியாத த்ாயன்பை நினைந்துருகிக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த தாரா, அக்குரலால் தன்னிலை உணர லானள். அவளது கரங்கள் கன்னங்களில் இழைந்து கண்ணீரை மாற்றின.

'என்ன இது ! சிறு குழந்தையாக அழுதுகொண்டிருக்கிருய் ! இவ்வளவு குழந்தைகளின் தளர்வை நீக்கவேண்டிய நீயே அழுது புலம்பினல் அவைகளின் கதி என்னவாகும் ?'-செட்டியாரின் குரலில் கடுமை தணிந்து, இரக்கம் தெனிக்க ஆரம்பித்தது.

'ஐயா...' ஏதோ சொல்ல ஆரம்பித்தவள் உணர்ச்சிப் பெருக்கினல் தொண்டை அடைக்கப் பெற்றதினல் சற்றே நிறுத்தினள்.

'தாரா ! உலகில் கடந்த காலத்தைக் கருதிக் கருதித் துயர்ப்படுவோருக்கு எவ்வித நலனும் விளைவதில்லை. நமது கண்ணீர்,நிகழ்ந்துவிட்ட சரித்திரத்தை மாற்றி அமைத்துவிட முடியுமா ? ஒரு நாளுமில்லை ''

செட்டியாரின் வார்த்தைகளுக்குத் தாரா பதிலேதும் பகரவில்லை. நிலம் நோக்கி அமர்ந்து இருந்தாள். காலின் விரல்கள் தரையிலே அரை வட்ட வடிவமாகச் சுழன்று கொண்டிருந்தன.

'தாரா! இப்பொழுது உனக்கென்ன குறைவு ! எந்தக் குறையும் தெரியாது உன்னை வளர்த்து ஆளாக்கி விட்டோம் ! நீயும் குப்பையிலே வளர்ந்தாலும் மல்லிகைக்கொடி செழித்துப் படர்வதைப் போலவே வளர்ந்து விட்டாய் !'

செட்டியார் சிறிது நிறுத்தினர், தாராவின் அங்கங்களை அவர் கண்கள் பருகிக் கொண்டு இருந்தன !

தலைகுனிந்து இருந்த தாரா, செட்டியாரின் பார்வையைப் புரிந்துகொள்ளவில்லை. தந்தையைப் போல கருதும் நிர்வாகி என்பதாலும் சற்று அஜாக்கிரதையாக இருந்தாள்.

செட்டியார் நாக்கைச் சப்புக்கொட்டிக்கொண்டார்!

சிறிது நாட்களாகவே அவரது போக்கில் ஓர் தடுமாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. களங்கம் சிறிது சிறிதாக அவரது நெஞ்சிலே படர்ந்து கொண்டு இருந்தது.

'தாரா! இது நாள்வரை இக்குழந்தைகள் அன்பிலே ஊறிப்போனதால் நீ கவலை மறந்து வாழ்ந்தாய்! இனி உனக்கு... உனக்கு'

'சட்'டென்று தலையை நிமிர்த்தி, 'எனக்கு என்ன?' என்று கேள்விக் குறி காட்டினாள், விழிகளால். 'ஓர் கொழுநன் வேண்டும். கொடிக்குக் கொம்பு போல!'

செட்டியாரின் இந்த வார்த்தைகள், தாராவின் காதுகளில் இன்பத் தேனைப் பாய்ச்சின!

'கொழுநன் என்ற பதவியிலே ஆனந்தரங்கம்!' என்று பொருத்திப் பார்த்தாள் அப்பேதை! அவளது கன்னங்கள் அதன் விளைவாகச் செம்மையாயின!

செட்டியாரோ — தாராவின் கொழுநனாகத் தன்னை உருவகப்படுத்துவதில் முனைந்து நின்றார்! அந்தப் போதையில், சில நாட்களாக அவளிடம் கூறத் துடித்து நின்றதில் ஓர் பகுதியை உரைத்துவிட்ட களிப்பிலே வெளியே சென்றார்!

மறு பகுதியை — தன்னை ஏற்றுக் கொள்ளக் கோருவதைக் - கேட்க அப்பொழுது அவருக்கு நெஞ்சுரம் இல்லை!

செட்டியார் சென்று நெடு நேரம் வரை தாரா ஆடாது, அசையாது சிலை

யாக அமர்ந்திருந்தாள்.

உடல் அசையாது போனாலும் உள்ளம் அலைவுறாது இருக்குமோ? தாரா்வின் உள்ளம் கோடி, கோடி இன்பக் கனவுகளைத் தன்னரங்கில் வனைந்து கொண்டிருந்தது!

'பேராசிரியர் ஆனந்தரங்கம்'-என்று உதடுகள் ஒரே ஒரு முறை முணு முணுத்தன. ஆழ்ந்த சிந்தனையோடு புத்தகமொன்றை விரித்துப் படித்துக் கொண்டிருக்கும் அவரது உருவத்தை நெஞ்சிலே வரைய முயன்றது அவளது சிந்தனை!

* * *

இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்த ஆனந்தரங்கத்தை, உயிர்த் துடிப்பாக நின்றிருந்த மாலதி வரவேற்றாள்.

'வணக்கம் ஸார்! ஏது இவ்வளவு கருணை பிறந்து விட்டது! ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறதே!'

பேராசிரியர் 'உம்' கொட்டிவிட்டு நடந்தபடி இருந்தார். மாலுவோ உற்சாகத்தில் பேசிக் கொண்டே தொடர்ந்தாள்.

'ஸார்! இன்றைக்கு 'வெதர்' ரொம்ப 'பிரைட்'டாக இருக்கிறதல்லவா? அப்படியே கடற்கரை வரை போய்வரலாமே?'

இந்த வினாவிற்கு பதில் கூறவில்லை ஆனந்தரங்கம். அவரது காதுகளில் இவை விழுந்தது உண்மைதான்; ஆனால் கருத்துத்தான் அதைப் பதிவு செய்யவில்லை.

மாலு, அப்பொழுதுதான் ஆனந்தரங்கத்தை ஏறிட்டுப் பார்த்தாள். கருகிய மலராக வாடியிருந்தது முகம்.

மாலுவின் உற்சாகம் பெருங் காற்றுல் அலைக்கப்பட்ட மேகக் கூட்ட மாகச் சிதறிவிட்டது.

'ஸார்! கொஞ்சம் இருங்கள்! 'ஷெட்'டில் இருந்து காரை எடுத்து வருகிறேன். பீச்சிலே சென்று பேசிக் கொண்டிருக்கலாம்!'

மாலு, ஆனந்தரங்கத்தின் பதிலுக் காகக் காத்திருக்கவில்லை. வேகமாகக் கார் 'ஷெட்'டை நோக்கி நடந்தாள்.

* * *

கடற்கரைப் பெருவழியின் ஓரமாக நிறுத்திவைக்கப் பட்டிருந்தது கார். சிறிது நேரத்தில் குளிர்ந்த கடற்காற்று மெதுவாக ஆனந்தரங்கத்தின் சிந்தனை லயக் குளிர்வித்து இவ்வுலக நினைவு களுக்கு அவரைக் கொணர்ந்தது.

'ஆமாம்! மாலு! உன் தந்தை ஏன் இவ்வளவு கோபப்பட்டு விட்டார்! கன்னியம்மாள் என்ற பெயரைக் கேட்டவுடனே, கைத் துப்பாக்கியை எடுத்து நீட்டுமளவிற்கு அவரது மனம் தடுமாறுகின்றதென்றால், உள் மனத் திலே ஏதோ கோளாறு...இரகசியம் புதைத்து கிடக்கிறது...ஆமாம்...நான் அங்கே நுழைந்த பொழுதே அவர் கவலையாக இருந்தாரே......எனக்கு முன்னல் யாராவது அவரைப் பார்த் துச் சென்றுர்களா?'

'கதிரேசன் வந்தார்!'

'யார்? கதிரேசனு?'

'ஆம்; அவரேதான்; ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது!'

சிறுது நேரத்தில் விவரமாகத் தான் கேட்டவற்றையும், பார்த்ததையும் ஆனந்தரங்கத்திற்கு எடுத்துரைத்தாள் மாலு.

அதைக் கேட்டபிறகு, பேராசிரிய ரின் சந்தேகம் வலுப்பட ஆரம்பித்தது.

பேராசிரியர், மனேதத்துவ ரீதியில், மகாதேவனின் குழப்பத்தை எடை போட ஆரம்பித்தார். "கன்னியம்மாள்' என்ற சொல்லைக்கேட்டதுமே அவரது சிந்தை தடுமாறுகிறது! கதிரேசனும் அவரது அந்த பலஹீனத்தை உணர்ந்து கொண்டு எதற்காகவோ அச்சுறுத்தி இருக்கிருன்! ஆகா! இதில் புதைந்து கிடக்கும் இரகசியம் வெளிப் பட்டால் எனது ஆராய்ச்சிக்கு மிகவும் பயன்படும் என்று தெரிகின்றதே!"

ஆழ்ந்த சிந்தனையில் ஆனந்தரங்கம் ஈடுபட்டார்; துப்பறியும் கதைகளில் மனதைப் பறிகொடுத்துள்ளவர்கள் மேலும், மேலும் பல புத்தகங் களைத் தேடிப்பிடித்துப் படிப்பார்கள். அதே உணர்ச்சி, ஆராய்ச்சிப் பித்தர் களுக்கும், சிந்தனையாளர்களுக்கும் உண்டல்லவா!

பிறப்பும், வளர்ப்பும் எவ்வாறு ஓர் மனிதனின் குணச்சித்திரத்தைப் பாதிக்கின்றன என்ற ஆராய்ச்சிச்குப் பெருமளவு தொடர்பு கொண்டதாக, மகாதேவனின் விசித்திர நடவடிக்கை அவருக்குப் பட்டது!

எப்படியும் கன்னியம்மாளின் கண்ணுடிக்குப் குப்பியை மீண்டும் கைப்பற்றுவது; மகாதேவனையும் தனது ஆராய்ச்சிக்களனுக ஆக்கிக் கொள்வது என்று முடிவு எடுத்தது அவரது மனம்.

* * *

நேரம் விரைவாக நகர்ந்து கொண் டிருந்தது. மாலையும், இளம் காதலர் களின் இன்பப் பொழுதாகிய பொன் னன நேரமும், விரைவாக நகர்ந்து கொண்டிருந்தன.

கடலை நோக்கிச் சென்று கொண் டிருந்த, இன்பக் கடலலைகளை அணுகிக் கொண்டிருந்த இணைகளைக் கண்டு பெருமூச்சு எறிந்தாள் மாலு.

'ஆனந்த்!'—திரும்பினுர் ஆனந்த ரங்கம்!

"ஆனந்தா! மரியாதையாக, 'ஸார்! ஸார்' என்று குழைந்த மாணவியா 'ஆனந்த்!' என்று அழைக்கிருள்!" என்று ஆச்சரியப்பட்டார் அவர்.

மாலதியின் கண்கள் ஒளியோடு மின்னின. இருட்டிலே வைத்த வைரக்கல் போல ஒளிவிட்டன. உதடுகள் உணர்ச்சிப் பெருக்கிலே துடித்துக் கொண்டிருந்தன. அழகிய நெற்றியில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள்!

'இன்னும் என்னைப் புரிந்து கொள்ளவில்லையே ஆனந்த்!'

மாலு கேள்வியை வீசியவாறு ஆனந்தரங்கத்தை நோக்கிக் காதல் நோக்கொன்றையும் வீசினுள்!

பேராசிரியர் சிறிதுநேரம் பேச்சற்றுப் போனுர். 'இதென்ன மாலு, விபரீ தம்?' என்று அவர் உள்ளம் கேட்டது. ஆனல் வார்த்தைகள் வெளிவரச் சில விநாடிகள் ஆயின!

தற்செயலாகத் தனது வேதனையை மறக்கக் கடற்கரைக்கு உலாவ வந் திருந்த தாராவும் இக்காட்சியைக் காண நேரிட்டுத் திகைத்து நின்றுள்!

(வளரும்)

பொய்யும்-மெய்யும்

(டி. எம். வாசுதேவன்)

பகவதித் தெரு 17-ம் நெம்பர் பங்களாவின் முன் வந்து நின்ற குமரேசனுக்குச் சந்தேகம் தட்டியது.

பங்களாவின் வெளிக் கதவு உட்புறம் தாழிடப்பட்டிருந்தது, "உள்ளே இருப்பவர்களைக் குரல் கொடுத்து அழைக்கலாமா அல்லது திரும்பிப் போய் பிறகு வரலாமா?" என்று தயங்கினான்.

மெல்ல அந்தக் கம்பிக் கதவுகளின் இடை வெளி வழியே உள்ளே எட்டிப் பார்த்தான். "தணிகாசலம்-மரம் இரும்பு வியாபாரம்" என்ற பெயர்ப் பலகை அவனைப் பார்த்துச் சிரித்தது!

தனக்குத் தானே மெல்லத் தலையை அசைத்துக் கொண்டு "சரியான இடத்துக்குத்தான் வந்திருக்கிறேன். ஆனால் அண்ணா எதற்காக இந்தப் பெரிய மனிதரைச் சந்திக்கச் சொல்லியிருக்கிறார்? இந்த அண்ணாவின் விவகாரங்களே ஒன்றும் புரிவதில்லை" இப்படி அலுத்துக் கொண்டான்.

நேரம் ஓடியது.

"சரி. இப்போ நாம் இப்படியே தவங்கிடக்க வேண்டியதுதானா? அல்லது உள்ளே நுழைய ஏதாவது வழி தென்படுகிறதா, பார்க்கலாம்" என்று முனகிக் கொண்டே அந்தக் கம்பிக்கதவுகளின் வழியே தலையை விட்டான்.

அந்தப் பங்களாவின் ஒரு புறம் ஒரு பெண் மிக ஊக்கமாகத் தோட்ட வேலையில் ஈடுபட்டிருப்பதை அவன் கண்கள் கண்டன. அவள் அவனுக்கு எதிர் முகமாகத் திரும்பி வேலை செய்து கொண்டிருந்தபடியால் அவள் உருவை அவனால் பார்க்க முடியவில்லை.

களினமாகச் செருமினான்.

சட்டெனத் திரும்பிப் பார்த்தாள் அவள்.

அதே சமயம் அவனும் அவளை கூர்ந்தான்!

பொங்கி வரும் பெரு நிலவுபோன்ற குளிர்ந்த முகம்; எழில் பூத்துக் குலுங்கும் அழகு; இளமை ததும்பும் வண்ணச்சிலை. இப்படிப்பட்ட ஒரு ஆரணங்கு, களைக்கொட்டும் கையுமாகக் காட்சியளித்தாள். அவள் முகத்தில் பனித்துளி போல் வியர்வை படிந்திருந்தது. கைகால்களில் சிறிதளவு சேறு, பட்டும் படாததும் போல் பூசப்பட்டிருந்தது. எளிமை நிறைந்த தோற்றம்-இருந்தாலும் அவள் அழகு அவனைத் தடுமாற வைத்தது.

அவள், மெல்லச் சமீபித்தாள் அவனை. அவள் கருவிழிகள் அவனை நோட்டமிட்டன. ஓரக் கண்களால் அவனைப் பார்த்துக் கொண்டே கதவைத் திறந்து விட்டாள்.

"இந்தப் பங்களாவின் சொந்தக்காரர் தணிகாசலம் உள்ளே இருக்கிறாரா? அவரை நான் பார்க்க வேண்டும்" என்றான்.

"ஓ! எசமானைப் பார்க்கணுமா? இப்படியே உள்ளே போய் வடக்கமா திரும்பி மெத்தைப் படியிலே ஏறிப் போங்க. அங்கணே அவுங்களைக் கண்டுக்கிடலாம்" என்றாள் அவள்.

"வேலைக்காரப் பெண்தான் இவள். ஆனாலும் என்ன அழகு! என்ன அழகு!" என்று இயம்பிக் கொண்டே மீண்டும் ஒரு தடவை உள்ளங் குளிரப் பார்த்துவிட்டு உள்ளே போனான் அவன்.

தணிகாசலம் ஆரம்பத்திலேயே அவனைக் கண்டு கொண்டார். வாய் நிறைந்த வாத்சல்யத்துடன் அவனை உபசரித்தார். அண்ணாவின் கட்டளைப்படிதான் அவரைக் காண வந்திருப்பதாக அறிமுகப்படுத்திக்கொண்டான் குமரேசன்.

அகிலாவைப் பெண் பார்க்கப் போனான், குமரேசன்!
ஆனால் அவனுக்குப் பிடித்ததோ, அவள் வீட்டு வேலைக்காரியை!

புன்முறுவலை நாகுக்காக நெளிய விட்டார் அவர். "ஆமாம். ஒரு சுப காரியமாக யோசிப்பதற்காக உங்களை வரச் சொல்லியிருந்தேன். ஆனால் இப்பொழுது கொழுத்த ராகுகாலம். நாளை பாட்டி முகம்! அடுத்த நாள் செவ்வாய்க் கிழமை — சரிப்படாது. புதன் கிழமை—தனி நாள். ஆக ஒரு வாரத்துக்கு சுப வேளையே இல்லை. அடுத்த ஞாயிற்றுக் கிழமை வாருங்களேன். நிறையப் பேசலாம்" என்றார் பவ்யமாக.

குமரேசனோ ஒரு புரட்சிப் பிரியன். உண்பதில் புரட்சி, உடுப்பதில் புரட்சி, எழுத்தில் புரட்சி, பேச்சில் புரட்சி, இப்படி எல்லாவற்றுள்ளும் புரட்சியைக் காணும் இளவல். அவனிடம் போய் இப்படி கட்டுப்பெட்டித்தனமாகப் பேசினால் எப்படியிருக்கும்?

சீறி வந்தது கோபம், அவனுக்கு.

"நல்ல ஆளய்யா நீர். அடுத்த ஞாயிற்றுக் கிழமை என்ன? இனிமேல் இந்தப் பக்கமே வரப் போவதில்லை" — நேரிடச் சொல்லவில்லை அவன். தன் மனத்துள் சொல்லிக்கொண்டான்.

"அகிலா! அகிலா!" என்றழைத்தார் தணிகாசலம்.

சொல்லி வைத்தாற் போல், டிபனும் கையுமாய் வந்தாள் ஒரு பெண். இளமை துள்ளும் வயது; சற்றுக் கறுப்பு; இரண்டாந்தர அழகு. ஓரக்கண்களால் குமரேசனைப் பார்த்து முறுவலித்துக்கொண்டே பரிமாறினாள். அந்த வேலைக்காரப் பெண்ணுடன் அவளை ஒப்பிட்டுப் பார்த்தபோது பௌர்ணமிக்குப் பிறகு வரும் அமாவாசைதான் குமரேசன் மனதில் பளிச்சிட்டது.

நடுவில் "நன்றாகப் பார்த்துக்கோ அம்மா, அன்றைக்கு நானும் வேதநாயகமும் பேசிக்கொண்டோமே. அவர்தான் இவர்" என்று பூடகமாகச் சொல்லி வைத்தார் தணிகாசலம்.

"புரிந்தது" என்று தலையை அசைத்தாள் அவள்.

வேலை முடிந்தது. விடைபெற்றுக்கொண்டு திரும்பினான் குமரேசன். பங்களாவின் முகப்பில் தனக்காகக் காத்திருந்தது போல் காணப்பட்ட அந்த வேலைக்காரப் பெண் ஓடி வந்து புன்முறுவலுடன் கதவைத் திறந்து விட்டாள். அவள் முகத்தில் நிலவிய அலாதியான அபூர்வமான அழகைக் கூர்ந்து நோக்கியபடியே வெளியேறினான் அவன்.

தன் அறையைக் குமரேசன் அடைந்த போது அண்ணா எழுதிய கடிதம் மேஜைமீது எறியப்பட்டிருப்பதைப் பார்த்தான். பரக்கப் பரக்க அதைப் படித்தான். அவர் எழுதியிருந்த கடிதத்தின் சாரம் இதுதான்.

"தணிகாசலத்தின் பங்களாவுக்குப் போனாயா? அவர் பெண் அகிலாவை உனக்குப் பிடித்திருக்கிறதா? உடனே பதில்! திருமணத்திற்கு வேண்டியன விரைந்து கவனிக்க வேண்டும்"

அப்போதுதான் அண்ணா தன்னைத் தணிகாசலத்திடம் அனுப்பிய காரணம் புரிந்தது குமரேசனுக்கு. அடுத்து அந்த அண்டங் காக்கை அகிலாவின் தோற்றமும் அவன் கண்முன் தோன்றியது.

"ஐயையோ! வேண்டவே வேண்டாம் அவர் பெண். அதே பங்களாவில் தோட்டக்காரப் பெண் ஒருத்தி இருக்கிருள். அவளை மணந்து என் விவாகத்தில் ஒரு புரட்சியை உண்டு பண்ண விரும்புகிறேன் நான்" என்று பதில் எழுதினன்.

கடிதத்தைக் கண்ட வேதநாயகம் திடுக்கிட்டார்.

'டெலிபோன்' கிணுகிணுத்தது.

பேசியவர் தணிகாசலம், தன் பெண்ணுக்கு வரன் குமரேசனைப் பிடித்து விட்டதாகவும் உடனே வந்து முகூர்த்தத்தை நிச்சயிக்கும்படியும் அழைப்பு விடுத்தார்.

மிகுந்த தயக்கத்துடன் பலமான பீடிகையுடன் தன் தம்பியின் மனநிலையைச் சொன்னார் வேதநாயகம்.

"கோபம் வெடித்துக் கொண்டு வரவேண்டிய சமயத்தில் இந்த மனுஷர் என்ன இப்படிச் சிரிக்கிருரே" என்று திகைத்தார் வேதநாயகம் - அப்படிச் சிரித்தார் தணிகாசலம்.

சிரிப்பு தணிந்தவுடன் அவரே தொடர்ந்து பேசினர்...... "அடேடே...... நான் எதிர்பார்த்தபடியே விஷயம் விபரீதமாகியிருக்கிறது. தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த பெண்தான் என் மகள் அகிலா. அவளுக்குத் தோட்ட வேலையில் கொஞ்சம் 'பைத்தியம்!' உங்கள் தம்பியைக் கண்டதும் அவள் ஒருவாறு ஊகித்துக் கொண்டுவிட்டாள். தன்னை மணந்துகொள்ள வந்திருக்கும் உங்கள் தம்பியின் முன் அந்த நிலையில் தன்னைக் காட்டிக்கொள்ள அஞ்சி அசல் வேலைக்காரப் பெண்ணை நடித்து விட்டாள். இதுதான் உண்மை. மாடியில் அன்று குமரேசன் பார்த்த பெண் என் அண்ண பெண். விவாகமான அப்பெண்ணை அகிலாவுக்கு திருமணம் ஆகும் வரையில் துணையாக இருக்கட்டும் என்று அழைத்து வந்து என்னுடன் வைத்திருக்கின்றேன். தற்செயலாக அவள் பெயரும் அகிலா என்றமைந்து விட்டது, விவகாரத்தை இன்னும் குழப்பிவிட்டிருக்கிறது. அவள் கழுத்தில் துலங்கும் மாங்கல்யத்தை மாப்பிள்ளை கவனித்திருந்தால் இந்தவிபரீதம் நேர்ந்திருக்காது!"

போனைக் கீழே வைத்துவிட்டு நிம்மதியாக மூச்சு விட்டு சந்தோஷப் பட்டார் வேதநாயகம்!

★

A. T. N.

Thammanna Chettiar & Co.,

Brass, Copper & Stainless Steel Wares,

RAJA STREET,

COIMBATORE.

H. O. TIRUPUR

★

அ. த. ந. தம்மண்ண

செட்டியார் அண் கோ.,

பித்தளை, செம்பு, எவர்சில்வர் பாத்திரங்கள்
உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

ராஜா தெரு,

கோயம்புத்தூர்.

தலைமை ஆபீஸ் : திருப்பூர்.

ஞானத் தங்கமே தங்கம்!

ஜியாவுடீன்

இயற்கை!

மனித இனத்தின் இச்சைக்கு உடன்படாது இயங்கிக் கொண்டே இருக்கிறது; அந்த விதத்தில் தனிப் பெருமை அதற்கு!

பருவகாலத்தின் உருவத்தைப் பிசைந்து காட்டும் திசைக் காற்று! பூத்துக் குலுங்கும் புஷ்பச் செடிகள், கொடி, மரங்கள்! குமுறி எழும் அலைகடல்; ஞாயிறு—திங்கள்; வான் பரிதி! இத்தனையும் தனக்கிட்ட கட்டளையைக் கடமையுணர்ச்சி குன்றாது செவ்வனே செய்துவரும் இயற்கையின் ஏவலாளிகள்.

விண்ணிலே தோன்றி மறைந்தது ஒரு மின்னல் கீற்று!

வானத்தில் கடுமைபடர்ந்தது. அவன் வழித் தோன்றல்கள் — கவிகளின் மனத்திலே வண்ணமிகு எண்ணங்களை ஏந்திவரும் ஒளி விளக்குகளாம் விண்மீன்கள்; தேய்ந்து வளரும் வெண்மதி! — இவற்றை எல்லாம் மேகக் கலங்கம் மூடி மறைந்திருந்தது.

முத்துச் சிப்பிகளைத் தன் மடியிலே மூடி மறைத்து வைத்திருக்கும் கடலுக்கு, அதைத் திருடத்தான் மேகம் மழைத் துளிகளை அனுப்புகின்றதோ என்ற அச்சம் போலும்! அது பொங்கிப் பாய்ந்தது அலையுருவில்!

திடீரென்று ஒரு பேரிடியின் முழக்கம்!

திரண்டு வந்த அலைகூட மிரண்டு கல்பாறைகளின்மேல்மோதாது, திரும்பியது. மற்றொரு அலை! கரையின் மணற் பரப்பை எல்லாம் தாண்டி 'சலா...ர்'...! என்ற இரைச்சலின் சுருதி கூட்டிக் கற்பாறைகளின் இடுக்கு வழியே உள் நுழைந்து சென்றது. நொங்கும், நுரையுமாக நெளிந்து வளைந்து சென்று, கோயில் கற் சுவருக்கு அடியில் தொட்டு முறையிட்டுத் திரும்பியது. திரும்பிய வேகம், வந்ததை விடக் குறைந்திருந்ததால் அதன் தாபம் தீர்ந்து சஞ்சலம் நீங்கிப் போயிருக்க வேண்டும்.

பேயாகச் சுழன்றடித்த காற்று கோயிலுள்ளும் நுழைந்து ஆலய மணிகளை ஊஞ்சலாடச் செய்தது.

"கணீர்!......கணீ......ர்!!" என்ற ஆலய மணிகளின் இனிய ஓசை எழுந்து, "பக்தா! பயப்படாதே. நீ என்னை நினைத்தாய் — நாடி வந்தாய்! உன் குறைகளை நான் கவனித்து நிறைவேற்றுகிறேன்" என்று உறுதி அளிப்பதாக இருந்தது.

"தேவா! பகலிலே பலர் வந்து 'தங்கள் — தங்கள்' ஆசாபாசங்களை உன்னிடம் சமர்ப்பித்து விட்டுப் போகிறார்கள். அந்த அத்தனைபேரில் என்னை மட்டும் — என் வேண்டுகோளைமட்டும் — தனித்து உன்னால் ஏற்க முடியாததுதான். அதற்காகத் தான் இந்த இரவில் நடுச் சாமத்தில் தனிமையிலாவது வெறுத்துப்போன

முதலில் 'பைத்தியக்காரி'; பிறகு 'ஓடு காலி'; கடைசியில் 'வாழ வைத்த தெய்வம்'! மூன்று விருதுகளையும் பெற்றாள் தங்கம்!

என் வாழ்வின் இறுதி வேண்டு கோளை ஏந்தி நின்று உரிமைப்போர் கொண்டாட வந்துள்ளேன். அர்ச்சனை அபிஷேகங்களுக்குச்செலவளிக்க என்னிடம் பணம் இல்லை; ஆனால் மனம் இருக்கிறது, இறைவா! உன் பாதார விந்தங்களில் கிடந்து என் ஆயுள் முழுதும் உனக்குச் சேவை செய்யக் காத்திருக்கிறேன். உனக்குத் தான் ஏழை, பணக்காரன் என்று கிடையாதே! எனக்கு மட்டும் ஏன் அருள் புரிய மறுக்கிறாய்? துன்பம் வந்த காலத்தே மட்டும் உன்னை நாடி வந்து கலிதீர்த்துக் கொள்ளும் பக்தனாக அல்ல. அனுதினமும், அனவரதமும் உன்னையே என்னுள்ளத்தில் நினைத்து வருகிறேன் என் குறையை நிறைவேற்று!"—என்றும் அலறிய வண்ணம் வேண்டுகோளை விடுவித்தது ஒரு இளம் உள்ளம்.

பேதையவன் என்று நகைப்பாரும் இருப்பர்! பரட்டைத்தலை; பஞ்சடைந்த கண்கள்; ஒட்டியுலர்ந்த கன்னங்கள்; அதிலே செழித்து வளர்ந்த தாடி உரோமங்கள்; கந்தலாடை—இவன்தான் அருணாசலம், அந்தக் கோவிலின் காவலன் !

இறைவன் மேலுள்ள ஈடுபாட்டினால் மட்டும் அருணாசலம் அந்த வேலையை ஏற்றுக் கொள்ளவில்லை, அவனுக்கும் வயிறு இருந்தது; காய்ந்து ஓய்ந்துபோன அவனுடன் போட்டி போட்டு வாழ அவனுக்கு ஒரு குடும்பம் இருந்தது! பத்துப் பதினைந்து வருட காலமாக அருணாசலம் இந்த வேலையிலிருக்கிறான்...இருபத்தைந்து ரூபாய் சம்பளத்திற்கு! ஓரளவு கஞ்சிக்குப் பஞ்சமில்லாது வாழ வகை செய்து கொடுத்தது அந்த வேலை.

அருணாசலம் சோகமே உருவெடுத்தாற் போல் அமர்ந்திருந்தான். அவன் இதய பலூன் வேதனைக் காற்றால் நிரம்பி விம்மி வெடித்து விடும்போலிருந்தது.

"மூர்த்தி சிறிதுதான், ஆனால் உன் கீர்த்தி பெரிது அப்பனே! உன்னையே நம்பியிருக்கிறேன்.— என்னைக் கைவிட்டு விடாதே! தற்கொலை செய்து கொள்ளும் பாவத்திற்கு என்னை ஆளாக்கி விடாதே!" தளுதளுத்த குரலில் வெளிப்பட்ட அருணாசலத்தின் வேண்டுதல் அந்தக் கோயிலின் கற்சுவர்களில் மௌனமாக மோதி எதிரொலித்தது.

அவன் மனம் கவலைகளே இல்லாத அமைதி உலகை நாடித் தவித்தது!

விழிப்படலங்களை நீர் திரையிட்டு மறைக்க, விக்ரகத்தின் பீடத்தில் தலை கவிழ்ந்து கொண்டான் அருணாசலம்.

* * *

அருணாசலத்தின் முதல் மனைவி மரகதம் இறந்து ஆண்டுகள் பல கடந்து மறைந்து விட்டன!

மரகதத்திற்குப் பிறந்தவள்தான். தங்கம். இன்று தங்கம் வளர்ந்து வாலிபத்தின் எல்லைக்கோட்டில் கால் பதிந்து நின்றாள். செல்லம், அருணாசலத்தின் இரண்டாம் தாரம்!

"முதல் மனைவியிடம் புலியாகப் பழகியவனும், இரண்டாமவளைக் கிளியெனக் காப்பான்" என்பது பழமொழி. அது அருணாசலத்தைப் பொருத்த மட்டில் நேர்விகிதத்திலே இருந்துகொண்டு எதிர்ப் பாய்ச்சல் போட்டது.

தங்கம்... அது பெயரளவில்தான். ஆனால் அவள் நிறம்........? காக்கை அவளிடம் பிச்சை வாங்கி இருக்க வேண்டும். குணம் மட்டும் என்னவாம்? ஒரு சில நல்லவர்கள்தான் தங்கத்தை வெகுளி என்றனர். மற்றவர்களனைவரும் பைத்தியம், 'லூஸ்' அரைக் கிறுக்கு, ஏழே முக்கால் என்றெல்லாம் நினைத்த நாமத்தைக் கிரீடம் சூட்டினர்.

செல்லத்திற்குப் பிறந்தவள் பத்மா. அவ்வளவு அழகில்லாவிட்டாலும், ஏதோ மூக்கும் முழியும் அமைப்பாக இருந்தாள். நல்ல சூட்டிகையான பெண், தங்கத்தை அன்புக்கரம் நீட்டி கருணைக் கண் கொண்டு பழகுகிறவள் பத்மா ஒருவள்தான். அடிக்கடி தங்கத்தை கடற்கரை யோரம் அழைத்துச் செல்வாள். ஊர், உலகம் பழக்க, வழக்கங்களைப் போதிப்பாள். "இதைச் செய்யாதே; அதைச் செய் செய்யாதே! இது நல்லது; அது கெட்டது!" என்று தங்கத்திற்கு விளக்குவதே பத்மாதான். அவளது அன்புக் கட்டளையைத் தட்ட, தங்கத்தால்

என்றும் இயன்றதில்லே. தங்கத்தைப் பொருத்த வரையில் 'கடவுள்' என்று ஒன்று இருக்கிறதென்ருல் அது பத்மாவின் மாசிலா உருவம்தான் என்பாள். காரணம், அன்பு ... பாசம் போன்ற மூன்றெழுத்து யாப்பிலக்கணத்து வார்த்தைகளுக்கு ஆதார அர்த்தமே பத்மா ஒருத்தி தானே அவளுக்கு!

தன் சித்தி செல்லத்தின் வாயிலிருந்து தங்கத்திற்கு அழைப்புக் கிடைத்தால் அது ஒரு 'மூதேவி'யாகவோ 'முஞ்சூறு' என்ருே தான் இருக்கும்! அப்பா!—அவரைப் பொருத்த வரையில் தங்கம் ஒரு வேதனே; முதல் தாரம் ஈன்று சென்ற பாரம்! அப்படித்தானே அவர் நினைத்து உருகுகிருர்? ஊராரின் கேலி மொழிகள், குதர்க்கப் பேச்சுகள், குத்தல் வார்த்தைகள்—இவையெல்லாம் தங்கத்தின் வெளித்தன்மைக்கு அப்பாற்பட்டவைகள்; புரிந்து கொள்ள இயலாதவைகள்!

ஆனல் ஒன்றே ஒன்று மட்டும் உண்மை! "அக்கா! அக்கா...!" என்று அனவரதமும் அவளேயே சுற்றிச் சுற்றி வட்டமிடும் அன்பு ஜீவன் இருக்கிறதென்ருல் அது தான் பத்மா!

செல்லம் சிந்தித்தாள்: "தங்கம் ஒரு பைத்தியம்! அவளேக் கட்டிக் கொள்ள எவன் முன் வருவான்? தன் பெண் பத்மா ஒரு பத்தரை மாற்றுப் பசும்பொன். அவளேத் தட்டிச் செல்லப் பலர் காத்திருக்கிருர்கள். ஆனல் தங்கத்தின் விவாகம் முடியாமல் பத்மாவிற்கு நடப்பதோ முடியாத ஒன்ருகும். என்னதான் தங்கத்தைத் துன்புறுத்தினலும், இந்த விஷயத்தில் ஊராரின் வாய்க்கு பயந்து தான் ஆகவேண்டும்".

மேற்படி எண்ணம் செல்லத்தின் மனதுக்குள் குடி கொண்ட பின்பு தங்கத்தின் துன்பம் ஒரு படி அதிகமாகியது. எடுத்ததற்கெல்லாம் சுடு சொற்கள்; அடி, உதைகள்—படு வேதனே!

என்னதான் தங்கம் வெகுளியாக இருப்பினும் அவளுக்கும் இறைவன் இதயம் என்று ஒன்று படைத்திருந்தான். பலன்! தங்கம் ஒரு தீவிரமான தீர்மானத்திற்கு வந்தாள்!

ஒரு நாள் மாலே; வழக்கம் போல் கடற்கரை மணற் பரப்பில் தங்கமும் பத்மாவும் கூடிப் பேசும் நேரம்! தங்கம் என்றுமில்லாத ஒரு அமைதியுடன் தன் வெகுளித்தனச் சிரிப்பை எல்லாம் அடக்கிக் கொண்டு அமர்ந்திருந்தாள். அவளது முகப்பரப்பிலே சோக முத்திரை பதிந்திருந்தது. இமை விளிம்பிலே நீர்த்துளி பனித்து நின்றது!

"பத்மா! சித்தி வரவர என்னே மாடு போல எண்ணி விட்டாள். இத்தினி நாளா அது எனக்கு ஏன்னே புரியாம இருந்துடுச்சு. இன்னிக்கு நீ ஸ்கூலுக்குப் போயிருந்தப்போ, 'கை கழுவிக் குடம் விழுந்துடுச்சு; அதுக்குப் பரிசு......ங்க்!...' தொடர்ந்து சொல்ல முடியாமல் அழுகை பீறிட்டுக் கிளம்பவே தன் உள்ளங்கைகளிரண்டையும் விரித்து நீட்டினள், தங்கம்!

அப்பப்ப! காணப் பொறுக்கவில்லை, பத்மாவினல்! கண்களை இறுக மூடிக் கொண்டாள்; அவளது இமைக் கோட்டை ஊடுருவிக் கண்ணீர், கன்னக் கதுப்புகளில் வழிந்தோடியது. தங்கத்தின் உள்ளங்கைகளில் நெருப்பால் சூடு போடப்பட்டிருந்தது!

"அக்கா! அவள் தாயல்ல—பேய்! தாய்மையின் தூய்மைக்கே ஒரு களங்கம்!"—தாங்க முடியாத வேதனையால் கதறினள், பத்மா!

தங்கம் தொடர்ந்தாள்: "பத்மா! நீ ஒருத்திதான் என்மேல் இந்த உலகத்திலே அன்பா நடக்கறே! என்னை அறிந்தோ அறியாமலோ நான் உனக்குக் தீங்கு விளைவிக்கிறேனென்ருல் அது என்னுலேயே தாங்க முடியாது! நீ மகிழ்ச்சியோடு இருந்தால், அது நான் அடையற சந்தோஷம் தான்! எனக்கு உன்னேட வாழ்வு தான் வேண்டும்"

"அக்கா! அம்மா உன்னிடம் என்ன சொல்லியிருப்பாள் என்று எனக்குத் தெரிகிறது. நீயும் அவள் கருவிலேயே ஜனித்திருந்தால் இப்படி பேசுவாளா? இல்லை. எண்ணத்தான் செய்வாளா?"—பத்மா ஆறுதலளிக்க விரும்பினள். அதே நேரத்தில். "தங்கம் தன் வெகுளித்தனத்தை எங்கு மறைத்து வைத்தாள் இன்று?' என்றும் ஆனந்தம் கொண்டாள்.

அதற்குப் பிறகு தங்கம் வெகு நேரம் வாய்திறக்கவில்லை. அமைதியான ஒரு சிந்தனையில் மூழ்கியிருந்தாள்!

அடுத்த நாள் முதல் தங்கம் காணப் படவில்லை! பத்மா முதற்கொண்டு, யாருக்குமே அவள் எங்கு போனள்? என்று தெரியவில்லை! வெறுமனே கிடந்த ஊர்வாய்க்கு 'அவல்' கிடைத்த மாதிரி செய்தது இந்தச் சம்பவம், அவர்களின் 'தாடை' அசைந்தது; அரைக்க ஆரம்பித்தது!—

தங்கம் ஒருவனுடன் ஓடி விட்டாள்!

செல்லமே இதை ஊர் முழுமைக்கும் பரப்பித் தம்பட்டம் அடித்தாள். பத்மாவால் மட்டும் இதை அணுவளவும் நம்ப முடியவில்லை! 'அக்காவா அதற்குத் துணிவாள்? சே! அவள் தெய்வத்திற்கு சமானம்!!' என்று உறுதியின் சுருதி கூடிற்று. அவள் நெஞ்சம். அருணசலம் புழுவெனத் துடித்தான். ஊரார் அவனைக் காரி உமிழ்ந்தனர். வாழ்ந்தாலும், தாழ்ந்தாலும் தூற்றும், விந்தை உலகம் தானே இது?

வெகுளித் தங்கம் ஊராரின் வாய்க்கு 'ஓடுகாலி' எனக் கருதப்பட்டாள்—நாட்கள் பறந்தன; வாரங்கள் ஓடின; மாதங்கள் நகர்ந்தன; வருடங்களும் மெள்ளத் தவழ்ந்தன! தங்கத்தின் நினைவையும் ஊரார் ஓரளவு மறந்தனர்.

பத்மா பெண் பார்க்கப்பட்டாள். பேச்சு நடந்தது; எல்லாம் ஆயிற்று! திருமணத் தேதி நிச்சயிக்கப்பட்டது. 'அரசன் அன்றே கேட்பான்; தெய்வம் நின்றே கேட்கும்' என்பார்கள். செல்லத்தின் விஷயத்தில் மட்டும் இது போக்குக் காட்டாமல் விடவில்லை!

மாப்பிள்ளை வீட்டாருக்கு ஒரு மொட்டைக் கடிதம் பறந்தது. 'மணப்பெண் பத்மாவின் மூத்த சகோதரி ஒரு ஓடுகாலி' என்று அது அறிவித்தது. அவர்களும் அதை ஆராய முற்பட்டார்கள், பெண்ணின் தாய் தந்தையர்களிடமே அவர்கள் நேரிடையாகக் கேள்வி எழுப்பினர். எந்த வாய் கொண்டு செல்லம் இப்போது அதை மறுப்பாள்?

நாளைக்கு என்றிருந்த பத்மாவின் திருமணம் இதனல் 'நாளொன்றுக்குமில்லை' என்ற நிலைமைக்கு வந்து விடும் போலிருந்தது. அருணசலம் தான் வேலை பார்த்து வரும் கோயிலுக்குக் கிளம்பினன்; விக்ரகத்தின் பாதமே கதியென விழுந்தான்; கண்ணீர் சிந்தினன்! இதற்கொரு நல்ல முடிவைத் தேடித்தான் தெய்வத்தை வேண்டி நின்றுன். தங்கத்தின் நினைவு அவனுக்கு வேம்பாகக் கசந்தது. 'இருந்தும் தொல்லை கொடுத்தாள்; இன்று மறைந்தும் கொடுமை புரிகிருள், மூதேவி!' என்று எண்ணிக் கருவினன்.

இந்த நல்ல வரன் கிடைத்த பெருமையில் எத்தனை பிரார்த்தனைகள் செலுத்தியிருப்பான், தன் இஷ்ட தெய்வத்திற்கு! 'அவை எல்லாம் வீணவதுடன் இனி இந்தப் பெண்ணும், வாழ்வை வீணக்கிக் கழிப்பதா? என்று நினைத்து நெக்குருகினன்.

இரவு தெளிந்தது! நினைவு மீண்டது; சித்ராதேவியின் அணைப்பிலே ஆழ்ந்து அமிழ்ந்து போனான் அருணாசலம்!

* * *

யாரோ தன் தோளைத் தட்டி எழுப்புவது போன்ற உணர்ச்சிக்கு இலக்காகி நித்திரை கலைந்தான் அருணாசலம். இருள் சிறிது விலகி இருந்தது. பகலவன் அதை விரட்டியடிக்கப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தான் — கண்களை கசக்கி விட்டுக் கொண்டு முன்னால் நிற்கும் உருவத்தைக் கூர்ந்து நோக்கினான், அருணாசலம்!

அங்கே, பொங்கும் பெருமிதத்தோடு நின்றிருந்தாள் தங்கம்!

"அடிப்பாவி, நீயா? மீண்டும் ஏன் வந்தாய் இங்கே...? ஏழ்மையிலும் மானஅவமானத்தோடு வாழ்ந்த என் குடும்பத்திற்கு கோடாரிக் காம்பாகப் பிறந்தவளே! பிறந்ததும் தாயை விழுங்கினாய்; வாழ்ந்த போதும் எங்கள் மானத்தை விலை பேசி வாங்கினாய்; இப்போது சொந்தத் தங்கையின் வாழ்வை முறித்துத் தந்தையின் உயிரையும் பறிக்கப் போகிறாய்! இன்னும் உயிரோடு இருந்து என்னென்ன விசித்திரங்களை விளைவிக்கக் காத்திருக்கிறாய்?" — கோபத்தின் மேலீட்டால் சூடேறிப் போன வார்த்தைகளை 'பொல பொல' வென்று கொட்டித் தீர்த்தான் அருணாசலம்!

"அப்பா......!" சீற்றக் குரலெழுப்பினாள், பத்மா.

"மாமா.........!" பத்மாவை மணமுடிக்க வந்த மாப்பிள்ளை இது.

சுற்றிலும் ஒரு முறை தன் பார்வையைச் சுழற்றிய அருணாசலம் விழிப் பரப்பிலே விந்தையை நிரப்பிக் கொண்டு நின்றான்.

"இந்தாங்க! தங்கம், சொக்கத் தங்கத்தைவிட மேலானவள். அவளைக் கடிந்து கொள்ளாதீர்கள். எல்லாம் நான் செய்த பாவம்; இந்தப் புண்ணியவதி மட்டும், இந்த வேளையில் வந்திராவிடில் நம் குடும்பமே அவமானத்தால் குன்றி அல்லோலகல்லோலப் பட்டிருக்கும். நான் தந்த வேதனையைப் பொறுக்காது கடலிலே விழுந்து தற்கொலை செய்து கொள்ளப் போன தங்கத்தைக் காப்பாற்றி இதுவரை வைத்தது நம்ப சம்பந்திக் குடும்பம் தானாம்! அவள் கூறியதால் தான் பத்மாவின் திருமண ஏற்பாடும் ஆயிற்றும்." — எனப் பொங்கி வழியும் கண்ணீரிடையே கூறினாள், திருந்தி விட்ட செல்லம்மாள்.

"அப்படியா? தங்கம்! உன்னைப் பெற்றும் போஷிக்காத இந்தப் பாவியை மன்னித்துக் கொள்ளம்மா!" — கைகளைப்பிடித்துக் கெஞ்சினான், அருணாசலம்.

"மாமா! அவர்கள் இப்போது உங்கள் மகளல்ல; சம்பந்தி. எங்கள் பெரிய தந்தையின் இல்லத்தரசி" — இது அருணாசலத்தின் மாப்பிள்ளை!

"என்ன? என் தங்கத்திற்கும் திருமணம் ஆகிவிட்டதா?" என்று அவளது கழுத்திலாடும் மஞ்சள் கயிற்றைக் கடைக்கண்ணால் கவனித்தான் அருணாசலம்.

"ஆம்; எனக்கு 'அக்கா'ளாக இருந்தப் புண்ணியவதி எனக்காகத் தன் இளமை நினைவுகளை எல்லாம் பொசுக்கித் தியாகத் தீயிலிட்டுக் கொண்டு மாமியாராக மாறி நிற்கிருள்" — துக்கம் குரல்வளையை நெருக்கப் பேசினாள், பத்மா!

"பத்மா! எனக்கொன்றும் குறைவில்லை; உன் அன்பு ஒன்றிற்காகத் தான் நான் வாழ்கிறேன். உனது இன்பத்தில் தான் நான், நாள் கடத்த விரும்புகிறேன்! இதோ, இந்த தெய்வம் நம்மை எல்லாம் காப்பாற்றும்" என்று கைகுவித்து நின்றாள் தங்கம்.

வெகுளித் தங்கமா இப்போது தத்துவார்த்தம் பேசுகிறாள்? அனைவருள்ளத்திலும் இந்த ஒரே கேள்வி தான் எழுந்து பரவி நின்றது.

வாழ்நாளெல்லாம் வேதனையையே மொத்தவிலை பேசி வாங்கிக் கொண்டவர்களுக்கு ஒரு சிறிது இதமான இன்பத் துணை கிடைத்தாலும் அதற்காக அதைச் செய்தவர்களுக்குத் தங்கள் சக்தி எல்லாவற்றையும் பிரயோகித்து ஏகோபித்ததொரு 'நன்றிக் கடன்' செலுத்தத்தான் செய்வார்கள்!

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES — RING SPINNING FRAMES

DRAWING FRAMES — REELING MACHINES

FLY FRAMES — BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes

ENQUIRIES SOLICITED:

TEXTOOL COMPANY LIMITED

Post Box No. 221, Coimbatore (South India)

Telephone: 409 & 1409 *Telegrams: "TEXTOOLCO"*

வெற்றி யாருக்கு?

(எஸ். லட்சுமி சுப்பிரமணியம்)

அன்று எனக்கு வந்த தபால் ஓரே ஒரு புக்-போஸ்ட்தான். கல்யாணத்துக்கு அழைப்பு என்று தெரிந்ததும் கொஞ்சம் சுவாரசியத்தோடு பிரித்தேன்,

விநாயகசுந்தரத்துக்குக் கல்யாணம். தஞ்சாவூரில் நடக்கப் போவதாகப் போட்டிருந்தது. தங்க ரேக்குக் காகிதத்தில் பச்சை நிற எழுத்துக்கள் கண்ணைப் பறித்தன. விநாயகத்துக்கும் ஒரு பெரிய செல்வந்தருடைய பெண்ணுக்கும் கல்யாணம். பத்திரிகையைப் படிக்கும் போது என் கண்கள் கூசின.

கண்கள் மட்டுமா கூசின? மனமும் தான் கூசியது. உள்ளூரப் புகைந்து கொண்டிருந்த பொறாமைக் கனல் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. அவனும் நானும் எவ்வளவு சிறிய வயதிலிருந்து ஒன்றாகப் பழகியவர்கள்! எங்களுக்கிடையே எத்தனை போட்டி?

பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது இரண்டு பேருக்கும் படிப்பில் ஓயாத போட்டி. நான் இரண்டு பாடத்தில் முதல் மார்க் வாங்கியிருந்தால் அவன் வேறு இரண்டு பாடங்களில் முதல் மார்க்கு வாங்கியிருப்பான். நான் ஒரு பரீட்சையில் முதலாக வந்து விட்டால் அவன் இன்னொரு பரீட்சையில் என்னை முந்திக்கொண்டு முதலாக வந்து விடுவான். எனக்கு ஓட்டப் பந்தயத்தில் மெடல் கிடைத்தால் அவனுக்குத் தாண்டிக் குதிக்கும் பந்தயத்தில் நிச்சயம் மெடல் கிடைத்து விடும். விநாயகத்தைப்பற்றி யாராவது ஏதாவது சொன்னால் நான் காதைத் தீட்டிக் கொண்டு கேட்பேன். என்னைப்பற்றி யாராவது பேசினால் அவனும் அதை அப்படித்தான் கேட்டுக் கொண்டிருந்தானோ என்னவோ?

அதைப் பொறாமை என்று சொல்ல முடியாது. போட்டியில் ஏற்பட்ட தீவிரம் என்று வேண்டுமானால் சொல்லலாம். இரண்டு பேருக்கும் அந்தப் போட்டியிலேயே ஒரு சுவாரசியம். மற்றப்படி நாங்கள் நண்பர்களாகத்தான் பழகி வந்தோம்.

எஸ். எஸ். எல். ஸி. வகுப்பில் அவனுக்கு நிறைய மார்க்குகள் கிடைத்தன. என்னுடைய மார்க்குகள் கொஞ்சம் அடுத்த படியாகத்தான் இருந்தன. அவனுக்கு ஒரு நல்ல காலேஜில் இடம் கிடைத்தது. எனக்கு அங்கே இடம் கிடைக்கவில்லை. நான் வேறு எங்கேயோ சேர்ந்து விட்டேன். ஆனால் ஊருக்கு வரும்போதெல்லாம் அவனைப்பற்றி விசாரிப்பேன். அதில் எனக்கு ஒரு ஆவல். இரண்டாம் வருஷம் 'இண்டர்' பரீட்சையில் நான் அவனை முந்திவிட்டேன். நல்ல மார்க்குகள் வாங்கி ஹானர்ஸில் சேர்ந்தேன். அவன் சரியாகப் படிக்கவில்லை போலிருக்கிறது. பரீட்சையில் தோற்றுப் போனான். அந்தச் செய்தி என் காதில் விழுந்த போது என் வெற்றியினால் ஏற்பட்ட பெருமிதம் கூடக் கண்காணாமல் மறைந்து போய் விட்டது. அவனிடம் அனுதாபமே ஏற்பட்டது. என்ன ஆனாலும் சிறு வயது முதல் என்னுடன் பழகிய நண்பன் அல்லவா?

நான் இரண்டாவது வருஷம் படித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று எங்கள் குடும்பத்தில் எதிர்பாராத சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன. நான் படிப்பைப் பாதியிலே விட்டு விட்டு ஊருக்கு வரவேண்டியதாகி விட்டது. குடும்ப பாரம் என்னை அழுத்தியது. விநாயகம் இண்டர் தேறிவிட்டு மேற்படிப்பில் சேர்ந்து விட்டான். என் மனதில் சொல்ல முடியாத ஒரு ஏக்கம். வேலை தேட ஆரம்பித்தேன். ஊரோடு ஒரு வேலையில் அமர்ந்தால் குடும்பத்துக்கு சௌகரியமாக இருந்திருக்கும். ஆனால் அப்படி வேலை எங்கே கிடைக்கிறது?

சென்னையில் ஒரு வேலைக்கு மனுப் போட்டேன். கொஞ்சம் ஒழிந்த வேளையில் டைப் அடிக்கவும், சுருக்கெழுத்தும் பழகி இருந்ததால் வேலை கிடைத்தது. நூற்றிருபது ரூபாய் சம்பளம். ஒரு பத்திரிகைக் காரியாலயத்தில் வேலை. யாரிடமும் போய் நிற்காமல் என்னுடைய சொந்த முயற்சியிலேயே வேலை கிடைத்து விட்டதைப் பற்றி

கல்வியிலே ஆரம்பித்த போட்டி, கலியாணம் வரை தொடர்ந்தது! இறுதி வெற்றி பெற்றது யார்? என்பதை விளக்குகிறது கதை!

எனக்கு ஒரு சந்தோஷம். அவ்வளவு தானு? விநாயகம் இன்னும் படித்துக் கொண்டுதான் இருந்தான். நான் ஒரு வேலையில் அமர்ந்து விட்டேன். சம்பாதிக்க ஆரம்பித்து விட்டேன். அது தான் முக்கியமான காரணம், என்னுடைய மகிழ்ச்சிக்கு.

விநாயகம் பட்டம் பெற்றுக்கொண்டு ஊருக்கு வந்து விட்டதாகக் கேள்விப் பட்டேன். என்னுடைய பெயருக்குப் பின்னல் சூனியமாக இருந்த இடம் என் நெஞ்சில் முள்ளாக உறுத்தியது. ஊருக்குப் போகும் போது அவனைப் பார்ப்பேன். அவன் என்னென்னவோ வேலைகளுக்கு மனுப் போட்டுக் கொண்டிருந்தான். ஆனல் ஒரு வெறும் பி. ஏ. படிப்புக்கு இந்த காலத்தில் என்ன பெரிய வேலை கிடைத்து விடப் போகிறது? என்னை விடப் பெரிய வேலையில் அவன் அமர்ந்து விடுவான் என்ற சந்தேகம் எனக்கு இல்லை. நான் நினைத்தது சரியாகப் போயிற்று. அவன் ஒரு பள்ளிக்கூடத்தில் தற்காலிகமாக ஒரு உபாத்தியாயராக அமர்ந்தான். மேலே பி. டி. படித்துப் பாஸ் பண்ணினல் தான் வேலை காயமாகும். சம்பளமும் என்னை விட முப்பது ரூபாய் குறைவு. என் மனதில் ஏற்பட்ட உணர்ச்சி எத்தகையது? என்னுலேயே விவரிக்க முடியவில்லை.

இப்போது அவன் கல்யாணப் பத்திரிக்கை வந்து சேர்ந்திருக்கிறது. அடுத்தவாரம் கல்யாணம். பத்திரிக்கையின் தோரணையைப் பார்க்கும் போது பெரிய இடத்து சம்பந்தமாகப் பட்டது. மாமனர் பெரிய புள்ளியாக இருக்கலாம். அவனைக் கை தூக்கி விட்டு விடுவார். நல்ல வேலை ஒன்று சம்பாதித்துக் கொடுக்கலாம். அல்லது பெரிய வியாபாரியாக இருக்கலாம். கூட்டாக வைத்துக் கொண்டு வியாபாரத்தில் இறங்கலாம். எப்படி இருந்தால் என்ன? விநாயகம் என்னை முந்தி விட்டான். கடைசியில் அவனுக்கு அதிர்ஷ்டம் கூரையைப் பொத்துக் கொண்டு கொட்டி விட்டது.

பழகின தோஷத்திற்காகக் கல்யாணத்திற்குப் போய் விட்டு வந்தேன். லீவு கிடைப்பதே கஷ்டமாகத்தான் இருந்தது. இருந்தாலும் போய்விட்டு வர வேண்டுமென்று ஒரு துடிப்பு. அவனுடைய புது சம்பந்தம் எப்படிப் பட்டது என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? என்னுடைய அனுமானத்தில் தவறில்லை. நல்லவகையான இடத்தில் தான் சம்பந்தம். சீர் வகைகளில் செல்வம் கொழித்தது. அவனுக்குத் தைத்துக் கொடுத்திருந்த உடுப்பு ஒன்றே போதும்.

ஆனல் அவன் உற்சாகமாக இல்லை. என்னை வரவேற்றபோது கூட ஒரு வரட்டுப் புன்னகைதான். முதலில் காரணம் புரிய வில்லை. கடைசியில் தான் தெரிந்தது. பெண் நல்ல கறுப்பு. முகமெல்லாம் அம்மை வடு. கருவேப்பிலைக் காம்பு மாதிரி உடம்பு ஒரே நறுங்கல். விநாயகத்தின் கம்பீரமான தோற்றத்துக்குப் பக்கத்தில் அவள் நின்ற போது கொஞ்சங்கூடப் பொருத்தமாக இல்லை. எனக்கு விஷயம் புரிந்தது. விநாயகத்தை விலைக்கு வாங்கி விட்டார்கள்! அவ்வளவு தான்.

அதனல் என்ன? பணக்கார இடத்தில் பெண் குதிர்ந்து விட்டது. பெண் கொஞ்சம் நோயும் நொடியுமாக இருப்பதாகக் காதில் விழுந்தது. அவனைப் பொறுத்த வரையில் சீரும் சிறப்புமாக இருப்பதாகத்தான் கேள்விப்பட்டேன். என் மனதில் அதன் எதிரொலி இருந்தது. என்னுடைய வேலையும், சம்பளமும் அற்பமாகத் தோன்றின. மனம் சோர்வடைந்தது. என் திறமையில் இருந்த நம்பிக்கை குன்றி, என் அதிர்ஷ்டத்தின் மேல் ஆத்திரமும், வெறுப்பும் வளர ஆரம்பித்தன. ஆனல் ஒரு விஷயத்தை நினைக்கும் போது மட்டும் என் மனத்தில் கள்ளத்தனமாக ஒரு திருப்தி துளிர் விட்டது.

ஆமாம். உண்மையைச் சொல்வதில் என்ன தப்பு? இந்த அளவுக்கு மற்ற விதங்களில் அதிர்ஷ்டத்தைக் கொடுத்த கடவுள், மனைவி விஷயத்தில் மட்டும் அளந்து தான் போட்டிருக்கிறார் என்று நினைத்து என்னையே தேற்றிக் கொண்டேன்.

அம்மா என்னை ஓயாமல் தொந்தரவு செய்து கொண்டே இருந்தாள். "விநாயகம் கூடக் கல்யாணம் செய்து கொண்டு விட்டான். நீ எப்போது தான் ஒரு பெண்ணைக் கல்யாணம்

பண்ணிக்கொண்டு எனக்கு விடுதலை கொடுக்கப் போகிறாயோ?'' என்று அடிக்கடி சொல்வாள். கூடவே, "அவன் அதிர்டசாலிதான். நல்ல சம்பந்தம். கணக்குப் பார்க்காமல் நிறையச் செய்திருப்பார்கள். நாம் வேண்டுமென்றாலும் நமக்கெல்லாம் அவ்வளவு பெரிய சம்பந்தம் கிடைக்குமா? எல்லாவற்றுக்கும் கொடுத்து வைக்க வேண்டாமா?'' என்று குறைப்பட்டுக் கொள்வாள். அவள் மன வேதனை முகத்தில் தெளிவாகத் தெரியும்: அதிர்ஷ்டமில்லாமல் போய் விட்ட என்னைப் பெற்ற வயிறு பாக்கியசாலியான இன்னொரு தாயைப் பார்க்கும்போது கொந்தளிக்கத் தானே செய்யும்?

என் தாயாரின் குறையும் கொஞ்சம் நிவர்த்தியாகி விடும் போலத்தான் இருந்தது. அன்று என் பக்கத்து ஸீட்டில் விளம்பர ஆர்டர் பெற்றுக் கொள்ளும் பகுதியில் ஒரு பெண் வந்து புதிதாக வேலையை ஒப்புக் கொண்டிருந்தாள். அவளை ஒரு கணம் ஏற இறங்கப் பார்த்தேன். பார்த்த அந்த கணத்திலேயே அவளுடைய அழகில் மெய்மறந்தேன். அதுவரையில் நான் எவ்வளவோ இடங்களில் எத்தனையோ அழகிய பெண்களைப் பார்த்ததுண்டு. புகைப் படங்களிலும் திரைப் படங்களிலுமாக எத்தனையோ அழகிகளைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அந்தப் பெண்ணைப் போன்ற உருவமும் கவர்ச்சியும் வாய்ந்தவர்களைக் கண்டதில்லை. கொஞ்ச நேரம் வரை வேலை ஒன்றும் ஓடாமல் அவள் போகும் திக்கையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். கடைசியாக அவளை நேருக்கு நேர் சந்தித்த போது என் உடல் வியர்த்து விட்டது. அவள் தன் அகன்ற விழிகளால் ஒரு முறை என்னைப் பார்த்தபோது என் இதயமே அந்தக் கணத்தில் பறிபோய் விட்டதை உணர்ந்தேன்.

வேலைக்குப் புதிதாகையால் நீலா என்னிடம் அடிக்கடி ஏதாவது சந்தேகம் கேட்க வருவாள். என் வேலையையும் நிறுத்தி விட்டு எனக்குத் தெரிந்ததைச் சொல்லிக் கொடுப்பேன். அப்போதெல்லாம் நான் அவள் கையில் இருந்த காகிதத்தைப் பார்த்தேனா, அல்லது என் மனதைப் போல ஊசலாடும் அவள் விழிகளின் அழகையோ பார்த்துத் தடுமாறிக் கொண்டிருந்தேனா என்பது எனக்கே சந்தேகம் தான்.

அவள் சகஜமாகத்தான் எல்லோருடனும் பழகினாள். எனக்கு அதைப் பார்க்க ஒவ்வொரு சமயம் பொறாமையாகக் கூட இருக்கும். எல்லோரிடமும் பேசுவது போலத்தான் என்னிடமும் பேசுவாள். நான் மணமாகாதவன் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் அதற்காக ஒரு வித்தியாசமும் பாராட்டியதாகத் தெரியவில்லை.

எனக்கு அவள் மனதில் என்ன இடம் கொடுத்திருந்தாள்? அதுவும் புரியவில்லை. அவளிடம் என் மன நிலையைச் சொல்ல வகையறியாமல் தடுமாறிக் கொண்டிருந்தேன்.

அவள் சம்மதம் தெரிவித்து விட்டால் என் தாயாரைக் கூடச் சம்மதிக்க வைத்து விடலாம் என்ற தைரியம் எனக்கு இருந்தது. மற்ற விஷயங்களில் தாயாருக்கு ஏதாவது குறை இருந்தாலும் அவளைப் பார்த்ததும் எல்லாம் சரியாகி விடும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. நீலாவைப்போன்ற ஒரு பெண் வீட்டுக்கு வருவதற்கு யார்தான் சம்மதிக்க மாட்டார்கள்?

மூன்று மாதங்கள் ஓடி விட்டன. சேர்ந்தாற்போல் நான்கு நாட்கள் விடுமுறைக்குப் பிறகு அன்று காரியாலயத்துக்குப் போனேன். அன்று எப்படியாவது நீலாவிடம் என் தீர்மானத்தைச் சொல்லி விடுவது என்று முடிவு கட்டியிருந்தேன். அதனால் காரியாலயத்துக்குக் கொஞ்சம் முன்னதாகவே போனேன். அவள் இடத்தில் அவளைக் காணவில்லை. "சரிதான் வரட்டும்!" என்று என் மனதுக்குள்ளேயே என்ன செய்வது என்று ஒத்திகை போட்டுக் கொண்டிருந்தேன்.

அன்று அவள் வரவே இல்லை. எனக்குப் பெரும் ஏமாற்றம். மறு நாளும் அவள் வரவில்லை. விசாரித்ததில் அவள் பத்து நாட்கள் லீவுக்கு எழுதியிருப்பதாகத் தெரிந்து கொண்டேன். அந்தப் பத்து நாட்களும் அவள் எங்காவது அகஸ்மாத்தாகத் தென்படமாட்டாளா என்று நான் கடற்கரை, கோயில், குளம், சினிமாத் தியேட்டர் என்று தேடாத இடமில்லை. கும்பல்கூடும் இடத்தில் எல்லாம் கால் கடுக்க நின்று பார்த்தேன். ஜவுளிக் கடைகள் வாசலில் நிற்க வைத்திருக்கும் பொம்மைக்கு ஜோடியாக நானும் நிற்பேன். அவளைக் காணவில்லை. அவள் விலாசத்தைத் தெரிந்து கொள்ளாமல் போனேனே என்று என்னையே நொந்து கொண்டேன்.

பத்து நாட்கள் கழிந்த பிறகும் அவள் வரவில்லை. ஆபீஸ் பியூன் சாலமனிடம் வழக்கமாகக் கொடுக்கும் நாலணாவுக்கு எட்டு அணாவாக அழுது தொலைத்தேன். அவன் போய் விசாரித்துக்கொண்டு வந்தான். "அது வேலையை உட்டுப் பூட்டுது ஸாமீ! அவுங்க நாயினா இருந்தாரு, அதுவும் இருந்திச்சு! நாயினா வேறே ஊருக்கு மாத்தலாகிப் பூட்டாரு. அதுவும் போயிடுச்சு. இனிமேல் வராது ஸாமீ!" என்று அவன் சொன்னதைக் கேட்டபோது எனக்கு இடி விழுந்ததைப் போல ஆயிற்று.

அந்த வருஷம் வேண்டாவெறுப்பாக அங்கே வேலை செய்தேன். அடுத்த வருஷம் தஞ்சாவூரில் என் தகப்பனாருக்குத் தெரிந்த மனிதர் ஒருவர் வியாபாரம் ஆரம்பித்தார். என்னை அவரிடம் கொஞ்சம் கூடுதலான சம்பளத்துக்கு வந்து விடும்படி கூப்பிட்டார். "நல்லதாகப் போயிற்று" என்று சென்னையையும், நீலாவின் ஞாபகத்தையும் துறந்து விட்டு அங்கே போய்ச் சேர்ந்தேன்.

என் தாயார் இப்போது ஓயாமல் என் திருமணத்தைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினாள். அவள் மேலும் குற்றம் இல்லை. எத்தனை நாளைக்குத் தான் அவள் உழைக்க முடியும்? நானுந்தான் என்னைப் பொருட்படுத்தாமலே போய் விட்ட அந்தப் பெண்ணுக்காக எத்தனை பேரைக் குறை சொல்லித் தள்ளிக் கொண்டிருக்க முடியும்? கடைசியில் ராஜத்தை மணந்து கொண்டேன்.

கல்யாணத்தின் போது என் மனம் கொஞ்சம் தடுமாறியது. அந்த இடத்தில் இருக்க வேண்டியவள் நீலா அல்லவா? கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமலே போய் விட்டது. நான் கொடுத்து வைத்தது அவ்வளவு தான். ராஜம் நீலாவைப் போல் அவ்வளவு அழகில்லாவிட்டாலும் விநாயகத்தின் மனைவியை விட எவ்வளவோ மேலானவள். அந்தத் திருப்தியில் என்னையே தேற்றிக் கொண்டேன். கல்யாணத்துக்கு விநாயகம் கூட வரவில்லை. கடிதம் தான் எழுதி இருந்தான். நான் அதற்காக அதிகமாக வருத்தப்படவில்லை. வந்திருந்தால் ஒருவேளை பொறாமைப்பட்டிருப்பானோ என்னவோ? யாருக்குத் தெரியும்?

அன்று தஞ்சாவூர் ஸ்டேஷனில் ஒரு நண்பரை வழியனுப்பிவிட்டு வெளியே

வந்து டவுன் பஸ்ஸுக்காக நின்று கொண்டிருந்தேன். கதம்ப மணம் மூக்கைத் துளைத்தது. ராஜத்துக்காக கொஞ்சம் கதம்பம் வாங்கிக் கொண்டேன். முதுகில் யாரோ ஓங்கித் தட்டியதும் திரும்பிப் பார்த்தேன். விநாயக சுந்தரம் தான் தன்னுடைய வழக்கமான புன்முறுவலுடன் நின்று கொண்டிருந்தான்.

"என்னப்பா கல்யாணத்துக்குக்கூட வர முடியவில்லையா? நான் வந்ததெல்லாம் மறந்து போய் விட்டதாக்கும்?" என்று கேட்டேன்,

"சீச்சி! அப்படியில்லை, வர வேண்டுமென்று தான் இருந்தேன். கடைசியில் ஒரு அசந்தர்ப்பம். பெரிய கதை. உன்னிடம் நிறையப் பேச வேண்டும். நான் இப்போது இங்கே மாற்றலாகி வந்து விட்டேன். நாளைக்கு மனைவியையும் அழைத்து வருகிறேன். விலாசத்தைக் கொடு" என்று எழுதி வாங்கிக்கொண்டான்.

அந்தக் கொஞ்ச நேரத்துக்குள் அவன் வேலையைப் பற்றியும் சம்பளத்தைப் பற்றியும் விசாரித்து விட்டேன். நல்ல உத்தியோகம். ஆனால் வருவாய் என்னை விட அதிகமில்லை. அதைத் தெரிந்து கொண்டதில் ஒரு திருப்தி.

மறுநாள் மாலை வீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். வாசலில் செருப்பு சப்தம் கேட்டது. வாசலில் விளக்கைப் போட்டு விட்டு எட்டிப் பார்த்தேன். விநாயகம் தான் வந்திருந்தான். "வா! வா!" என்று கூப்பிட்டபடி உள்ளே நுழைந்தேன். அவன் திரும்பிப் பார்த்த வண்ணம் "நீயும் வாயேன். என்ன சங்கோஜம். இவன் தான் என் நண்பன் பாலு. உன்னிடம் அடிக்கடி சொல்லி இருக்கிறேனே?" என்று பேசிக்கொண்டே உள்ளே நுழைந்தான்.

கை கூப்பி வரவேற்றபடி படிக்கட்டைப் பார்த்தவன் அப்படியே ஒரு கணம் நின்று விட்டேன். அழகுத் தெய்வம் உயிருடன் வந்தது போல அங்கே ஒய்யாரமாக நின்ற பெண் நீலாவேதான்.

"இது...உன்..." என்று தடுமாறினேன்.

"இது என் இரண்டாவது மனைவி. முதல் மனைவி கல்யாணம் செய்து கொண்ட மறு வருஷமே 'டைபாய்டு' சுரத்தில் இறந்து போனாள். போன வருஷம் தான் கல்யாணம் ஆயிற்று. உன் சென்னை விலாசத்துக்குக் கூட அழைப்பு அனுப்பி இருந்தேனே?" என்றான்.

அவன் பேசுவது எனக்குக் கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போலக் காதில் விழுந்தது. உள்ளே போய்க் கொண்டிருந்த நீலாவின் எழில் உருவம் என் மனத் திரையிலிருந்து மெல்ல மெல்ல அழிந்து கொண்டிருந்தது.

கடைசியில் போட்டியில் யாருக்கு வெற்றி? விநாயகத்துக்குத்தானே?

★



அனுமான் பிராண்ட் சிகரி

நமது நாட்டில் விளையும் சிகரி கிழங்குகளிலிருந்து தயார் செய்யப்படுகிறது. நூற்றுக்கு நூறு உத்திரவாதமுள்ளது. விபரங்களுக்கு எழுதுங்கள்.

தயாரிப்பவர்கள் :

சரஸ்வதி காபி டிரேடிங் கம்பெனி,
318/320, தெப்பம் மேல் பஜார்,
விருதுநகர்.

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனுமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகார வகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுண்டன் பேனு, சிலேட், பென்சில் வகைகள், ஷாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாயமாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு :

போன்: 333

19, கொட்மலே ரோடு,

நாவலப்பிட்டிய.

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262 த. பெ. நெ. 2345

S. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவனிங் பஜார் :: :: P. T. மதுரூஸ்.

&

37, ஹைரோடு,

திருநெல்வேலி ஜங்ஷன்.

போருக்குப் போகவில்லை

சதல்வி

-வே-

கலங்கரை விளக்கம் கண்சிமிட்டும் தாரகைகளைப் பார்த்து, கைகொட்டி நகைத்துக் கொண்டிருந்தது. 'என்னைப் பார்' என்று சொல்லாமல் சொல்லிற்று கடலைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போன கலங்கரை விளக்கு. இந்தத் தாரகையின் ஒளி நம்முடைய ஒளிக்கு முன்னால் எம்மாத்திரம் என்பது விளக்கின் எண்ணம். 'நீ இருக்கும் இடமே தெரியவில்லையே' என்று கண் சிமிட்டியது தாரகை.

ஆம். அந்தத் தாரகை சொன்னது உண்மைதான். கலங்கரை விளக்கு மட்டும்தானா, அதைக்கண்ணும் கருத்து மாகப் பாதுகாத்து வந்த மன்னன் கூட அல்லவா இருக்கும் இடம் தெரியாமல் போய்விட்டான்!

மன்னரின் முகத்தில் போரிலே மாண்டுவிட்ட மாவீரர்களின் எண்ணிக்கை பிரதிபலிக்கவில்லை. ஒரு வேளை அரும்பியிருந்தவியர்வைத் துளிகளின் எண்ணிக்கைதான் அந்த நாட்டுக்காக போரிட்டு மாண்ட மாவீரர்களின் எண்ணிக்கையோ !

குறுகிய அறையிலே குறுக்கும் நெடுக்குமாக நடை பயின்று கொண்டிருந்தான். மன்னன் வருவான் பின்னே அவன் வாள் வரும் முன்னே என்று கூறுவதற்கு காரணமான அவனுடைய கரம் மற்ெருருகரத்தோடு குலவிக் கொண்டிருந்தது. போரிலே கூடப் புறமுதுகு காட்டாதவன்கைகள் இப்போது முதுகுப் புறத்தே இணைந்திருந்தன.

காலடியின் ஒலி, இரவின் அமைதிக்குப் பங்கம் விளைவித்தது. சிதறிய எண்ணங்கள் வெங்கியைவிட்டுத் திரும்பி வர மறுத்தன.

பல்லவ மன்னன் மஹேந்திரவர்மன் என்ன செய்வதென்று அறியாமல் துடித்துக் கொண்டிருந்தான். வெங்கி நாட்டை புலிகேசியிடம் ஒப்படைத்தாகிவிட்டது. உயிர், உடலுக்குள் என்று திரும்பி வருமோ ? வெங்கியை வெல்லும் வரை அவனுக்கு அமைதி ஏது ?

இரவுபகலாகத் திட்டம் போட்டான் புலிகேசியை புறமுதுகு காட்டி ஓடச் செய்ய. அந்தரங்க ஆலோசகர்கள் அவனை அடிக்கடி சந்தித்தனர். அவனுடைய உள்ளத்தை சமாதானப் படுத்த அடியார்கள் வந்தார்கள். ஆனால் அவன் எண்ணமெல்லாம் வெங்கியையே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

படை வீரர்கள் எந்த வினாடியும் போருக்குப் புறப்பட ஆயத்தமாக இருந்தனர். ஆனால் மன்னரிடமிருந்துதான் கட்டளை வரவில்லை.

வடக்கே புலிகேசியின் புகழ், கொடி கட்டிப் பறந்துகொண்டிருந்தது. காஞ்சியிலிருந்துகொண்டு. ஒற்றர்கள் மூலம் செய்தியறிந்து கண் இமைக்கும் நேரத்தையும் வீணாக்காது ஆவன செய்து கொண்டிருந்தான் பல்லவன்.

அன்று இரவு ஒரு மணி இருக்கும். ஒற்றன் ஒருவன் வந்தான். அரசனின் அந்தரங்க அறை அவர்களுக்கென்றே திறந்து வைக்கப்பட்டிருந்தது.

பகலவன் உதிப்பதற்குள் பல்லவத் தலைநகர் பரபரப்புடன் காணப்பட்டது. படை வீரர்கள் நகரைச் சுற்றிலும் பதுங்கியிருந்தனர் புலிகேசியின் படையை எதிர் நோக்கி.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. எதிர்பார்த்தது நடக்கவில்லை. 'ஒற்றன்

போருக்குப் புறப்பட்ட புகழ்வேந்தன், கலைக்கு அடிமையானான்!
குருதிக்கு பதிலாக வண்ணக் கலவை நாட்டிலே பாயலாயிற்று!

வந்து சொன்னது உண்மையோ இல்லையோ? ஒற்றன் வந்தானா அல்லது நாமே ஒற்றன் வந்து சொன்னதாக நினைத்துக் கொண்டோமா !

பல்லவ மன்னன் திகைத்து நின்றான்.

பகலவன் உதித்துவிட்டான். படைவீரர்கள் புறப்பட்டுவிட்டனர். பல்லவன் முன் சென்றான்.

எந்த இடம் போர்க் களமாக மாறுமோ எவருக்கும் தெரியாது. 'வெங்கியை வெல்லாது தலைநகர் திரும்புவதில்லை' மன்னன் நினைத்துவிட்டான். நினைத்ததை நிறைவேற்றியே தீருவான். அவனுடைய நெற்றி நரம்புகள் புடைத்து நின்றன. உருண்டு திரண்ட தோள்கள் வலிமையைக் காட்டத் துடித்தன. கை கடிவாளங்களை சொடுக்கி இழுத்தது.

குதிரைகள் அவனுடைய உள்ளத்தை உணர்ந்து விட்டன. இனி அவைகள் நிற்கா. மன்னனின் மனம் மாறினாலும் அந்தப் புரவிகளின் கால்கள் ஓடிக்கொண்டுதான் இருக்கும். புலிகேசியின் புரவிகளை யாவது புறமுதுகிட்டோடும்படி செய்துவிட்டுத் தான் அவைகள் திரும்பும். அவைகளின் வேகமே அதைப் பறை சாற்றுகின்றதே !

படைவீரர்களால் பல்லவனைத் தொடர்ந்து செல்ல முடியவில்லை. மன்னனும் படை வீரர்களை மறந்து விட்டான். அவனுடைய உள்ளமெல்லாம் வெங்கி வெங்கி என்றே ஏங்கிக் கொண்டிருந்ததால் படை வீரர்கள் பின்னால் வருகிறார்களா இல்லையா என்பதையே மறந்து விட்டான். இனி அவனுக்கு ஊணும் உறக்கமும் போர்க்களத்தில் தான்.

புரவிகளைத் தட்டிக் கொடுத்தான். காற்றோடு

போட்டியிட்டன புரவியின் கால்கள். கரடு முரடான பாதை. ஏற்றத்தாழ்வுகளில் ஏறி இறங்கின ரதத்தின் சக்கரங்கள். புரவியின் கால்களும் கற்களும் உறவாடின. இரண்டும் ஒன்றை ஒன்று முத்தமிட்டுக் கொண்ட போது ஏற்பட்ட நெருப்புப் பொறிகள் பகலவனின் ஒளியில் சங்கமமாயின.

மன்னனின் கண்கள் பின்புறம் திரும்பவேயில்லை. ஏன்! உள்ளம் கூடத்தான். கடிவாளத்தைச் சொடுக்கி இழுத்தான். மனோவேகத்தில் ஓடிக் கொண்டிருந்த குதிரைகள் இதை அறிந்தன. பலன் –

'பட்...'

புரவிகள் இரண்டும் ரதத்திலிருந்து தனியே பிய்த்துக் கொண்டன. புரவியின் கால்களோடு போட்டி போட ரதத்தின் உருளைகளால் முடியவில்லை.

புரவிகள் புலிகேசியோடு போரிடப் போய்விட்டன. பல்லவனின் ரதம் மரத்தை முத்தமிட்டு நின்றது.

மன்னவன் மயக்கமுற்றுக் கீழே விழுந்தான். அவனுடைய காதுகளில் எங்கிருந்தோ ஒரு இனிமையான குரல் கேட்டது.

"மன்னா! உனக்கு ஆனாலும் இவ்வளவு ஆசை கூடாது. பல்லவர்களின் புகழ் பல காலம் நீடித்து நிற்க வேண்டுமானால் பகைவர் மீது போர் தொடுக்க வேண்டியதில்லை. கலையை வளர்க்க வேண்டும்.

கல்லிலே சிலையை உருவாக்க வல்ல கலையையும் வளர்க்கலாம். வர்ணக் குழம்பை வாரியிறைத்தால் உருவாகும் கலையையும் வளர்க்கலாம். கல்லிலும் வளர்க்கலாம். மண்ணிலும் வளர்க்கலாம். நீ நினைத்த எந்தப் பொருளிலும் வளர்க்கலாம். அதற்குத் தேவையானது கண்; கலைக் கண், போர்க் கண் அல்ல!

கல்லிலே சிலையைப் படைக்கலாம். வர்ணத்திலே உருவைப் படைக்கலாம். எதிலும் எதையும் படைக்கலாம். எதற்காகச் சொன்னேன் என்றால் படைத்தலும் காத்தலும்தான் உன் தொழிலே யன்றி அழித்தல் உன் தொழில் அல்ல. அழித்தல் எளிது. படைத்தல் அரிது? அதனினும் அரிது அதனைக் காத்தல்.

நங்கையின் முகத்திலே நாணம் தவழுகிறதே என்று அவளுடைய கையைத் தொட்டு காடியைப் பார்க்க இளங்காளையர்கள் துடிக்கவேண்டும். துடி இடையைக் கண்டு துள்ளி ஓடும் மான் மருளவேண்டும். கருங்கல்லிலே செம்மை கலந்த நாணம்படர்ந்த கன்னங்களைக் காட்டவேண்டும். மாதுளைப் பற்களின் வரிசையைக் கண்டு மங்கையர்கள் நாணவேண்டும். சுருங்கக் கூறினால் நீ கலையை வளர்க்க வேண்டும். நீ உயிர் கொடுக்கும் கலையைக்காண ஆயிரமாயிரம் வருடங்களுக்குப் பிறகும் ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து உன் நாடு நோக்கி வரவேண்டும் மக்கள்.

கலையை வளர்த்துப் புகழ்பெறுவதை விட்டுவிட்டு கற்புடைய மங்கையரின் கணவன்மார்களை போர்க்களத்திலே கொன்று குவித்து மண்ணைச் சொந்தமாக்கிக்கொள்ள நினைக்கிறாயே? உனது புகழ் என்றென்றும் அழியாமல் இருக்க உனக்கு எது வேண்டும்? கலையா? மண்ணா? இரு சிற்றூர்களுக்கு அரசனாக இருந்தாலும் அவற்றை செவ்வனே செங்கோலோச்சி ஆள்வது நல்லது மன்னா...!

'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து'!

மன்னன் கண் விழித்தான். நெற்றியிலிருந்து வழிந்த ரத்தம் ஆடைகளை இலேசாக நனைத்திருந்தது. கைகளால் ரத்தத்தைத் துடைத்து உதறிவிட்டு எழுந்தான். என்றும்

இல்லாதபடி அவனுடைய உள்ளம் இன்பத்தால் பூரிப்பதுபோல இருந்தது. அதிர்ச்சியில் கீழே விழுந்து அறிவு பெற்றதை எண்ணிப் பார்த்தான்.

ஓங்கி வளர்ந்த மரத்தைப் பார்த்தான். போதிமரம், ஆம், புத்தனுக்கு ஞானத்தை அளித்த போதிமரம்! போதி மரத்தடியில் நிழலுக்குத் தங்கியவன்கூட புனிதத்துவம் பெறுவான் போலும்!

"புத்தன் தான் பெற்ற ஞானத்தை உலகெலாம் பரப்பினுன். ஏன் பரப்பினுன்? எல்லோரும் அறிந்து அதன்படி நடக்க வேண்டும் என்று தான். ஆனல்—

மறந்தேன்; மறந்ததை நினைவுறுத்தி விட்டது புத்தனுல் புகழ்பெற்ற இந்த மரம். இனி நான் கலைக்காகப் பாடுபடுவேன்."

தனக்குத் தானே சபதம் செய்து கொண்டான்.

"ஐயா, காஞ்சீபுரத்திற்கு இன்னும் எவ்வளவு தூரம் உள்ளது?"

பல்லவன் திரும்பிப் பார்த்தான். மங்கையொருத்தி நின்று கொண்டிருந்தாள்.

"காஞ்சியில் நீ யாரைப் பார்க்க வேண்டும்?"

"மன்னனையா?"

"ஆம். ஓவியக் கலைக்குத் தகுந்த கலைஞர் கிடைக்கவில்லையே என்று மன்னன் அலைந்து கொண்டிருக்கிருராம். அதற்கு ஏற்ற தகுதி என் தந்தை வசம் உள்ளது. அதை தெரிவித்துப் போகவே வந்தேன்"

மன்னனுக்கு உண்மை விளங்கி விட்டது. மறந்ததை நினைவூட்டிய போதிமரம் கலையை வளர்க்க ஒரு கலைஞனையும் காண்பித்து விட்டது. முகத்தில் புன்முறுவல் தவழ அவளைப் பார்த்தான்.

"உன் தந்தையின் பெயர்?!"

"சித்தன்னன்"

போர் வீரர்களின் ஆரவாரம் மன்னனின் காதுகளில் ரீங்காரமிட்டது. புரவிகளின் காலடி ஓசை நெருங்கி வந்தது.

மன்னன் எழுந்து நின்ருன்.

மாவீரர்கள் மன்னனின் நிலையைக் கண்டு திகைத்தனர். ரதத்தைப் பிரிந்த குதிரைகள், வெகு தூரத்தில் கனைக்கும் ஒலி கேட்டது.

அவள் வழிகாட்ட மாவீரர்கள் அவளைப் பின் தொடர்ந்தனர். அறிவு பெற்ற பல்லவனும் கூடத்தான்!

சித்தன்னன் வீட்டு வாசல் எல்லோரையும் வரவேற்றது. பலன்-சித்தன்ன வாசல் சொர்க்கமாக மாறிவிட்டது, ஓவியர்களின் வண்ணத் திறமையால்.

மன்னன் மனம் பூரித்தான். சித்தன்ன வாசலை நினைத்த ஒவ்வொரு நிமிடமும் அவனுடைய நெஞ்சில் கலை நடனம் புரிந்தது.

வரைந்து புகழ் கொண்டான் மஹேந்திரவர்மன். செதுக்கிப் புகழ் கொண்டான் அவனுக்குப் பின் வந்த அவனுடைய புதல்வன்.

★

"சீ, கழுதை! யாரைப் பார்த்து 'பல்லி'ங்குறே?"

"உன்னைச் சொல்லல்லே! அதைப் பார்த்துத்தான் சொன்னேன்!"

பொம்மைக் கல்யாணி

கோ. வி. மணிசேகரன்

வழக்கமாகக் காதலர்களின் வாழ்க்கையிலும் சரி, எழுத்தாளர்களின் கற்பனையிலும் சரி, காதலிதான் "நாம் எத்தனை நாட்களுக்கு இப்படித் திருட்டுத்தனமாகச் சந்தித்து வருவது? நமது கலியாண விஷயத்தைப் பற்றிக் கொஞ்சங்கூட யோசனை செய்யமாட்டேன் என்கிறீர்களே! எங்கள் வீட்டில் மாப்பிள்ளை தேடும் படலத்திற்கு முனைந்துவிட்டார்கள்எனத்தெரிகிறது. நீங்களும் உங்கள் வீட்டில் சொல்லி என்னைப் பார்க்க வரக்கூடாதா?" என்று காதலனை நோக்கிக் கேட்பாள். ஆனால் நமது கல்யாணியோ, நேர்மாருகத் தன்னுடைய காதலனே மேற்கண்டவாறு அடிக்கடிக் கேட்குமளவிற்கு நாட்களைக் கடத்தி வந்தாள்!

கல்யாணியின் தகப்பனுர் ஒருதமிழ்ப் பேராசிரியர். தமிழ்ப் பேராசிரியர் என்ருல் அப்படி, இப்படியான பேராசிரியரல்ல. புகழ் பெற்ற மேதை. நிறையப்புத்தகங்களை ஆராய்ச்சி வடிவமாக்கி வாசகர்களின் மூளையை அலைமோத விட்டவர். அகநானூறு, புறநானூறு என்று எண்ணூறு தடவை வேண்டுமானுல்மேடையில் பேசுவாரே ஒழிய, எழுத்தில் மட்டும்கும்பகோணத்துத் துவரம் பருப்பின் மேன்மையைப் பற்றியும், நெல்லூர் அரிசியின் கனத்தைப் பற்றியும்,கேரளத்துப் பசு மாட்டு நெய்யின் மகிமையைப் பற்றியும் பக்கம் பக்கமாக அலசி உயிரை எடுப்பார்.

கல்லூரி மாணவர்கள் கூட சில சமயங்களில் 'இவரை உணவு மந்திரியாக அனுப்பலாம் என்று இரகசியமாகப் பேசிக் கொள்வது வழக்கம்.

ஆனல் மாணவிகள் மட்டும் இவரை 'சரியான சாப்பாட்டு ராமர் போலிருக்கே' என்றும், 'அதனுல்தான் பகல் வேளையில் 2-45-க்கு வகுப்புக்கு வருகிருர்' என்றும் சிலேடையாக இன்னும் பல விதங்களில் பேசி 'கார்ட்டூன்' ஆக்கிக் கொள்வது வழக்கம்.

இம்மாதிரிக் கட்டங்களில் அசந்தர்ப்ப வசமாகக் கல்யாணி பிரவேசிக்க நேரும்போது, அடடா, பார்க்க வேண்டுமே அவளுடைய முகத்தை! 'கண்ணேறு கழித்த பூசனிக்காய்' போல குங்கும நிறத்தில் கொதித்தெழும்!

துரைசாமி ஓர் எழுத்தாளன். அதாவது எழுத்தாளன் என்று சொல்லிக் கொள்பவன். ஆனல் உருப்படியாக ஒன்றும் எழுதத் தெரியாது.

சில சமயங்களில் காயலான் கடைப் பத்திரிகைகளில் அவனுடைய எழுத்து வெளி வருவதும் உண்டு. அந்த எழுத்துக்களைத் திரட்டி எந்த விதமாகவோ புத்தகமாகவும் வெளியிட்டு விட்டான். அவைகளும் நாளடைவில் 'வேஸ்ட் பேப்பர்' கடைக்கு வந்து விடும். பிறகு கடற்கரை ஓரங்களில் அவைகளை வாங்கிப் படித்தவர்கள், 'காக்கை கிளறிய தளிகைச்சோறு மாதிரியிருக்கே!' என்றும் விமர்சனம் செய்து விட்டு செலவு செய்த ஓரணுவுக்காக ஒரு பெருமூச்சு விடுவதும் வழக்கம்.

கல்யாணி, கல்லூரி முடிந்ததும் தன்னுடைய தோழிகளுடன் தினமும் துரைசாமி குடியிருக்கும் வீதிப்புறமாகப் போவது வழக்கம். துரைசாமியும் அலங்கார ரூபனுகத் தினமும், பெண் வேட்டைக்காகத் தெரு வாயிற் படியில் நின்று மன்மதச் சிரிப்புச் சிரிப்பான். அந்தச் சிரிப்பில் சிக்கியவள் தான் கல்யாணி.

தான் ஓர் எழுத்தாளன் என்பதை அறிந்து தான் கல்யாணி தன்னைக்

கல்யாணியின் தந்தையைக் கண்டதும் துரைசாமி மறைந்து விட்டான்; காதலி கல்யாணியும் 'பொம்மை' ஆனுள்!

காதலிக்கிறாள் என்று துரைசாமி உள்ளுக்குள் எண்ணினான். ஆனால், உண்மையில் அவன் கல்யாணியை விட அழகாகவே இருந்தான். அவனுடைய பெண்மை நிரம்பிய முகமும், நேர் வகிடும் தான் காதலுக்கு மூல காரணம் என்பதை அவனறியான்.

காதல் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது.

துரைசாமி தனிக்கட்டையாதலால் வீட்டிலேயே அவர்களுடைய சந்திப்பு நீடித்தது. குடியிருப்பவர்களின் கூச்சலுக்குப் பிறகு நந்தவனங்கள் வரவேற்றன. அங்கு தெரிந்த மாணவர்களின் அரட்டைக்குப் பிறகு, கல்யாணி அவனைச் சந்திப்பதற்கே ஒரு முற்றுப்புள்ளி போட்டு விட்டாள்.

துரைசாமி, புழு போல் தவித்தான். காதல் பேச்சு பேசுவதற்கு நேரம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. ஏதேனும் ஒரு புகழ் பெற்ற பத்திரிகைகளில் அவன் பெயர் கொண்ட எந்த எழுத்தாளனாவது எழுதும் கதை, கட்டுரைகளைக் கொண்டு போய், தான் எழுதியதாகக்காட்டி பெருமைப்பட்டுக் கொள்ளும் அந்தப் பரிதாபத்திற்குரிய நேரமாவது கிடைக்கக்கூடாதா என்று ஏங்கினான். அதனால் தினம், தினம் அவளை எதிர்பார்த்துச் சமயம் கிடைக்கும் போது, கலியாண விஷயமாகப் பெற்றோர்களைத் தூண்டுமாறு கெஞ்சினான்.

கல்யாணியோ படித்துக் கொண்டிருக்கிறாள். இந்நிலையில் அவள் எப்படி கல்யாண விஷயமாகத் தூண்ட முடியும்? அதிலும், அவள் பெண்ணாயிற்றே!

கல்யாணிக்குப்பரீட்சை முடிந்தது. துரைசாமியைக் கல்யாணம் செய்துகொள்வது எப்படி என்று தீவிரமாக யோசித்தாள். ஓர் எழுத்தாளனை மணாளனாக அடையும் பெருமை அவளுக்கு மேலோங்கியது. உண்மையறியாத அவளுக்கு ஒரு வழியும் கிடைத்தது.

உடனே தன்னுடைய காதலனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதில், நாளைய தினம் தமிழ் இலக்கிய மன்றத்தில் தன்னுடைய தந்தை அகத்துறை சொற்பொழிவு செய்யப் போவதாகவும், அதில், காதல் மணத்தை ஆதரித்துப் பேசுவதாகவும் குறிப்பிட்டிருந்தாள். அக்கூட்டத்திற்கு வந்திருந்து கடைசியில் தன்னைக் காணுமாறும் கேட்டுக் கொண்டாள்.

கடிதத்தைப் படித்துப் பார்த்த துரைசாமிக்கு உச்சி குளிர்ந்தது. கலியாண விஷயத்திற்காகத்தான் கல்யாணி ஏதோ மர்ம நாடகம் நடத்தப் போகிறாள் என்று திட்டவட்டமாக எண்ணிக் கொண்டான். அன்று அலுவலகத்திற்கும் ஒருநாள் விடுமுறை போட்டு விட்டான்.

கடிகாரம் மணி நான்கு என்று காட்டியது.

அவசர அவசரமாக அலங்காரம் செய்து கொண்டான். ஒரு வாடகைக் காரை அமர்த்திக் கொண்டான். நேரே இலக்கிய மன்றத்திற்குச் சென்று 'ஜாம் ஜாம்' என்று இறங்கினான்.

இலக்கியத்தைப் பற்றி அக்கு வேறு, ஆணி வேராக அலசி, அலசிப் பேசக்கூடிய பேராசிரியர்கள் பலர் விஜயம் செய்திருந்தனர். கூட்டமும் எக்கச்சக்கமாக இருந்தது.

விழா துவங்குவதற்கு இன்னும் அரை மணி நேரமிருந்ததால், கூட்டம் வருவதும் போவதுமாக இருந்தது. அதிலும் பெண்கள் அமர்ந்திருந்த வரிசையில் வண்ணான் சலவையில் மட்டும் அழகு இருப்பதாக எண்ணும் வாலிபர்கள் அப்படியும், இப்படியுமாகப் 'போஸ்' கொடுத்துக் கொண்டிருந்தனர். அவர்களுடைய 'போஸ்களை' சில அலங்கார ரூபிகள் ரசிக்கவும் செய்தனர். தமிழ் இலக்கியத்தில் அகத்துறை முக்கியமான ஒன்றல்லவா?

கூட்டத்தில் துரைசாமி எங்கு அமர்ந்திருக்கிறான் என்பதை கல்யாணியின் கண்கள் துழாவின, துரைசாமியின் கண்களும் அவ்வாறே!

இரு ஜோடிக் கண்கள் சந்தித்தன. இல்லாதவைகளைப் பேசின. மற்றவர்கள் கவனிப்பில் அவைகள் தப்பவும் செய்தன.

துரைசாமியின் எதிரில் இரு பெரிய மனிதர்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சிலிருந்து அவர்கள் தமிழ்ப் பேராசிரியர்களாகக் காணப்பட்டனர்.

"இந்தக் காலத்துத் தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பற்றென்பதே கொஞ்சம் கூட கிடையாது"

"அதையேன் கேட்கிறீர்கள்? ஒரே ஆங்கிலப் பிரவாளமாகத் தானிருக்கிறது. எவனும் முழுத்தமிழைப் பேசுகிறானில்லை!"

"தமிழை மட்டும்தானா முழுமையாகப் பேசுதற்கு மறுக்கிறார்கள்? ஆங்கிலத்தையும் அப்படித்தான்"

"இந்த நிலை மாணவர்களிடையே நீடித்தால், நாளடைவில் தமிழ் வேற்றுருவம் கொண்டு விட வேண்டியது தான்! பிறகு, இன்று நாம் எப்படிப் புரியாத தமிழைச் சங்க இலக்கியம் என்று சொல்லி விட்டோமோ, அப்படித்தான் நாம் எழுதிய நூல்களுக்கும், பிறவற்றிற்கும் 'பாரதி இலக்கியம்' என்று பிற்காலத்தவர்கள் பெயர் கொடுப்பர். அதை இப்போதே ஒழிக்க முயல வேண்டும்"

"வாஸ்தவம், வாஸ்தவம்"

"சபாஷ்! அப்படிச் சொல்லுங்க! இப்ப நீங்கவேண்டுமானால் பாருங்கள். தெரிந்து விடுகிறது, நமது தமிழ் மக்களின் ஆங்கில மோகத்தை!"

இப்படிக் கூறிய அந்தத் தமிழ்ப் பேராசிரியர், பின்புறமாகத் திரும்பினார், அவருடைய கண்ணில் துரைசாமி பட்டான். துரைசாமியும் அவர்களுடைய உரையாடல்களைக் கேட்டு உள்ளுக்குள் 'சபாஷ்' போட்டுக் கொண்டிருந்தான்.

"தம்பி 'டைம்' என்னப்பா?"-பேராசிரியர் கேட்டார்.

"'கரைக்ட்டா' ஃபைவ் ஆகிறதுங்க" —துரைசாமி பதிலளித்தான்.

பேராசிரியர் முகம் மலர்ந்தது. தன்னுடைய நண்பரை நோக்கினார், வெற்றிப் பார்வையில்.

"பார்த்தீர்களா, பதில் ஆங்கிலப் பிரவாளமாக இருக்கிறது!"

பேராசிரியர் இப்படிச் சொன்னது தான் தாமதம், உடனே துரைசாமி குறுக்கிட்டு, "சார், நீங்கள் கூட 'டைம்' என்று தான் கேட்டீர்களே யொழிய,

'நேரம்' என்று கேட்கவில்லை. முதலில் உங்களைத் திருத்திக் கொள்ளுங்கள். பிறகு நாட்டைத் திருத்தலாம்"—என்று காரசாரமாகப் பதிலளித்தான்.

பேராசிரியர் முகம் அவமானத்தால் சுண்டியது. அவருடைய நண்பர் உள்ளுக்குள்சிரித்துக்கொண்டது அவருக்கு தெரிய வந்தது. துரைசாமியை எரித்து விடுபவர் போல் நோக்கினார். அவருக்கு அப்போது வந்த கோபம், முப்புரம் எரித்த சிவபெருமானுக்குக் கூட வந்திராது. அதற்குள் விழா துவக்க அறிவிப்பு கேட்டு அவர் எழுந்து சென்றார். அப்படிச் சென்றதும், அவருடைய நண்பர் துரைசாமியை மனம் திறந்து பாராட்டினார். காரணம் அவர் 'ராவ் பகதூர்' பட்டத்தை இன்று வரை தூக்கி எறிய மனமில்லாமல் பாதுகாத்து வருபவர்.

விழா முடிவுற்றது.

அகத்துறைப் பேச்சில் அகத்தைப் பறி கொடுத்தவர்கள் காதுகள் முழுதும் காதல் மணத்தில் லயித்திருந்தன. ஏதோ போதை கொண்டவர்கள் போல் மக்கள் வெளியே சென்று கொண்டிருந்தனர்.

ஓரிடத்தில் துரைசாமியும் கல்யாணியும் சந்தித்தனர்.

"நான் போய் அப்பாவை அழைத்து வருகிறேன். உங்களையும் என்னுடைய நண்பர்என்று அறிமுகப்படுத்துகிறேன். நீங்கள் உங்கள் எழுத்தாளர் சாமர்த்தி

யத்தைக் கையாண்டு, அகத்துறையின் காதல் மணத்தைப் பற்றிப் பேசினீர்களே, நான் உங்கள் மகளைக் காதலிக்கிறேன், மணம் செய்து தர வேண்டும், என்று சாவதானமாகக் கேளுங்கள். மறுப்பு இலேசாகத் தலை நீட்டினால், நான் ஒரு எழுத்தாளன் என்றும் பத்திரிகையில் எழுதி விடுவேன் என்றும் பயமுறுத்துங்கள். பிறகு நமது கலியாணம் நிறைவேறி விடும்''— என்று கல்யாணி மூச்சு விடாமல் கூறிவிட்டு, பதிலை எதிர்பார்க்காமலேயே, விரைந்தாள். ஏனென்றால் தகப்பனாரை கோட்டை விட்டுவிடக் கூடாதல்லவா?

துரைசாமிக்கு ஒன்றுமே புரியவில்லை.

விழாவில் பேசியவர்களுள் யார் கல்யாணியின் தந்தை என்று யோசிக்கலானான். அதற்குள் சற்றுத் தொலைவில் கல்யாணியும், அவளுடைய தந்தையும் வருவதைக் கண்டான்.

ஐயோ, மோசம் போய் விட்டோம்!

துரைசாமியின் கண்கள் மறைந்தன. தலை சுழன்றது. தான் எதிர்த்துப் பேசிய அந்த ஆங்கிலப் பிரவாளப் பேராசிரியர் அல்லவோ வருகிறார்! அவர் தான் கல்யாணியின் தந்தையா? நிச்சயம் கலியாணம் நிறைவேறாது!

சந்தடியில்லாமல் நழுவினான். அவன் அவர்கள் கண்ணில் படாமல் எப்படியோ மறைந்து விட்டான்.

துரைசாமியைக் கல்யாணியின் கண்கள் தேடின. அவளுடைய திக்பிரமையைக் கண்டு பேராசிரியர் விழித்தார். கல்யாணி பொம்மையானாள்.

''எங்கேம்மா, உன்னுடைய எழுத்தாள நண்பர்?''

''இங்கேதானப்பா இருந்தார். எங்கே போனார் என்று தெரியவில்லை.''

''சரி, சரி வாம்மா. இப்படிப் பெண் சுற்றிப் பயல்கள் இந்த நாட்டில் மட்டுமல்ல, எந்த நாட்டிலும் ஏராளம். அதற்காக உன்னைப் போன்ற பெண்கள் தான் கவனமாக ஏமாறாமல் நடந்து கொள்ள வேண்டும்!''

பேராசிரியர் தன்னுடைய மகளை அழைத்துக் கொண்டு புறப்பட்டார். அவளும் பொம்மைக் கல்யாணியாய் நகர்ந்து கொண்டிருந்தாள்!

★

Telephone MADRAS: 4890 MADURAI: 581

இன்பம் தரும்

31

301

3001

ஜவ்வாது பத்திகள்

சுகந்த மண்டலம்

உரிமையாளர்கள்:
S.V. பழனிமலை
S.V. ரெங்கசாமி

மதுரை . மதராஸ் . பெங்களூர் . விஜயவாடா

ரஞ்சினியின் வஞ்சம்

(—விமலாரமணி—)

மேற்றிசையிலே மெதுவாக மறைந்து கொண்டிருந்தான் செங்கதிரோன். அவனது கிரணங்கள் வர்ண ஜாலங்களை வாரி இறைத்துக் கொண்டிருந்தன. மலை உச்சிகளின் மீதும், மரங்களின் மீதும் பளபளத்துக்கொண்டிருந்த அவன் கதிர்கள் மெல்ல மெல்ல ஒளி குன்ற ஆரம்பித்தன.

கதிரவன் மறைந்து விட்டான்! பக்ஷிகளின் கூக்குரல்கள் அடங்கி விட்டன! இருளின் ஆட்சி துவங்க ஆரம்பித்தது.

ரஞ்சினி இன்னும் தன் இருப்பிடத்தை விட்டு அசையவில்லை! மஞ்சள் வெய்யிலின் மந்தகாச வேளையில் சிந்தனை ரேகைகளுடன் அவள் நந்தவனத்தில் புகுந்தாள். இன்னும் ஆடாமல், அசையாமல் அப்படியே அமர்ந்திருந்தாள். அவள் அழகிய மலர் விழிகளின் கடையோரத்திலே இரண்டு சொட்டுக் கண்ணீர் திவலைகள்!

ரஞ்சினி ஒரு பெருமூச்சு விட்டாள்! அவள் இதயத்தின் வெம்மையையும், நெஞ்சின் குமுறல்களையும் இழுத்து வந்தது அது! அவள் உள்ளம் எரிமலையென கொந்தளித்துக் கொண்டிருந்தது. மகாராணியின் வார்த்தைகள் இன்னும் அவள் காதுகளில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. பிற்பகல் நடந்த சம்பவம் அவள் மனக் கண்ணில் திரைப்படமெனக் காட்சியளித்தது.

பாண்டியப் பேரரசர் குலசேகரப் பாண்டியர் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தார்! பாண்டிய அரசு பேரரசாக விரிந்திருந்த காலமது! சேர, சோழ நாடுகளும் பாண்டிய அரசிற்குள் அடங்கிக் கிடந்த காலமது! குலசேகரப் பாண்டியன் திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு திறம்பட அரசாண்டு வந்தார்! அவரின் அந்தியக் காலம் நெருங்கி விட்டது! நோய் வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்த அவரை அல்லும், பகலும் அன்புடன் கண்காணித்து வந்தாள் மகாராணி. மூத்த மகாராணியின் மறைவிற்குப் பின் இளையவளின் அதிகாரமே நிலைத்திருந்தது. அரண்மனையின் எத்தனை எத்தனையோ பணிப்பெண்களுக்குள் ஒருத்தி ரஞ்சினி என்று அவளை அலட்சியமாக எண்ணிவிட முடியாது! இறந்த மூத்த ராணியின் இனிய பணிப்பெண்! தனது எஜமானியின் மறைவிற்குப் பின் தன்னை எல்லோரும் அலட்சியப் படுத்துவதாக ஏனோ தோன்றியது ரஞ்சினிக்கு! அதை உறுதிப்படுத்துவது போன்று அன்று பிற்பகல் நடந்த நிகழ்ச்சியொன்று, நிரூபித்தது!

தந்தையைக் காண அவசரமாக வந்த சுந்திரபாண்டியன் (இளைய மகாராணியின் மைந்தன்) பக்குவமாகக் காய்ச்சிய பாலை எடுத்துக் கொண்டு வந்த ரஞ்சினியின் மேல் அவசரமாக மோதிக் கொண்டு விட்டான்! பாவை பாலை நழுவ விட்டாள்! சிதறிக் கிடந்த பாலாறைக் கண்டு திகைப்படைந்தனர் இருவருமே! ஆனல் சுந்திரபாண்டியனின் உள்ளம் குதிநடை போட்டது!

பல நாட்களாக அவன் கொண்டிருந்த ஆசை இன்று நிறைவேறி விட்டது! அரண்மனையில் அழகு நடை போட்டு வரும் ரஞ்சினியின் அழகு வதனத்தை ஆசை தீர நோக்கினன் அவன். மங்கையின் கன்னம் சிவந்தது! மதி வதனத்தில் மருட்சி கலந்த வண்ணக்கலவை பூசி நின்றது!

"மன்னித்துக்கொள்...ரஞ்சினி..." தடுமாற்றத்துடன் கூறினன் சுந்திரபாண்டியன்.

"பரவாயில்லை..."

—மேலே என்ன பேசுவது? இருவருக்குமே புரியவில்லை! நிமிடங்கள் மறைந்தன. கண்கள் கணத்திற்குக் கணம் ஒன்றை ஒன்று கவ்வின.

பிறகு...

சுந்திரபாண்டியன் போய் விட்டான் தன் தந்தையரைக் காண! சற்று முன் அவளைச் சந்தித்துத் தான் பேசியது

தாதிப்பெண் அரசு கட்டிலேறச் சூழ்ச்சி செய்தாள்; நாடே தவித்தது. இறுதியில்.........!

கனவா, நனவா என்பதை நிர்ணயிக்க முடியாதவளாய்த் தன் இன்ப நினைவுகளுடன் உறவாடிக் கொண்டிருந்தாள் ரஞ்சினி! கீழே சிதறிக் கிடந்த பால் கூறியது உண்மையென்று!

அப்போது...?

அங்கே வந்தாள் இளைய மகாராணி!

“ரஞ்சினி”—அவள் அழைப்பில் ஆத்திரம் தொனித்தது!

திடுக்கிட்டுத் திரும்பினாள் ரஞ்சினி!

“ரஞ்சினி, நீ ஒரு பணிப்பெண் என்பது நினைவிருக்கட்டும்!”

ரஞ்சினி திகைத்தாள் ஒரு கணம்! அவள் என்ன செய்து விட்டாள் இப்போது?

“மகாராணி...நான்...”

“அளவிற்கு மீறி ஆசை கொள்ளாதே என்பதை உனக்கு அறிவுறுத்த வந்தேன்! அரண்மனைத் தாதி நீ, அரச குடும்பத்தின் உறவு உனக்கு அவசியம் இல்லை என்பதைக் கூற வந்தேன்! முளையிலேயே இதைக் கிள்ளி எறிந்து விட வேண்டுமென்பதற்காகத் தான் முதல் படியிலேயே உன்னைத் தடுக்கிறேன், அடுத்த படிக்குத் தாவ வேண்டாமென்று!”

ரஞ்சினிக்கு ரோஷம் அளவுக்கு மீறிப் பொங்கியது! ‘அரண்மனைத் தாதி’ என்று அவள் அந்தஸ்தை மகாராணி சுட்டிக்காட்டிப் பேசியது அவள் உள்ளத்தைத் தொட்டது!

பேசாமல் அவ்விடத்தை விட்டகன்றாள் அவள்! நந்தவனத்தின் மென்காற்று அவள் கொதிக்கும் உள்ளத்திற்கு சாந்தியூட்ட முயன்றது!

ரஞ்சினி தனக்குள் புலம்பினாள்—

“அரண்மனைக்காரத் தாதி நான்! அதனால் அரசாளும் சிம்மாசனத்தில் அமரும் அருகதை எனக்குக் கிடையாதா? மகாராணி! நீ மட்டும் இந்த எச்சரிக்கையை விடுக்காமல் இருந்திருந்தால் நான் சுந்திரபாண்டியனுடன் சந்தித்த அச்சந்தர்ப்பத்தை அப்படி ஒன்றும் அல்லும், பகலும் எண்ணி உருகியிருக்கமாட்டேன்! ஆனால்... நீ எனக்கு அளித்துள்ள எச்சரிக்கை என் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு விட்டதடி! உன் எதிரில் உன் மைந்தனுடன் நான் மகாராணியாக வீற்றிருந்தால் அப்போது என்ன செய்வாய்? அரச குடும்பத்தின் உறவு கொள்ளக் கூடாது என்னைத் தடுத்தாயே நீ, நானே அரசியாக மாறி விட்டால் அப்போது என்ன செய்வாய்? நான் பட்டமகிஷியாக, உன் அன்பு மைந்தனின் ஆசைக்கரசியாக அரியாசனத்தில் வீற்றிருந்தால் அப்போது நீ என்ன செய்வாயடி, என்ன செய்வாய்? உன் ஆணை, உன் அதிகாரம் அப்போது என்னை என்ன செய்து விடும்! இந்த ரஞ்சினியின் வஞ்சம் வீண் போகாது! பாண்டியப் பேரரசின் பட்டத்து சிங்காதனம் எனக்கு இடமளித்தே தீரும்! அப்படியில்லையென்றால், இப்பேரரசே அழியும்! உன் வம்சம் நாசமாகும்! நலங்குலையும்! இந்த ரஞ்சினி நினைத்ததை நடத்தியே தீருவாள், நிச்சயமாய்!”

—தனக்குள் ஏதோ தீர்மானத்திற்கு வந்த அவள் மெதுவாக நந்தவனத்தை விட்டகன்றாள். அப்போது...

அவசரமாக வந்த மற்றொரு தாதி—

“ரஞ்சினி, உனக்கு விஷயம் தெரியுமா? குலசேகரப் பாண்டியர், நமது அரசர் காலமாகி விட்டார் இப்போது தான்”—என்றபோது...

ரஞ்சினியின் வதனம் மலர்ந்தது ஒரு கணம்!

* * *

மகாராணி சோர்ந்து போய் அமர்ந்திருந்தாள். நோய் வாய்ப்பட்டிருந்த கணவன் மறைந்து பல நாட்களாகி விட்டபோதும், அவள் முகத்திலே வேதனையின் வாட்டம் முற்றிலும் நீங்கவில்லை! அரண்மனையின் மாபெரும் பொறுப்புக்கள் அனைத்தும் அவள் தலை மீதே சுமத்தப்பட்டுக் கிடந்தன! கணவனின் பிரிவையும் லட்சியம் செய்யாமல் கடமையை வேறு காக்க வேண்டியிருந்தது அவளுக்கு!

அப்போது தான்...

புதிய பிரச்னை ஒன்று முளைத்திட்டதை உணர்ந்தாள் அவள்! சற்று முன் அவளைச் சந்தித்துவிட்டுப் போன சுந்திரபான்டியனும், அவன் தம்பி (மூத்த மகாராணியின் மைந்தன்) வீரபாண்டியனும் பேசிய பேச்சைக் கேட்டுத் திகைத்து நின்று விட்டாள் அவள்!

"மகாராஜாவின் முதல் மனைவியின் பிள்ளை நான். எனவே வயதில் இளைய வனாக இருந்தாலும், எனக்குத்தான் உரிமை, பட்டத்துக்கு அரசனாக மாற!"

—என்று வீர பாண்டியன் கர்ஜித் தான்.

"கிடையாது, இளைய மனைவியின் மகனாக நான் பிறந்தாலும், முதலில் பிறந்தவன் நான், எனவே எனக்குத் தான் முதல் உரிமை!"

—சுந்திரபாண்டியன் கூவினான்!

மகாராணிக்குத் தலை சுற்றியது!

ஒரே தாய் வயிற்றில் பிறந்துவிட்ட பிள்ளைகளைப்போல் தோளோடு தோள் நின்ற அந்த இரு வாலிபர் களுக்கும் இன்று ஏன் இத்தனை மோகம் அரசுரிமையின் மீது!

'தம்பிக்குப் பட்டம் கட்டி விடு'— என்று சொன்ன அவள் பிள்ளை இன்று ஏன் இப்படிப் பேசுகிறான்?

'அண்ணாவிற்குத் தான் அரசுரிமை' —என்று அன்று அன்புடன் கூறிய வீர பாண்டியன் ஏன் இப்படி வீணில் குமைகிறான்?

விளக்கம் தேட முயன்றாள் மகா ராணி. முடியவில்லை அவளால்.

இறந்த தன் கணவனின் படத்தின் முன் நின்று கண்ணீர் சிந்தத்தான் முடிந்தது அவளால்.

'பிரபோ, இது என்ன வேதனை? அன்புக் கயிற்றால் பிணைக்கப்பட்ட தங்கள் மக்கள் இன்று ஆத்திரத்திற் கும், ஆசைக்கும் அடிமையாகி விட்டார் களே. என் பிள்ளைபோல் எண்ணி வளர்த்து வந்த வீர பாண்டியன் இன்று என்னை எதிர்த்துப் பேசு கிறானே ஸ்வாமி. இதையெல்லாம் நான் காண வேண்டித்தான் என்னைத் தனியே விட்டு விட்டுத் தாங்கள் மட்டும் போய் விட்டீர்களா? இவர் கள் இருவருமே அரசாளுவதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால்...அவர்களிடையே சுரந்து வந்த அன்பு வற்றி விட்டதே பிரபோ, வற்றி விட்டதே!'

—மகாராணி கண்ணீர் சிந்தினாள். மறைவிடத்திலிருந்து இதைப் பார்த்த ரஞ்சினி மகிழ்ச்சியடைந்தாள்.

'மகாராணி, நீ தனியே கண்ணீர் விட்டது போதாது, என் எதிரில் மண்டியிட்டுக் கண்ணீர் வடித்து உன் பிள்ளைகளுக்காகக் கதறியழ வேண் டும். அன்று தான் என் உள்ளம் அமைதி பெறும்!'

தனக்குள் சிரித்துக் கொண்டாள் ரஞ்சினி.

ஆம்; ரஞ்சினி வைத்த வினை தான், அண்ணனையும் தம்பியையும் தனித் தனியே பிரித்தது.

அழகு ராணியான அவளின் மீது மோகம் கொண்ட அந்த இரு வீர இளைஞர்களும் அவள் அன்புக்கட்ட ளைக்கு அடி பணிந்தனர். அவர்கள் இருவரையும் தனித்தனியே சந்தித்து அன்பு மொழிகளை அள்ளி வீசிய ரஞ்சினி ஒரு கட்டளை பிறப்பித்திருந் தாள்.

அதுதான்...

'பட்டத்து அரசனாக மாற யாருக்கு உரிமை உண்டோ, அவன் மனைவி தான் ரஞ்சினி'—

ரஞ்சினி பிறப்பித்த கட்டளை சகோ தரர்களைப் பிரித்தது. அன்பால் ஒன்றுபட்ட இதயங்களை அறுத்தெறிந் தது.

மங்கையின் காதலில் மையல் கொண்டு விட்ட இளவரசர்கள் எப்படி யாவது அரசுரிமை பெற்று விட ஆவே சம் கொண்டு விட்டனர். இனி என்ன நடக்கும் என்பதைப் பலவாறாகச் சிந்தித்த ரஞ்சினி, கண்ணீர்த்துளி களுடன் காட்சி தந்த மகாராணியைக் கண்டு விட்ட மகிழ்ச்சியுடன் தன் இருப்பிடத்தை அடைந்தாள்.

* * *

சுந்திரபாண்டியா! உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா? பண்பை இழந்து விட்டாயா? படை யெடுக்கக் கிளம்பி விட்டாயே தம்பி மீது? சரியா இது? வேண்டாம் மகனே, வேண்டாம்! வீண் ஆசைக்கு இடமளிக்காதே! விபரீதமாகி விடும் மைந்தா!"

சுந்திரபாண்டியன் குறுக்கிட்டான்.

"வீர பாண்டியன் படையெடுத்துக் கோட்டை வாசலில் வந்து நிற்கும் போது என்னைக் கைகளைக் கட்டிக் கொண்டு நிற்கச் சொல்கிறாயா? முடி யாதம்மா முடியாது! அவனுக்கு எவ் விதத்திலும் சளைத்தவன் நான் இல்லை! போரிட்டே தீருவேன்! போர்க்களம்

பதில்சொல்லட்டும் யாருக்கு உரிமை என்று?''

மகாராணி கலங்கி நின்றாள், செய்வ தறியாமல்! கிளம்பி விட்ட போரை நிறுத்தும் வழி தெரியாமல் திகைத்து நின்று விட்டாள்.

'உச்ச நிலையில் உருவாகி நிற்கும் பாண்டிய அரசு உட்பகையால் பாழ் பட்டுச்சிதைந்து விட்டால்...சமயத்தை எதிர் நோக்கி நிற்கும் சேர, சோழ அர சர்கள் துளிர்த்து விடுவார்களே! குல சேகரன் ஸ்தாபித்த பாண்டிய மண்ட லம் குலைந்து விடுமே!'

—மகாராணி மனதில் கதறினாள்! மைந்தன் கேட்கவில்லை!

"போருக்குக் கிளம்பி விட்டேன், போக விடை தா"—என்று கூறித் தன் எதிரே சிரம் தாழ்த்தி நின்ற மகனை வேதனையுடன் பார்த்தாள் அவள். பனிப் படலத்தின் வெளியே மங்கலா கத் தெரிந்தது அவன் உருவம்.

"எப்படியடா ஆசி கூறி அனுப்பு வேன் சுந்திரா? ஒரு கொடியில் உதித்த இரு மலர்களில் எதை வாழ்க வெனப் போற்றுவேன்? எதை வீழ்க வெனத் தூற்றுவேன்? நீ வாழ வேண்டி உன் தந்தையின் இரத்தம் ஓடும் வீர பாண்டியனுக்குச் சாபமிடு வேனா? அவன் வாழ, என் வயிற்றில் மண் வீழ நான் வேண்டிக் கொள் வேனா? என்னடா செய்வேன் நான்''—

செய்வதறியாமல் கதறினாள் மகா ராணி! இரக்க இதயம் படைத்தவர் கள் அத்தனை பேரும் அரை வினாடி கலங்கித்தான் நின்றனர்.

கடைசியில்...

நெற்றியில் வீரத்திலகமிட்டு, ஆரத்தி எடுத்து மைந்தனை வழி அனுப்பிய மகாராணி மயக்கமடைந்து மஞ்சத்தில் வீழ்ந்து விட்டாள். கோபத்துடன் கிளம்பி விட்டான் சுந்திரபாண்டியன்.

வெண் புரவியோடும் ரதத்தைத் தானே செலுத்தியவாறு, மார்பிலே வீரக்கவசம் பூண்டு, மதிவதனத்திலே மங்காத கோபக்கனலோடு, வேலும் வாளும் தாங்கிய வீரர்கள் புடை சூழ போர்க்களம் நோக்கிப் புறப்பட்டான்!

போர்! வீரப் போர்! நாட்டிற்காகச் சண்டை போட்டு நாசகார வாழ்விற்கு அஸ்திவாரக்கல் நாட்டித் தரும் போர்!

அண்ணனும், தம்பியும் ரணகளத் திலே மோதிக் கொண்டார்கள், நெடு நாள் வைரிபோல!

அப்பப்பா! இந்தப் பெண்ணின் கண்வீச்சிற்குத்தான் எத்துணை மகிமை! அன்பை ஆக்குவதும், அழிப் பதும் அவர்கள் அகன்ற மலர் விழி களின் வீச்சுக்கள் செய்யுமே! ரஞ்சினி யின் காதலுக்கு அடிமையான இள வரசர்கள் தங்கள், தங்கள் நிலைமறந்து, நாட்டின் நலன் மறந்து, நன்மையான வழி மறந்து ரணகளத்திலே குதித்து விட்டனர்.

பலன்...?

வீர பாண்டியனுக்கு வெற்றி. சுந்திரபாண்டியன் ஓடி விட்டான். வீர பாண்டியனின் வெற்றியைப் பற்றி யும் ரஞ்சினி நெஞ்சம் எண்ணி விம்ம வில்லை. சுந்திரபாண்டியனின் தோல் வியைப் பற்றியும் அவள் அக்கறை காட்டவில்லை. அவள் எண்ணமெ லாம் ஒன்றே ஒன்று தான். அது தான்....

மகாராணி அவளிடம் மன்னிப்புக் கேட்கும் கட்டம். ரஞ்சினி தன் எண்ணக் குவியல்களுடன் தன்னந் தனியே உறவாடிக் கொண்டிருந்த அதே சமயம்—

சுந்திர பாண்டியனுக்கும், அவன் தாயாருக்கும் இடையே பலத்த வாக்கு வாதம் நடந்து கொண்டிருந்தது,

தோற்று விட்ட சுந்திர பாண்டியன், வெற்றியை எப்படியாவது கண்டு விடும் எண்ணத்துடன், தான் காத லித்தவளைத் தன் தம்பி கைப்பற்று வதா என்ற ஆத்திரத்துடன் டெல்லி சுல்தானின் தளபதியான மாலிக் காபூரை உதவிக்கு அழைக்கப் போகி றானாம்!

செய்தி கேட்ட மகாராணி இடி யோசை கேட்ட நாகம்போல் திகைத்து நின்றாள்.

அயலானை நாட்டிற்கு அழைத்து நாடும், மக்களும் நாசமாவதா? மாற் றானை நம்பி மனைக்கு அழைக்கலாமா? எல்லோருக்கும் அதனால் மரண மல்லவா நேரிடும்? வீர பாண்டியன் ஆண்டால் பாண்டிய வம்சமாவது நிலைத்து நிற்கும்! மாற்றானுக்கு வர வழி காட்டி விட்டால் அரச வம்சமே அல்லவா அடியோடு அற்றுப்போகும்?

ஆயிரம் முறை மன்ருடினுள் மகாராணி.

—கடைசியாக மைந்தன் கூறியது மகாராணிக்கு விளங்கவில்லை.

விளக்கம் கேட்டபோது எல்லாமே விளங்கி விட்டது, ஆதியோடு அந்தமாக.

இளைஞர்களின் இதயத்திலே நஞ்சை வஞ்சகமாகத் திணித்தது ரஞ்சினி தானு?

இத்தனைக் குழப்பங்களுக்கும் சூத்திரதாரி அவள்தானு?

'அடி பேதைப் பெண்ணே, உன் வஞ்சம் உன்னையே அழித்து விடப் போகிறது!'

மகனிடத்தில் இனிப் பேசிப் பயன் இல்லை என்பதை உணர்ந்துகொண்ட மகாராணி ரஞ்சினியைத் தேடிப் போனுள்.

தன் கற்பனைக் கடலில் மூழ்கிக் கிடந்த அவளை மகாராணியின் குரல் தட்டியெழுப்பியது.

அரசியைக் கண்ட அவள் அகம் மலர்ந்தது என்ருலும், தன் உணர்ச்சிகளை முகத்தில் காட்டவில்லை. அலட்சியமாக அமர்ந்திருந்தாள், வந்தவளை 'வா' என்று கூட அழைக்காமல்.

"ரஞ்சினி"—

"ஓ நீங்களா?"

"வினையை விதைத்திருக்கிருய் நீ, தினை அறுத்துவிட முடியாது"

அலட்சியமாகச் சிரித்தாள் ரஞ்சினி.

"உபதேசம் கேட்டுக்கொள்ள நான் உங்கள் அரண்மனைத் தாதியல்ல. பேரரசர் வீர பாண்டியரின் மனைவியாகப் போகிறவள், நிதானித்துப் பேசுங்கள்."

மகாராணி அடக்கமாகச் சிரித்தாள்.

"புரிந்துகொண்டேன் ரஞ்சினி உன் போக்கை. ஆனுல்...நீ செய்வது நல்லதல்ல. வீணுக இளவரசர்களைப் பிரிக்காதே. முன்போல அன்புள்ளத்துடன் அரண்மனைத் தாதியாக உலாவி வா. நீ விரும்பியது தருகிறேன். இந்த ஊரை விட்டே போய் விடு. உன்னுல் வீசும் புயல் அடங்கட்டும். சொல்வதைக் கேள்"—மகாராணியின் குரல் தழதழத்தது.

"நான் விரும்புவது என்ன தெரியுமா? என் கால்களைப் பிடித்து நீங்கள் மன்னிப்புக் கேட்ட வேண்டும், கண்ணீர் விட்டுக் கதறியழ வேண்டும்!"

கோபத்துடன் நிமிர்ந்து பார்த்தாள் மகாராணி ரஞ்சினியை! பெண்ணுகத் தெரியவில்லை அவளைப் பார்த்தால்! பலி வாங்கக்காத்து நிற்கும் பேயாகத் தெரிந்தாள்!

"நல்லது, ரஞ்சினி நல்லது! அகங்காரத்திற்கு அடிமையாகி விட்ட உன்னைத் திருத்த முடியாது! ஆனுல்...புலி பசித்தாலும் புல்லைத் தின்னுது. புரிந்து கொள்! நான் உன் காலடியில் கிடக்க மாட்டேன்! ஆனுல் நீதான் என்ருவது உன் கண்ணீரால் என் கால்களைக் கழுவ வேண்டும்! நினைவிருக்கட்டும்"

—மகாராணி போய்விட்டாள். ரஞ்சினி சிரித்தாள்! சிரித்துக் கொண்டே இருந்தாள்.

* * *

மாலிக்காபூரை அழைத்து வந்துவிட்டான் சுந்திர பாண்டியன். சுரண்ட வந்த சோற்றுக் காவடிக்குத் தங்கச் சுரங்கம் கிடைத்தது! சுந்திர பாண்டியனின் தயவால் மதுரை வந்தடைந்த அந்த முகமதியன் ஊர் வளத்தைக் கண்டு பேராசைக் கண்களை அகல விரித்தான். போர் தொடுத்தான் வீர பாண்டியன் மீது சுந்திர பாண்டியன். மாலிக்காபூரின் படை பலத்தின் உதவியால் தோல்வி அடைந்து ஓடி விட்டான் வீரபாண்டியன். சுந்திர பாண்டியன் கொக்கரித்தான்! ஆனுல்...?

அவன் சிரிப்பு அடங்கு முன்னரே மாலிக்காபூர் பல வேலைகளைச் செய்து விட்டான். தம்பியைக் காட்டிக் கொடுத்த அண்ணன் தன்னை மட்டும் காட்டிக் கொடுக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்? எனவே...?

சுந்திர பாண்டியனை சிறையில் வைத்தான் மாலிக்காபூர். தம்பிக்குத்துரோக மிழைத்த தனயனுக்கு ஏற்றதண்டனை. அரண்மனைச் செல்வம் ஊர் மக்களின் செல்வம் அனைத்தும் பறி போயின. மக்களின் பொன், மணி, நவரத்தினம் இவைகளைத் தவிர, மாந்தர் பலரின் அரிய பொக்கிஷமான கற்பும் சூறையாடப்பட்டது அந்தக் கூட்டத்தினரால்.

அரண்மனை அலங்கோலமடைந்தது. பெண்கள் தங்கள் தங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள மார்க்கங்கள் தேடி அலைந்தனர்.

மாலிக்காபூர் அடித்த கொள்ளை, மண்ணிலே எவரும் கண்டிராத கொள்ளை! அந்த வெறியனின் கண்களில் ரஞ்சினி மட்டும் சிக்காமல் இருப்பாளா? தான் விரித்த வலையிலேயே வீழ்ந்து விட்டது மான்.

அழகு ரோஜாலவைக் கசக்கிப் பார்த்து ருசி கண்டவன் மாலிக்காபூர்! அதன் மென்மையை அவனால் அறிந்துகொள்ள முடியாது, கண்ணால் கண்டு!

பலன்...?

மாலிக்காபூரின் கைப்பிடியிலே சிக்கிய ரஞ்சினி தன் கற்பைக் காப்பாற்றிக் கொள்ளும் வகை தெரியாமல் 'ஐயோ'வெனக் கதறினாள் அப்போது...?

எங்கிருந்தோ வந்த கத்தி மாலிக்காபூரின் கைகளில் குத்திட்டு நின்றது! வலி தாங்க முடியாத அவன் 'அரே' என்று கதறிய வண்ணம் ரஞ்சினியை விட்டு விட்டான். தப்பிக்க வழி தேடி நின்ற சிட்டுப் பறந்தது. ஆனால்...? கத்தி வந்த இடத்திலிருந்து மகாராணி சோர்வடைந்து நடந்து வந்து கொண்டிருந்தாள்.

பஞ்சாகப் பறந்து கொண்டிருந்த ரஞ்சினியின் கால்கள் நின்றன.

அப்படியானால்...அவளைக் காப்பாற்றியது...மகாராணியார் தானா? மேலே ஓட முடியவில்லை அவளால்.

"ராணி"—கதறிக் கொண்டு அவள் காலடியில் வீழ்ந்தாள் அவள்.

"ராணி... பாவத்தின் இருப்பிடம்... வஞ்சத்தின் பிறப்பிடம், பெண்களுக்குரிய மிருதுவான தன்மையை இழந்து விட்ட இந்த ராட்சசியான என்னிடம், உங்கள் குலத்தை அழிக்கப் புறப்பட்ட இந்தக் கொடிய நயவஞ்சகியிடம் உங்களுக்கு இத்தனை அன்பா ராணி? ஐயோ, மாணிக்கத்தின் மதிப்பை உணர்ந்து கொள்ள முடியாத மட்டியாக இருந்து விட்டேனே நான்! எனக்கு மன்னிப்பே கிடையாதா தேவீ?" தன் பாவ எண்ணங்களைக் கண்ணீரில் கரைத்த வண்ணம் கதறினாள் ரஞ்சினி.

"அரே, அந்த ரெண்டு பொம்பளையும் பிடி"-என்றான் மாலிக்காபூர் இரத்தம் கொட்டும் தனது கையைப் பிடித்தவாறு "வாருங்கள் ஓடலாம் ராணி"-ரஞ்சினி துரிதப்படுத்தினாள்.

மகாராணி சிரித்தாள். அணையும் விளக்கின் அந்திமச் சிரிப்புப் போன்று சுடர் விட்டது அச் சிரிப்பு.

"நான் தப்பித்து இனிப் பயன் இல்லை ரஞ்சினி, நீ தப்பித்துக் கொள். சிறையில் கிடந்த சுந்திர பாண்டியனைத் தந்திரமாகச் சிறை மீட்டு விட்டேன். ஆனால்...நடுவில் இந்த முகமதியனின் ஆட்களின் பரிசு என் வயிற்றில் புகுந்து விட்டது. கத்திக்குத்துடன் குற்றுயிராக நான் வந்து கொண்டிருந்த போது தான் உன் பரிதாபமான ஓலம் கேட்டது. நீ எவ்வளவு தான் கொடியவளாக இருந்தாலும், ஒரு பெண்ணின் கற்புப் பறிபோவதை மற்றொரு பெண்ணால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே என் கை குத்துவாள் பறந்தது. நான் இன்னும் சில விநாடிகளில் இறந்து விடுவேன்...நீ...தப்பித்துக் கொள்...இனியாவது...சகோதரர்கள் நாட்டை நலமுடன் ஆள... வழி...செய்...போ"—

மகாராணியின் தலை சாய்ந்தது.

"ஐயோ, தேவி"—கதறினாள் ரஞ்சினி. அவள் கண்ணீர் மகாராணியின் காலைக் கழுவியது. அதே சமயம்—

மாலிக்காபூரின் ஆட்கள் பலர் ரஞ்சினியைச் சூழ்ந்து கொண்டனர்!

மறு நாள்......—

அண்ணனும், தம்பியும் மனம் திருந்தி ஒன்றுபட்ட உள்ளத்துடன், ஒற்றுமை உணர்ச்சியுடன் தங்கள் இருப்பிடம் வந்து பார்த்தபோது...?

மாலிக்காபூரின் கொள்ளையால் அலங்கோலமாகிக் கிடந்த அவர்களின் அரண்மனையின் ஒரு பகுதியிலே இரண்டு பிணங்கள் கிடந்தன!

ஒரு பிணத்தின் ஆடைகள் அலங்கோலமாகிக்கிடந்தன!

"ரஞ்சினி"—இருவரும் முணுமுணுத்தனர்! நடந்தது இன்னதென்று ஊகிக்க வெகு நேரமாகவில்லை இருவருக்கும். தாங்கள் காதலித்த தோஷத்திற்காக ரஞ்சினியின் ஆடைகளைச் சரிப்படுத்திய அந்த இளவரசர்கள் தாங்கள் செய்த தவறிற்காக இறந்த தங்கள் தாயின் சடலத்தின் எதிரே மண்டியிட்டு மானசிக மன்னிப்பும் கேட்டுக் கொண்டனர். ★

புதுமை

சந்தா விகிதம்

தனிப்பிரதி 25 ந.பை.

6 மாதச் சந்தா ரூ. 1-50

வருடச் சந்தா ரூ. 3-00

மக்கள் விரும்பும்

ராமகிருஷ்ண

பீடிகள்

197700

P.R. ஆறுமுக நாடார் & சன்ஸ்

முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா.